उच्चारयति कल्याणीं
वाचं हृदयहारिणीम्



உச்சாரயதி கல்யாணீம்
வாசம் ஹ்ருதயஹாரிணீம்

பொருளடக்கம்

1) உச்சாரயதி கல்யாணீம் வாசம் ஹ்ருதய ஹாரிணீம் 2

2) உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி 10

3) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு 16

4) மருவுக மாசற்றார் கேண்மை 24

5) ராமனைக் கண்டால் க்ஷேமம் உண்டாகும் 29

6) ததத்புதம் ராகவ கர்ம துஷ்கரம் 35

7) குரு என்கிற மாலுமி, பகவத் அனுக்ரஹம் என்கிற அனுகூல காற்று 41

8) ராமேதி மதுராம் வாணீம்; ஸீதேதி மதுராம் வாணீம் 51

9) வால்மீகி ராமாயணத்தில் ஜோதிஷம் 55

10) பதகமலஸேவாம்ருதரஸம் அஹம் கதா லப்ஸ்யே? 64

11) சபர்யா பூஜித: ஸம்யக் 69

12) ஆதித்ய ஹ்ருதயம் ஸ்தோத்ர மகிமை 76

13) விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத்ர மஹிமை 83

14) ஸ்ரீராம ஜனனம் ஸ்லோகங்கள் 89

<u>உச்சாரயதி கல்யாணீம் வாசம் ஹ்ருதய ஹாரிணீம்</u>

இன்னிக்கி வால்மீகி ராமாயணத்துல, முதல் முதல்ல ஹனுமார் ராமரைப் பார்த்து பேசின அந்த காட்சியை சொல்றேன்னு சொல்லிருந்தேன், ரொம்ப அழகான ஒரு காட்சி. இதற்கு முந்தைய காட்சிகளில், ராமருக்கு, கஷ்டத்துக்கு மேல கஷ்டம் வரது. சீதாதேவியை தொலைச்சு, ஜடாயுவை சம்ஸ்காரம் பண்ணிட்டு, ஒரு கபந்தத்துக்கிட்ட போய் மாட்டிக்கிறா. அது அவாளை சாப்பிட

போறது. அப்பறம் எதோ ஒரு தைரியத்துல அதன் கைகள வெட்டி அப்பறம் அதன் உடம்பை எரிச்ச உடன், அந்த கபந்தத்துக்கு சாபத்திலேருந்து விமோசனம் கிடைச்சு, தனுன்னு ஒரு கந்தர்வனாகிறது. அந்த கந்தர்வன் “நீங்க போய் ரிஷ்யமூக மலைன்னு ஒரு மலை இருக்கு, பம்பாங்ர ஏரி கரையில, அந்த மலைல சுக்ரிவன்னு ஒரு வானரன் இருக்கான், அவனோட போய் ஸக்யம் பண்ணிக்கோங்கோ, அவன், சீதாதேவிய கண்டு பிடிக்கறதுக்கு உங்களுக்கு ஸஹாயம் பண்ணுவான்” னு சொல்லிட்டு, அந்த தனுங்கற கந்தர்வன் ஒரு விமானத்துல ஏறி ஆகாசத்துல போயிடறான்.

அப்பறம் இவா சுக்ரீவன் எங்கயிருக்கான், ரிஷ்யமூகமலை எங்கயிருக்கு னு தேடிண்டு வந்துண்டிருக்கா, இதுவரைக்கும் ஒரே சோகம் தான். இந்த ஹனுமார் enterஆனாவுடனே முதல் முதல்ல ஒரு relief. அதுலேர்ந்து ஏத்தம்தான், காவியத்துல. மேலும், மேலும் ராமருக்கு நன்மைகள் ஏற்படறது, சந்தோஷம் ஏற்படறது, அந்த மாதிரி ஹனுமார் வந்துட்டாலே படிக்கிறவாளுக்கு ஒரு உத்ஸாகம்.

அந்த ஹனுமார் enter பண்ற காட்சி எப்படின்னா, ராமர் சீதாதேவியை பிரிஞ்சு புலம்பிண்டே வறார். அந்த பம்பா ஏரி கரைக்கு வந்த போது, ரொம்ப அழகாயிருக்கு அந்த இடம், பலவிதமான வண்ண மலர்களெல்லாம், பூத்து குலுங்கக்கூடிய மரங்கள் நிரம்பியிருக்கு அந்த காடு. வசந்த காலம் வந்துடுத்து, எல்லா பக்ஷிகளும், மிருகங்களும் ஜோடி ஜோடியா சந்தோஷமா இருக்கு. ராமர் இதைப் பார்த்துட்டு, “இந்த மயில்களும், மான்களும், வானரங்களும், குயில்களும் எல்லாம் ஜோடியோட இணையோட சந்தோஷமா இருக்கே, நான் மட்டும் என் சீதையை பிரிஞ்சு தவிக்கிறேனே”, அப்படினு புலம்பறார், அந்த மாதிரி சொல்லிண்டு வரும் போது, “அஹோ காமஸ்ய வாமத்வம்” இந்த காமத்தோட விசித்திர போக்கு எப்படியிருக்குன்னா, இவளை பிரிஞ்சு நாளாக நாளாக, இவளைப் பத்தின ஏக்கம் ஜாஸ்தியாய்ண்டே போறது. இது ஒரு விநோதமாக இருக்கே” அப்படின்னுலாம் பேசறார்.

அப்ப, லக்ஷ்மணன் சமாதானம் சொல்றான் “அண்ணா நீங்க இவ்வளோ Depress ஆகதேங்கோ, தளர்ந்து போயிடாதீங்கோ. எதுவானாலும் உத்ஸாகம்

வேணும், அபாரமான எதிரியா இருக்கான் இந்த ராவணங்கறவ்ன், அவன் யாருன்னு தெரிஞ்சிண்டு, அவனோட யுத்தம் பண்ணி சீதாதேவியை மீட்கணும், அதனால உத்ஸாகம் இருந்தா தான் எதுவும் பண்ணமுடியும், அதனால, நீங்க, மனத் தளர்ச்சி அடையாதேங்கோ" அப்படின்னு சொன்ன உடனே ராமர் "சரிப்பா"ன்னு, அவர் கொஞ்சம் சுதாரிக்கறார்.

அப்போ அங்க மலை மேலேர்ந்து சுக்ரீவன் இவாளை பார்க்கறான். லக்ஷ்மணர் ராமரரை protect பண்ணி, அழைச்சிண்டு வந்துண்டுருக்கார். இவா ரெண்டு பேரையும் பாத்தாலே எட்டடிக்கு ஆஜானுபாஹுவாக கையில பெரிய வில்லும், முதுகுல அம்புறாத் தூணியில, ஸர்பங்களை போன்ற பாணங்களை வெச்சிண்டு, இவா வருவதை பார்த்தவுடன், சுக்ரீவன் நடுங்கி போயிடறான். மலையின் ஒரு சிகரத்துலேர்ந்து இன்னொரு சிகரத்துக்கு தாவி குதிச்சு ஓடறான். ஹனுமார் பின்னாடி ஓடறார் "என்ன? என்ன? பயப்படரே?" என்று கேட்கிறார். சுக்ரீவன் "அவாளை பாத்தாலே உனக்கு பயமாயில்லையா?" என்கிறான். "நீ யாரைப் பார்த்தாலும் பயப்படுவியா?"ன்னு கேட்கறார் ஹனுமார். "நீ ராஜா ஆகணும்னு ஆசைப் படற! வாலி வந்தா பயப்படணும், யாரைப் பார்த்தாலும் பயப்படறியே" அப்படின்னு கேட்கறார், அப்போ சுக்ரீவன் "இல்லை, இவா வாலி அனுப்பிச்ச ஆட்களா இருப்பாளோ, அப்படினு நெனைச்சு பயப்படறேன்" அப்படிங்கிறான். அப்பறம், சுக்ரீவன் சொல்றான், "உனக்கு அப்போ தைரியம் இருக்கு போலிருக்கு, நீ போய், இவா யாருன்னு பாத்து பேசி, நல்லவளாயிருந்தா, என்கிட்ட அழைச்சிண்டுவா" அப்படினு சொல்றான். "நீ பிக்ஷு ரூபத்துல போ" அப்படினு சொல்றான்.

ஹனுமார் சுக்ரீவனோட மந்த்ரி, சரின்னு அவன் சொன்னதை கேட்டுண்டு பிக்ஷு ரூபத்துல போய், ராம லக்ஷ்மணாள பாத்து, ரொம்ப விநயமா நமஸ்காரம் பண்ணி, "நீங்க ரெண்டு பேரும் யாரு? உங்கள பாத்தா, ராஜகுமாரர்கள் மாதிரி இருக்கேள், ஆனா, மரவுரி, மான்தோல், ஜடாமுடி போட்டுண்டு ரிஷிகளைப் போலவும் தெரிகிறீர்கள். நீங்க எங்க இங்க இந்த காட்டுக்கு வந்தேள்? உங்க ரெண்டு பேரையும் பார்த்தா சந்தரசூர்யர்களே, பூமிக்கு இறங்கி வந்தா மாதிரி அவ்வளவு தேஜஸா இருக்கேள், உங்களுடைய

ஒளியினால் இந்த மலையே ஒளிவிடறது. உங்களுடைய அழகு இந்த பம்பா ஏரியில பிரதிபலிக்கறது", அப்படினு ஹனுமார் ரொம்ப அழகான வார்த்தைகள் சொல்றார்.

இந்த ஹனுமார் பேசின அழகு வந்து, அவர் பேசின வார்த்தைகள்ல மட்டும் இல்லை. ராமர் அதைக் கேட்ட பின்ன அந்த பேச்சைஅப்படி கொண்டாறார். "என்னமா பேசறான்! என்ன அழகா பேசறான்", அப்படின்னு கொண்டாடுவதை வெச்சிண்டு பார்த்தால், இந்த ஹனுமார் பேசின வார்த்தைகள்ல மட்டும் அழகில்லை. அவர் பேசின விதத்துல தான் அந்த அழகேயிருக்கு, அப்படிங்கிறது தெரியறது. எனக்கு வந்து இது மஹாபெரியவா பேச்சு போலேயும், ஸ்வாமிகள் ராமாயணம் சொல்றது போலயும், ஸ்லோகங்களை படிக்கறது மாதிரி இருந்திருக்கும் னு தோணறது. அந்த மாதிரி, இனிமைனா எனக்கு அது தான் ஞாபகம் வறது.

அந்த சொன்ன விஷயங்கள்ல ரொம்ப அழகா இருக்கறது ஒண்ணு வந்து, "நீங்க ரெண்டுபேரும் சிம்மத்தைபோல தேஜஸோட இருக்கிறீர்கள், நீங்க ரிஷபத்தைப் போல நடந்து வருகிறீர்கள்", அப்படின்னுல்லாம் சொல்லி ஸ்தோத்ரம் பண்ணிட்டு, அப்பறம், ஹனுமார், "ஏதோ தேடிண்டே வரேளே, ஏதாவது தொலைச்சிட்டு தேடரேளா?" அப்படின்னு கேக்கறார். அப்படி keen observation. இதுக்கு நடுவுல ஒண்ணு சொல்றார்,

आयताश्च सुवृत्ताश्च बाहवः परिघोपमाः ।

सर्वभूषणभूषार्हाः किमर्थं न विभूषिताः ।।

"ஆயாதாஸ்ச ஸுவ்ருத்தாஸ்ச பாஹவஹ பரிகோபமாஹா" உங்களுடைய கைகள், நீளமா இருக்கு, ரொம்ப பருமனாக இருக்கு, ரொம்ப weightஆ இருக்கு , நல்ல பலசாலிகளோட, மல்லர்களோட கைகள் மாதிரி இருக்கு, இரும்பு போல இருக்கு உங்களுடைய கைகள், உங்களுடைய தோள்கள் "ஸர்வ பூஷண பூஷார்ஹாஹா கிமர்த்தம் ந விபூஷிதஹா" உங்களுடைய தோள்கள் தங்க ஆபரணங்களும் மாலைகளும் போட்டும் அலங்காரம் பண்ணணும், அவ்வளோ அழகாயிருக்கு உங்க தோள்கள், "உபௌ யோக்யவ் அஹம் மன்யே, ரக்ஷிதும் ப்ரித்திவீம் இமாம்" இந்த பூமியையே உங்களோட கைகளும், தோள்களும்,

காப்பாத்தும் என்று நான் நம்புகிறேன். இந்த தோள்கள் ஏன் அலங்காரம் இல்லாம இருக்கு? ஏன் நீங்க, ரிஷிகள போல, யோகிகளைப் போல வந்துண்டுஇருக்கேள்? அப்படினு கேட்கறார், அப்பறம், அவர் வேஷம் போட்டுண்டு வந்தாலும், ராமனை பார்த்த உடனே, ராமனுக்கு பக்தன் ஆயிடறார், ராமதாஸன் ஆயிடறார். அதே மாதிரி, இலங்கையில் சீதாதேவியை பார்த்த உடனெ அவளை பணிஞ்சு அவளுக்கு பக்தன் ஆயிடறார், அந்த மாதிரி இங்க ராமர் கிட்டே, "சுக்ரீவன் எங்கிற வானர ராஜா, இந்த ரிஷ்யமூக மலைல இருக்கான், நான் அவனுடைய மந்த்ரி, அவன் என்னை வேஷம் போட்டுண்டு போன்னு சொன்னதுனால, நான் இப்படி ஒரு வேஷத்துல வந்துருக்கேன், நான் ஒரு வானரம்" அப்படினு சொல்லிட்றார்

இந்த "ஸர்வ பூஷண பூஷார்ஹாஹா கிமர்த்தம் நீ விபூஷிதஹா"

இந்த உலகத்தையே கட்டி ஆளக் கூடிய அளவுக்கு, பலம் பொருந்திய உங்களுடைய, கைகளும், தோள்களும், ஏன் எந்த ராஜ அலங்காரங்களும் இல்லாமல், ஒரு மாலைகளோ, தங்க ஆபரணங்களோ, இல்லாமல் இருக்கு? ஏன் நீங்க ரிஷிகளைப் போல, இருக்கேள்? அப்படீன்னு ஹனுமார் கேட்கறார். இதை, அந்த காலத்துல ரொம்ப ரசிப்பாளாம். இந்த உபன்யாசம் பண்றவாளுக்கு, ஒரு மாலை போடுவா. ஸ்வாமிக்கு ராமர் படத்துக்கு ஒரு மாலை போடுவா. அப்புறம் கொண்டு வந்த மாலை எல்லாம் உபன்யாசகருக்குப் போடப் பார்த்தா, அவர் சொல்வாராம். அங்க ராமர், இருக்கார், அவருக்கு தான், "ஸர்வ பூஷண பூஷார்ஹாஹா" எல்லா, பூஷணங்களையும், ராமருக்குதான், நாம போட்டுப் பார்க்கணும், அவர்தான், அதுக்கு தகுதியானவர், அதனால், சுவாமிக்குப் போடுங்கோ, அப்படீன்னு, சொல்லி, எல்லா மாலைகளையும், சுவாமிக்கு, போடச் சொல்வாளாம், ஸ்வாமிகள், இதை ரொம்ப ரசிச்சிருக்கார். இதை என்கிட்ட சொல்வார்.

ஹனுமார் பேசி முடிச்ச உடனே, ராமர், லக்ஷ்மணன் கிட்ட சொல்றார், "ஹே, லக்ஷ்மணா, நாம எந்த சுக்ரீவனை, தேடி வந்தோமோ, அந்த சுக்ரீவன் கிட்ட இருந்து, இந்த ஹனுமார் வந்திருக்கார். நீ இவர் பேசினதை, கவனிச்சியா,

नानृग्वेदविनीतस्य नायजुर्वेद्धारिणः | नासामवेदविदुषश्शक्यमेवं विभाषितुम् ||

ரிக்வேதம், யஜுர்வேதம், சாம வேதம், எல்லாத்தையும், அத்யயனம், பண்ணி இருந்தாலொழிய, இந்த மாதிரி, ஒருத்தரால, பேச முடியாது. அப்படீன்னு, ராமர் சொல்றார். அது என்ன வேதத்துக்கும், பேச்சுக்கும், என்ன சம்பந்தம்னா, இவர் பேசின வார்த்தைகள், அந்த அவருடைய, vocabulary யை, பார்த்த உடனே, ராமர், வந்து, இவர், வேதம் படிச்சவன்னு, சொல்றார்.

नूनं व्याकरणं कृत्स्नमनेन बहुधा श्रुतम्। बहु व्याहरताऽनेन न किञ्चिदपशब्दितम्।।

நூனம் வியாகரணம் க்ருத்ஸ்நம் அனேன பஹுதா ஸ்ருதம் |

பஹு வ்யாஹரதா அனேன ந கிஞ்சித் அபசப்திதம் ||

இவன், பல தடவை, வ்யாகரணத்தை கேட்டு இருக்கான், அப்படீங்கறார். அந்த காலத்துல, படிப்புன்னாலே, கேள்வி தானே, நிறைய தடவை, வியாகரணம் கேட்டிருக்கான். அதனாலதான், இவ்வளவு, நேரம், பேசினால் கூட, ஒரு, அபசப்தம், கூட இல்ல, ஒரு, gramatical mistake, கூட இவர் பண்ணல, அப்படீன்னு,சொல்றார், ராமர். அது, ரொம்ப முக்கியம். கற்க கசடற அப்படீன்னு சொல்லி இருக்கே. ஹனுமார் பத்தி கேட்கணுமா. ஹனுமார், சாக்ஷாத், சூரிய பகவான் கிட்டே, சதுர்தச வேத வித்யைகளையும், படிச்சவர். அதனால், அவர், பேசும் போது, தப்பு வருமா? அவர், அவ்வளோ அழகா பேசறார்

न मुखे नेत्रयोर्वापि ललाटे च भ्रुवोस्तथा । अन्येष्वपि च गात्रेषु दोषस्संविदितः क्वचित्।।

ந முகே நேத்ரயோர்வாபி லலாடே ச ப்ருவோஸ்ததா |

அன்யேஷ்வபி ச காத்ரேஷு தோஷ: சம்விதித க்வசித் ||

இவனுடைய, முகத்துலேயோ, புருவங்கள்லேயோ, கண்கள்லையோ வேற எந்த அவயங்கள்லேயோ வேற எந்த விதமான கொனஷ்டையும், பண்ணாம, சேஷ்டையும் பண்ணாம, அவ்ளோ, இவன் முகத்தை பேசும் போது பார்த்துண்டே இருக்கலாம், அவ்வளோ அழகா பேசறான். அப்படீன்னு சொல்றார்.

अविस्तरमसन्दिग्धमविलम्बितमद्रुतम् । उरस्थं कण्ठगं वाक्यं वर्तते मध्यमे स्वरे ।।

அவிஸ்தரம் அசம்திக்தம் அவிலம்பிதம் அத்ருதம் |

உரஸ்தம் கண்டகம் வாக்யம் வர்த்ததே மத்யமே ஸ்வரே ||

ரொம்ப உரக்க கத்தி பேசல, ரொம்ப யாருக்குமே, கேட்காத, மாதிரி மெதுவா முணுமுணுத்துண்டு பேசல, விறுவிறுன்னு பேசல, நாபியில இருந்து, வார்த்தைகள் வர்றது, தொண்டையில பேசறான். மத்திம ஸ்வரத்துல பேசறான். இவன் வந்து, கல்யாணீம், வாசம், மங்களகரமான, வார்த்தைகளை, பேசுகிறார். இந்த ஹனுமார். "ஹிருதய ஹாரணீம்,"மனதை கொள்ளை கொள்ளும், வார்த்தைகளை, பேசறார்., இந்த ஹனுமார், அப்படீன்னு சொல்றார்.

संस्कारक्रमसम्पन्नामद्रुतामविलम्बिताम् । उच्चारयति कल्याणीं वाचं हृदयहारिणीम् ।।

சம்ஸ்கார க்ரம ஸம்பன்னாம் அத்ருதாம் அவிலம்பிதாம் |

உச்சாரயதி கல்யாணீம் வாசம் ஹ்ருதயஹாரிணீம் ||

எனக்கு, இவன் பேசறதை கேட்டுண்டே இருக்கணும்போல இருக்கு. இந்த மாதிரி, ஒருத்தர், பேசினா கொல்ல வந்த எதிரி கூட, கத்தியை கீழ போட்டுட்டு, நமஸ்காரம் பண்ணிடுவான். அப்பேற்பட்ட, இனிமையான, வாக்கு இவருக்கு. இந்த மாதிரி, ஒருத்தர், தூதனா, கிடைச்சா, அந்த ராஜாவுக்கு, எல்லா காரயங்களும் சித்தியாகும். இந்த மாதிரி, ஒரு தூதன் இல்லேன்னா, எப்படித்தான், கார்யங்களை, நடத்திக்க முடியும், அப்படீன்னு, ராமர் வந்து பார்த்த உடனே, appraisal பண்ணி வேலையும் கொடுத்துடறார். ராமா தூதன் அப்டீங்கிற job ஐயும், assign பண்ணிடறார்., அவருக்கு. அப்பேற்பட்ட, ஹனுமாருடைய வாக்கு. அதைக் கேட்ட உடனே, ராமர், "சொல்லின் செல்வன்" அப்படீன்னு, கம்ப ராமாயணத்துல, சொல்வா. அப்படி title கொடுக்கறார்.

"புத்திர்பலம் யசோதைர்யம் நிர்பயக்த்வம் அரோகதா

அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத்" அப்படீன்னு, ஹனுமாரை, நினைச்சா, நமக்கும், நல்ல வாக்கை கொடுப்பார். அவர்கிட்டே, நமக்கும் இனிமையான, வாக்கு வரட்டும் னு, வேண்டிப்போம்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி



இன்னிக்கு வால்மீகி ராமாயணத்துல, அயோத்யா காண்டத்துல, இரண்டாவது, சர்க்கதுல இருந்து, ஒரு ஸ்லோகம் பாப்போம். அயோத்தியா காண்டம், முதல் சர்க்கத்தில், ராமரோட குணங்களை எல்லாம், தசரதர், நினைச்சு பார்த்து, "இந்த ராமனுக்கு, நான் என் கையால், பட்டாபிஷேகம், பண்ணி பார்க்கணும்", அப்படீன்னு, நினைக்கறார். இரண்டாவது, சர்க்கதுல, ஜனங்களை, எல்லாம் கூப்பிட்டு, நாலு வர்ணத்தவர்களையும், மற்ற சிற்றரசர்களையும் சபைக்கு கூப்பிட்டு, "இந்த மாதிரி ராமனுக்கு, பட்டாபிஷேகம் பண்ணலாம்னு, முடிவு பண்ணியிருக்கேன்", அப்டீன்ன உடனே, எல்லாரும் ரொம்ப சந்தோஷப் படறா. அவா, அந்த ராமனை, புகழ்ந்து, நிறைய சொல்றா. அதுல இந்த ஒரு ஸ்லோகம்

व्यसनेषु मनुष्याणां भृशं भवति दुःखितः । उत्सवेषु च सर्वेषु पितेव परितुष्यति ॥ வ்யஸனேஷு மனுஷ்யானாம் ப்ருஷம் பவதி துக்கித: | உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி || அப்படீன்னு ஒரு ஸ்லோகம். வியஸனம், னா, கஷ்டம். "மனுஷ்யானாம் வ்யஸனேஷு" அதாவது, மனிதர்களுக்கு கஷ்டம், வரும்போது, அதாவது, எங்களுக்கெல்லாம், ஒரு கஷ்டம் வந்ததுனா, "ப்ருஷம், பவதி, துக்கித:" எங்களுக்கு எவ்வளவு கஷ்டமோ, அதைவிட அதிகமா, அவன் கஷ்டப்பட்டு, அதாவது கஷ்டத்தை உணர்ந்து, அதை எப்படியாவது சரி பண்ணனும், அந்த கஷ்டத்தை, போக்கணும், அப்படீன்னு பாக்கறான். "உத்ஸவேஷு ச ஸர்வேஷு", எங்காத்துல, ஏதாவது, உத்ஸவம், குழந்தை பொறந்துருக்கு, புத்ரோத்சவம், , இல்ல கல்யாணம், இப்படி உத்ஸவங்கள், வந்தா, "உத்ஸவேஷு ச ஸர்வேஷு" எல்லா உத்ஸவங்களிலும் "பிதேவ பரிதுஷ்யதி" எங்கப்பா, எவ்வளவு, சந்தோஷப்படுவாரோ, அந்த அளவுக்கு, ராமன் சந்தோஷப் படறான், அப்படீன்னு ஒரு ஸ்லோகம்.

இந்த மத்தவா கஷ்டத்துல, நாம பங்கெடுத்துக்கறது, அப்படீங்கிறது, கஷ்ட, நஷ்டங்கள்ல, சுக துக்கங்கள்ல பங்கெடுத்துகறதுங்கறது, நம்ம, கலாச்சாரத்துல, இருக்கு. ஸ்வாமிகள், ஸந்யாஸம் வாங்கிக்கறதுக்கு முன்னாடி வரைக்கும், அந்த மாதிரி, யாருக்காவது ஏதாவது, ஒரு துக்கம்னா, துக்கம் கேட்க போவார். ஆறுதல் சொல்வார். நீங்க இவ்வளோ பெரியவர், குரு ஸ்தானத்துல இருக்கேள், நீங்க எதுக்கு, அவாளோட சேர்ந்து, இப்படி, நீங்களும் கண்ணீர் விடணும்?, ஏன் இவ்வளோ வருத்தப் படணும்? அப்படீன்னு, யாராவது கேட்டா, "இது நான் ஒண்ணும், வரவழைச்சுண்டு பண்ணலை. என் ஸ்வாபாவமே, அப்படியிருக்கு. அவா கஷ்டத்தை, பார்க்கும் போது, எனக்கும் கஷ்டமாயிருக்கு", அப்படீன்னு சொல்வார். அப்படி ஒரு இயல்பா இருந்தார். அவருக்கு, அவ்வளோ ஒரு, வைராக்ய ஞானம், இருந்தாலும், அவர் மத்தவா, கஷ்டத்துல பங்கெடுத்துண்டார்.

அப்படி, மகான்கள் நம்ம துக்கத்தை, பகிர்ந்துக்கும் போது, கேட்கறவாளுக்கு, ரொம்ப ஆறுதலா இருக்கும். அவாளுக்கு, அந்த மனசுல இருக்கற பாரம்

குறையும், அதை நான், பார்த்திருக்கேன். மஹாபெரியவா கிட்டயே ஒருத்தர், புத்ர சோகத்தோட வந்து, ரொம்ப கதறி அழுதபோது, மஹாபெரியவாளே, “எனக்கே, ஒரு பிள்ளை போயிட்டான், தெரியுமா உனக்கு?” அப்படீன்னு, சொல்லியிருக்கா. அதாவது, பெரியவாளோட சொந்த தம்பி, சாம்பமூர்த்தி சாஸ்த்ரிகள்னு. அவரோட பிள்ளை, மணி சாஸ்த்ரிகள்னு, அவர், பெரியவாளுக்கு, service பண்ணிண்டு இருந்தார். அவர், ஒரு, accident ல போயிட்டார். அதை, குறிப்பிட்டு, “எனக்கே கூட, ஒரு பிள்ளை, போயிட்டான், பகவானோட பேரை சொல்லிண்டு, சமாதானம் பண்ணிக்கோ”, அப்படீன்னு சொல்லியிருக்கா.

ஸ்வாமிகளும், அந்த மாதிரி, நான் பார்த்து ஒருத்தருக்கு, புத்திரசோகம், ஏற்பட்டபோது, இந்த

“கோவிந்த கோவிந்த ஹரே முராரே,

கோவிந்த கோவிந்த முகுந்த கிருஷ்ணா

கோவிந்த கோவிந்த ரதாங்க பானே

கோவிந்த தாமோதர மாதவேதி”.

அப்படீன்னு அந்த ஸ்லோகத்தை, வந்து, எத்தனை ஆவர்த்தி, சொன்னார்னு, சொல்ல முடியாது. ரொம்ப நேரம், அதை ஜபிச்சுண்டே இருந்தார். வந்து கேட்டவா அப்படி கண் ஜலம் விட்டா. அதுக்கப்புறம், சமாதானம் ஆகி போனா. அந்த மாதிரி, ஆறுதல் சொல்றது, நான் ஸ்வாமிகள்கிட்ட பார்த்திருக்கேன். அந்த மாதிரி, ராமனுடைய, குணம்.

அடுத்தது, “உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி” மத்தவாளுக்கு ஒரு சௌக்கியம், ஒரு சந்தோஷ விஷயம்னா, சொந்த அப்பாவைப் போல அவரும், அந்த சந்தோஷத்தை பகிர்ந்துப்பார், அப்படீங்கறது இன்னும் மேலே. ஸ்வாமிகள், சொல்வார். “யாராவது, கஷ்டம்னு சொல்றதை, கேட்டாலாவது, “ஐய்யய்யோ, த்சு, த்சு”னு சொல்றதுக்கு, சில பேருக்கு, மனசு, வரும். மத்தவாளுக்கு, சௌக்கியம், வந்துடுத்து, நன்னா வந்துட்டான், அவன் அப்டீங்கிறபோது, அவாத்துல உத்ஸவம் அப்படீங்கிற போது, கொஞ்சம்கூட,

மனசுல கல்மிஷம் இல்லாமல், சொந்த தகப்பனார், எப்படி, சந்தோஷப் படுவாரோ, அந்த மாதிரி, சந்தோஷப் படறதுங்கிறது, ரொம்ப உயர்ந்த குணம், அப்படீன்னு, ஸ்வாமிகள் சொல்வார். அது நினைச்சு பார்த்து, அவர் சொல்வார். அதே மாதிரி, அவரும், ஸ்வாமிகளும் மத்தவாளுடைய, சந்தோஷங்களை பகிர்ந்துக்கறதையும் நான் பார்த்துருக்கேன். எல்லாரும், அவர்கிட்ட, போயி, சந்தோஷங்களை எல்லாம், சொல்லாம நம்ம ஆத்துல, ஒரு கல்யாணம், கிடையாது, ஒரு, விசேஷம் கிடையாது,

இந்த "பிதேவ பரிதுஷ்யதி," ங்கிறது, அப்பாவை போல சந்தோஷப் படறார்ங்கிறது, எனக்கு personal ஆ என் life ல வந்து, எங்கப்பா அப்படி, அமைஞ்சது, பெரிய பாக்கியம். அவர் ஒரு மகான் னே ஸ்வாமிகள் சொல்வார். கொஞ்சம் கூட யார்கிட்டயும் பொறாமை கிடையாது. ரொம்ப நிதானமா, இருப்பார். கார்த்தால, எழுந்தா ரெண்டு மணி நேரம், ருத்ரம், சமகம், சொல்லி, சிவ பூஜை பண்ணுவார். சாயங்காலம், திருப்புகழ் பஜனை attend பண்ணுவார். ஒவ்வொரு ஏகாதசிக்கும் பவமானம் படிப்பார் துவாதசி அன்னிக்கு, உபநிஷத் பாராயணம் பண்ணுவார். ஒவ்வொரு ஞாயித்துகிழமையும் அருணம் அப்படீன்னு, சூரிய நமஸ்காரம், உடம்பு முடிஞ்ச வரைக்கும், நமஸ்காரம், பண்ணியே பண்ணுவார். இந்த காலத்துல, நமக்கு, படிப்புன்னா, என்னன்னு, தெரியல. எங்கப்பா தன் அண்ணா தம்பிகளுக்குள்ள கொஞ்சமா படிச்சவர்னு பேரு. அதனால, அவர், clerk போயிட்டார். ஆனா அது, பெரிய அனுக்ரஹம், அவர் சத்ஸங்கத்துல ஈடுபட்டு, வேதத்தை, நாலு, காண்டம் அவர் அத்யயனம் பண்ணினார். அதுமாதிரி, இது படிப்பா, அதெலாம், படிப்பா, இவருக்கு கிடைச்ச பாக்யமே, பாக்கியம். அப்படி, நல்ல புத்திமான். 73 வயசுல, அவர் "எனக்கு, கந்தர் அலங்காரம் மனப்பாடம் பண்ணனும்னு, ஆசையா இருக்குன்னு", நூறு பாட்டையும் மனப்பாடம் பண்ணினார். அந்த மாதிரி, அவருக்கு, புத்தி, தீட்ஷண்யம் இருந்தது. மெதுவா கிரஹிச்சுண்டு, மெதுவா படிச்சு ரசிச்சு enjoy பண்ணுவார்.

அவர், அந்த மாதிரி, அவர் அந்த உத்ஸவங்கள் ல, சந்தோஷப்படறதுங்கிறது, எங்காத்துல நாங்க நாலு பேர். ரெண்டு பிள்ளைகள், ரெண்டு பெண்கள்.

எங்களுக்குள்ள, நான்கு பிள்ளைகள், நான்கு பெண்கள். இந்த எல்லா குழந்தைகள் கல்யாணத்துலயும், எல்லா பேரன், பேத்திகளோட, ஆயுஷ்ய ஹோமத்துலயிருந்து, பூணல் ல இருந்து, சீமந்தம், க்ருஹபிரவேசம் எல்லாத்தையும், எங்கப்பா ரொம்ப அழகா நிர்வாகம் பண்ணுவார். யார் யாரை எல்லாம், கூப்பிடணும், னு list போடுவார். என்னன்ன சாமான், வாங்கணும் list போடுவார். ஒரு contract கிடையாது, ஒண்ணும் கிடையாது. எல்லாம், அவர் தான், பார்த்து பார்த்து பண்ணார். அவருடைய அறுவது வயசுல இருந்து, எண்பது வயசு வரைக்கும்,அவருடைய நக்ஷத்ரம், பங்குனி, புனர்வஸு நக்ஷத்ரத்து அன்னிக்கு, ருத்ர ஏகாதசி, பண்ணுவார். எத்தனையோ, பேர் வருவா. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு மனப்பான்மையா இருக்கும். எல்லா பெண்டுகளை எல்லாம் சமாளிச்சுண்டு, வர்ற விருந்தினர்களை எல்லாம் சமாளிச்சுண்டு, உத்ஸவம்னா, அவர் கூட இருந்து, உத்ஸவம் நடத்தணும். அவ்வளோ அழகா பண்ணுவார். அந்த பிதாங்கிறவர், தன் குழந்தைக்குகளுக்ககாக, சந்தோஷப் படறதுன்னா அவர்கிட்டே பார்த்தேன்.

எனக்கு, இந்த ராமாயணத்தை பிரவசனம் பண்றதுல, முன்னமே ஒரு ஆசை இருந்து. நான், ஆத்துல , friends எல்லாம் கூப்பிட்டு வெச்சுண்டு, இந்த மாதிரி பேசிண்டு இருப்பேன். இதை வந்து, அவர் ரொம்ப encourage பண்ணுவார். ராம பட்டாபிஷேகத்து அன்னிக்கு, ஒரு பத்து பேர் வருவா, நான் ஒரு மணி நேரம், பேசுவேன், எங்கப்பா, stool ஐ போட்டு, அதன் மேல ஒரு துணியை போட்டு, நான் உட்கார்ந்து பிரவசனம் பண்றதுக்கு, ஏற்பாடு பண்ணி, கொடுப்பார். அப்படி, encouragement ஆ அவர், மாதிரி பண்ண முடியாது. அப்படி அந்த உத்ஸவங்களை எல்லாம் நடத்தி, ரொம்ப சந்தோஷப் படுவார். அந்த மாதிரி, “பிதேவ பரிதுஷ்யதி,” ங்கிறது, ஒரு அனுபவம், எனக்கு இருக்கறதுனால, ராமன், மாற்றவர்களுடைய உத்ஸவங்கள்ல, தானும் பங்கெடுத்து, சந்தோஷப் படுவான், அப்படீங்கிறதை, என்னால ரசிக்க முடியறது.

ஸ்வாமிகள் , எனக்கு, “நீ உங்கப்பாவை, பார்த்துக்கோ, அவர் மாதிரி, நீ இருந்தாலே போரும்”, அப்படீன்னு சொல்வார். அதுதான் என்னோட highest

goal in life ஸ்வாமிகள், கிட்ட, நான், என்ன பார்த்தேன்னா, எங்கப்பாக்கு, ஓரளவு, ஒரு smooth sailing life , நல்ல மனைவி, ஓரளவு, தேவலாமான குழந்தைகள். நான், exception! ஆனா, ஸ்வாமிகளுக்கு, பல கஷ்டங்கள், இருந்தது. எங்கப்பா, "ஆன பயபக்தி வழிபாடு பெறுமுக்தி" அப்படீன்னு, பகவான்கிட்ட, பயபக்தியோடு இருந்து, நல்ல வரங்கள், பெற்று, பக்தி மார்க்கத்துலயே இருந்து, முக்தி அடைஞ்சுட்டார்.

ஸ்வாமிகள் வந்து கஷ்டம் வந்தாலும், அதை தாங்கிண்டு, பகவானோட, பக்தியினால கரை ஏறினார். "வைதரணி" போல அதாவது, நரகத்துல, ஒரு ஆறு அது. அந்த மாதிரி, ஒரு ஆற்றை, கடக்க வேண்டியிருதா கூட, பகவானோட பக்தியினால, ஒரு கவலையும் இல்லாம, கடக்கலாம்னு, பாகவதத்துல வரும். அப்படி அவர் வாழ்க்கை. அவர், ஒரு குரு ஸ்தானத்துல இருந்ததுனால, பகவத் பஜனம் சுகம், துக்கம், எல்லாத்துக்கும் மேல, கொண்டு போய் விடும், அப்படீங்கிறதை, அவர் வாழ்ந்து காண்பிச்சார். அந்த மாதிரி, ரெண்டு மஹா புருஷர்களிடம் நான் என் life ல நெருங்கி பழகியிருக்கேன். இதோட இன்னிக்கு பூர்த்தி பண்ணிக்கறேன்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

<u>எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு</u>

இன்னிக்கி வால்மீகி ராமாயண ஸ்லோகம், கிஷ்கிந்தா காண்டத்துல ஒரு ஸ்லோகம்

ब्रह्मघ्ने च सुरापे च चोरे भग्नव्रते तथा।

निष्कृतिर्विहिता सद्भिः कृतघ्ने नास्ति निष्कृतिः।।

ப்ரம்மஹக்னே ச ஸுராபே ச கோக்னே பக்னவ்ரதே ததா |

நிஷ்க்ருதிஹி ஹித சதபிஹி க்ருதக்னே நாஸ்தி நிஷ்க்ருதிஹி ||

அப்படினு ஒரு ஸ்லோகம். நிஷ்க்ருதிஹி ன்னா ப்ரயஸ்சித்தம். ப்ரம்மஹக்னே – ப்ரம்மஹத்தி பண்ணிணவனுக்கும், ஸுராபே – ஸுரா பானம் பண்ணிணவனுக்கும், கோக்னே – கோஹத்தி பண்ணிணவனுக்கும், பக்னவ்ரத: விரதத்தை முறித்தவனும், இங்க வந்து கல்யாணத்துக்கு முன்னாடி பிரம்மச்சர்ய விரதத்தை விட்டுட்டவனும், என்ற ஒரு அர்த்தம் சொல்லுவா. இந்தமாதிரி பாபங்களுக்கெல்லாம் " நிஷ்க்ருதிஹி விஹிதா" ரிஷிகளால் பிராயஷ்ச்சித்தம் சொல்லப்பட்டிருக்கிறது, "சத்பிஹி" சாதுக்களால், ரிஷிகளால். "க்ருதக்னே நாஸ்தி நிஷ்க்ருதிஹி " செய்த நன்றியை மறந்தவனுக்கு பிராயஸ்சித்தமே கிடையாது அப்படினு ஒரு ஸ்லோகம்.

இதை அப்படியே வள்ளுவர் “எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு” அப்படினு ஒரு குரளில் எழுதியிருக்கார். திருவள்ளுவருடைய நிறைய குறள் பாடல்களுக்கு வைதீகமான அர்த்தம் சொல்லமுடியும், அதுவும் பரிமேலழகர் உரையில நம்முடைய தெய்வ மதத்துல இருக்க அந்த அர்த்தங்கள் தான் சொல்வார். தர்ம சாஸ்த்திரம் பண்ணின பதினெட்டு ரிஷிகளோட இவர் பத்தொன்பதாவது ரிஷியா இவர் ஒரு சாஸ்த்ரம் ஸ்ம்ருதி கொடுத்திருக்கார்னு ஒரு interpretation சொல்லுவா.

அப்படி ஒரு புஸ்தகம் ஒரு பெரியவர் எழுதி இருக்கார். மஹாபெரியவா “அதை நான் மூணு வாட்டி படிச்சேன்னு அவர்கிட்ட சொல்லு” அப்படினு சொல்லிருக்கா. அந்த புஸ்தகம் எழுதின பெரியவர் ஸ்வாமிகள் ஆத்துக்கு வருவார், அவர் ஒரு வைஷ்ணவர், ஆனா அம்பாள் உபாஸகர், தமிழ்ல நல்ல படிப்பு, அதனால திருக்குறளுக்கு இந்த மாதிரி உரை எழுதிருக்கார். “ஆ பயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர் காவலன் காவான் எனின்” ராஜா ஒழுங்கா ஆட்சி பண்ணலைனா, பசுக்கள் பால் கம்மியா கொடுக்கும், அறுதொழிலோர், ஷட்கர்மநிரதா: னு பிராமணர்களுக்கு ஒரு பேரு , யாகம் பண்ணனும், யாகம் பண்ணி வைக்கணும், வேதம் படிக்கணும், வேதம் சொல்லித் தரணும், தானம் வாங்கணும், தானம் கொடுக்கணும், இந்த ஆறுதொழில பண்றதுனால ஷட்கர்மநிரதா:னு பேரு, இந்த ஆறுதொழில் பண்ணக் கூடிய பிராமணர்கள் நூல் மறப்பர், வேதத்தை மறந்து போய்டுவா. “காவலன் காவான் எனின்” எவ்வளோ பெரிய நஷ்டம் ஒரு தேசத்துக்கு, அப்படினு ஒரு திருக்குறள் இருக்கு. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு” அப்டீங்கிற திருக்குறளுக்கு, equivalent ஆ இந்த ராமாயணத்துல இந்த ஸ்லோகம் இருக்கு.

இது எங்க வரதுன்னா, ராமர் வாலி வதம் பண்ணின பின்ன, சுக்ரீவன், வானரா எல்லாம் வந்து, ராமர் கிட்ட நமஸ்காரம் பண்றா. “நீங்க கிஷ்கிந்தைக்கு வாங்கோ” அப்டீன்னு சுக்ரீவன் சொல்றான். ராமர், “இல்ல, எந்த ஒரு கிராமத்துக்குள்ளயோ, நகரத்துக்குள்ளயோ, நான் வர மாட்டேன், எங்க அப்பாக்கு, நான் அந்த வாக்கு கொடுத்துருக்கேன். நீ போய் பட்டாபிஷேகம்

பண்ணிண்டு ஆட்சி பண்ணு. ரொம்ப நாள், நீ கஷ்டப் பட்டுட்ட. அதனால கொஞ்சம் சுகம் அனுபவி. மழை காலமா இருக்கு, அதனால வெளியிலையும் கிளம்ப முடியாது. மழை காலம் முடிஞ்சா உடனே நீ என்னை வந்து பார். அப்டீன்னு சொல்றார். வந்து, எனக்கு, சீதாதேவியை, தேடிக் கொடு. இது, நமக்குள்ள இருக்கற ஒப்பந்தம்". அப்டீன்னு சொல்றார்.

சுக்ரீவன் கிஷ்கிந்தைக்கு போறான். வானரா எல்லாரும் அவனுக்கு பட்டாபிஷேகம் பண்ணி வைக்கறா. அவன் குடியிலயும் காமத்துலயும், எல்லாத்தையும் மறந்து போயி, அதுலயே மூழ்கி கிடக்கறான். ஆச்சு. மழைகாலம் முடிஞ்சுது, சரத் காலம் வந்துடுத்து. அவனுக்கு ஒண்ணுமே தெரியலை. அப்போ, ஹனுமார் போயி அவனுக்கு ஞாபகப் படுத்தறார். "இந்த மாதிரி நீ ராமருக்கு நீ வாக்கு கொடுத்துருக்க. செய்த நன்றி மறக்கக் கூடாது. பெரியவா எல்லாம் கேட்கறதுக்கு முன்னாடி நாமளே பதில் உதவி பண்ணனும்" அப்டீன்னு ஞாபகப் படுத்தறார், அதுக்கு அவன், "நீ என்ன வேண்ணா பண்ணு", அப்டீங்கறான். உடனே நீலனை கூப்பிடறார், ஹனுமார். இந்த சுக்ரீவன் நீலன் கிட்ட உத்தரவு போடறான். "எல்லா வானராளையும் ஒரு மாசத்துக்குள்ள வரச் சொல்", அப்படீன்னு ஒரு உத்தரவு போட்டுட்டு, அவன் திரும்பியும் அந்தபுரத்துக்குள்ள போயிடறான், சுக்ரீவன்.

நீலன் அந்த மாதிரி ஒரு உத்தரவு போடறான். எல்லா வானராளும் வர ஆரம்பிக்கறா. தூதர்களை அனுப்பிச்சு, எல்லா வானராளையும் கிஷ்கிந்தைக்கு, வரச்சொல்றா. ஸ்வாமிகள் சொல்வார், "இந்த சுக்ரீவனுடைய military தான் ரொம்ப best. அங்கங்க மரத்துல பழம் இருந்தா சாப்டுக்கணும். ஆத்துல, எங்கயாவது ஜலம் இருந்தா குடிச்சுக்கணும், வான்னா வரணும், எங்க இருந்தாலும் ரிப்போர்ட், பண்ணனும். செலவே இல்லாத military" அப்டீன்னு சொல்வார். அந்த, மாதிரி வானரா எல்லாம் வந்துண்டு இருக்கா.

அதுக்கு நடுவுல ராமர் காத்துண்டு இருக்கார். லக்ஷ்மணன்கிட்ட, அப்பப்ப புலம்பறார், லக்ஷ்மணன், "இல்ல, சுக்ரீவன் தயவு பண்ணுவான், காத்துண்டு இருங்கோ, அவன் சொன்ன வார்த்தையை மீற மாட்டான், அப்டீன்னு சொல்றார், ஆனா இப்படி, நாள் கடந்துடுத்து , அப்டீன்ன உடனே, ராமருக்கு

கடுங்கோபம் வர்றது. அவர் லக்ஷ்மணன் கிட்ட சொல்றார், "இந்த சுக்ரீவன் செய்த நன்றியை மறந்துட்டான். நீ போய் அவனுக்கு ஒரு எச்சரிக்கை குடு. நான் எந்த கதவைத் திறந்து வாலியை யமலோகத்துக்கு அனுப்பிச்சேனோ அந்த கதவை இன்னும் மூடலை. உன்னையும் யம லோகத்துக்கு அனுப்பிடுவேன் சொல்லு" என்கிறார் ராமர்.

அப்ப லக்ஷ்மணனுக்கு, ரொம்ப கோபம் வர்றது. ராமர் சீதையை, பிரிஞ்சி படற கஷ்டத்தை, பாக்கறான். இப்ப வரைக்கும் சமாதனம் சொல்லிண்டே இருக்கான். அப்போ, லக்ஷ்மணன், சொல்றான், "இவனோட என்ன பேச்சு? இவன் ரொம்ப முட்டாளாக இருக்கான். புத்தி கெட்டவனா இருக்கான். இவனுக்கு, ராஜ்யத்தை, கொடுத்தே இருக்கக் கூடாது. நாம, ஹனுமான், அங்கதன், இவாளை எல்லாம் வெச்சு, சீதா தேவியை தேடி கண்டு பிடிச்சுடுவோம். நான், இவனை போய் வதம் பண்ணிடறேன்" அப்படீன்னு சொல்றான். அப்ப ராமர், சொல்றார். "அப்படி பண்ணாதே, ஏன்னா, நாம சீதையை, இழந்து, ஜடாயுவை, இழந்து, நாம ஒரு கபந்தத்துக்கு, கிட்ட மாட்டிண்டோம். அப்புறம், தனுங்கற கந்தர்வன், சொல்லி, இந்த சுக்ரீவனை, வந்து பார்த்தபோது, "நீயும் நானும், நண்பர்கள். உன் கஷ்டம், என் கஷ்டம்", அப்படீன்னு ஒரு வார்த்தை அவன் சொன்னானே, அன்னிக்கு, அது எவ்வளவு, ஆறுதலா இருந்தது எனக்கு. அதனால நீ அவனை, கொல்லாதே, நீ அவனப் போயி, எச்சரிக்கை பண்ணு, warning கொடு, புரிஞ்சிண்டுடுவான்", அப்படீன்னு, சொல்றார்.

அதே மாதிரி, லக்ஷ்மணர் கடுங்கோபத்தோட கிஷ்கிந்தைக்கு வரார், எல்லாரும்,பயப்படறா. அங்கதன், எல்லாம், ரொம்ப பயந்து போயி, தாரை கிட்ட, சொல்றான், ருமை கிட்ட சொல்றான், சுக்ரீவன் கிட்ட சொல்றான். சுக்ரீவன் ஓரளவு தான் தெளிவா இருக்கான், அப்புறம் சுக்ரீவன், வெளியில வரான். மந்திரிகள், எல்லாம் வந்து, அவன் கிட்ட நல்ல புத்தி சொல்றா. ஹனுமார், கடுமையா அவன்கிட்ட சொல்றார், "ராமர், கோவத்துல இருக்கார். ஆனாலும், அவர் உன்னை, உயிரோட விடணும்னு, நினைச்சு, லக்ஷ்மணனை, அனுப்பி இருக்கார். அவரே வந்து, இருந்தார்னா, உனக்கு, இன்னியோட, முடிவு வந்திருக்கும். அவர், லக்ஷ்மணனை, அனுப்பிருக்கார் என்பதில் இருந்தே,

உன் பேர்ல, அவருக்கு, இன்னும், கொஞ்சம் பரிவு இருக்கு என்று தெரிகிறது. அதனால, நீ செய்த, நன்றியை, மறந்துட்ட. லக்ஷ்மணன் வரான், நீ அவன் கிட்ட கைகூப்பி மன்னிப்பு கேட்டுக்கோ, அது ஒண்ணுதான், உனக்கு வழி, நான் மந்திரியா இருக்கலாம், நீ ராஜாவா இருக்கலாம், எனக்கு, என் உயிர் மேல, ஆசை இல்ல, நான் உனக்கு, நல்லதை சொல்றேன்" அப்டீன்னு சொல்றார், ஹனுமார்.

சுக்ரீவன் "வாஸ்தவம்தானே, ராமர், பண்ணிண நன்றியை, நான் மறப்பேனா, அவரால் தானே, எனக்கு இந்த ராஜ்யமே கிடைச்சுது"ங்கறான், "இது உனக்கு ஞாபகம் இருக்கோல்யோ, நீ இதை, லக்ஷ்மணன் கிட்ட சொல்லி மன்னிப்பு கேட்டுக்கோ"ன்னு சொல்லி, ஹனுமார் சொல்லி கொடுக்கறார். அப்புறம், அந்த சுக்ரீவன், லக்ஷ்மணன் கிட்ட தாரையை அனுப்பறான். லக்ஷ்மணன் கோபத்தோட வரான். அந்த ஆதிசேஷனோட கோபம். எல்லாரும், பயந்து நடுங்கரா. அந்த கிஷ்கிந்தையையே இன்னிக்கு, அழிச்சுடப் போறான்னு, அவ்வளோ பயப்படறா, எல்லாரும். அப்போ, அந்த தாரை எதிரே வந்த உடனே, இவன் கோபத்தை விடறான், பெண்கள்கிட்ட, மஹாத்மாக்கள், கோச்சுக்க மாட்டாங்கிறதுனாலதான், இந்த சுக்ரீவன், அவளை அனுப்பறான். அவள் வந்து, "ஏன் நீ கோவிச்சுக்கிற? இந்த சுக்ரீவன் ரொம்ப நாளைக்கு அப்புறம், ஏதோ வாழ்வு வந்ததுன்னு, அவன் அனுபவிச்சுண்டு இருக்கான். உன்னை மாதிரி அவனுக்கு, புலனடக்கம், இல்லையே, உனக்கு, அந்த கஷ்டம் பத்தி தெரியாது, ஏதோ, அவன் கிடைச்சதை, அனுபவிச்சுண்டு இருக்கான், நீ அவனை, மன்னிச்சுடு. என்ன இருந்தாலும், உன் friend தானே" அப்படீன்னு, சொல்லி, அவ வந்து, "நான் அழைச்சுண்டு போறேன்னு, அப்படீன்னு, அந்தப்புரதுக்குள்ள அழைச்சுண்டு போறா.

உள்ள போன உடனே, சுக்ரீவனை, பார்த்த போது, அந்த ராமர், சொன்ன அதே வார்த்தைகளை, லக்ஷ்மணன், சுக்ரீவன்கிட்ட சொல்றான். "எம பட்டினம் போற வழி, இன்னும் மூடலை. உன்னை, வாலி கிட்ட ராமர், அனுப்பிச்சுடுவார், செய்த நன்றியை, மறக்காதே", அப்படீன்னு, சொல்றான். அதை சொல்லுமோது, சுக்ரீவன் பயந்து, நடுங்கறான். அப்ப தாரை, திரும்பவும் நடுவில் வந்து, "என்ன

இருந்தாலும், இவன் ஒரு மஹாராஜா. நீ எவ்வளோ, கடுமையான வார்த்தைகளை சொல்லாதே, அவன் ஒண்ணும், பண்ணாம இல்ல. ராவணன் கிட்ட கோடிக் கணக்கான, ராக்ஷதர்கள் இருக்கா. அந்த ராக்ஷதர்களை எதிர்க்கணும்னா, வானரப் படை வேணும். அந்த வானரப் படையை, சுக்ரீவன் வரச்சொல்லிட்டான். அவா வர்ரதுலதான், தாமதமே ஒழிய, இவன்கிட்ட, ஒண்ணும் தப்பில்ல". அப்படீன்னு, அந்த தாரை சொன்ன உடனே, சரி, நான் கோபத்தை, விட்டேன், அப்படீன்னு, லக்ஷ்மணன், சொல்றான். அப்பதான், சுக்ரீவனுக்கு, உயிர் வந்தது.

அவன் எழுந்து கைகூப்பி, "இந்த அடிமை செய்த, தப்பை, மன்னிச்சுடு, நான் இந்த மாதிரி, கள்ளுல, மூழ்கி, இருந்துட்டேன். நான் ராம கார்யத்தை, மறக்கல. அவரோட, தயவால்தான், எனக்கு, இந்த ராஜ்ஜியம் கிடைச்சுதுன்னு, எனக்கு, ஞாபகம் இருக்கு. ராமருக்கு, சஹாயம் என்ன வேண்டியிருக்கு?" அதாவது, தாரை வந்து, இந்த ராக்ஷதர்களை, ஜெயிக்கறதுக்கு, சஹாயம் வேணும்னு சொன்னா, இல்லையா. அதை மறுத்து பேசறான். "ராமர் ஒருவராவே, ராவணனை வதம் பண்ணிடுவார். ஒரு ராஜான்னு, போனா, பின்னாடி, அலங்காரத்துக்கு, ஒரு படை போகணும். அதுக்காக, நாங்க, போகப் போறோம், அவ்வளோதான், ராமருக்கு, ஒண்ணும் சஹாயமே வேண்டியது இல்ல. அதனால, நான் வந்து, அவரை, பார்க்கறேன்", அப்படீன்னு, சொன்ன உடனே, லக்ஷ்மணரும், "ஆஹா,இந்த மாதிரி, கஷ்டத்துலேயும், எங்களுக்கு, உன்னை மாதிரி ஒரு friend, கிடைச்சது, ரொம்ப தெய்வாதீனம்தான். நீ வந்து ராமரை,நிலையை பாரு, அவர் படற கஷ்டத்தை பார். நீ, உன்கிட்ட, நான் கோபத்துல, சொன்ன வார்த்தைகளை, மறந்துடு" அப்படீன்னு, அவனும், ஒரு magnanimous ஆ சொல்றான்.

அப்புறம், ரெண்டு பேரும்,போயி ராமரை பார்க்கறா. சுக்ரீவன் ராமரை நமஸ்காரம் பண்றான். ராமர் "தர்மார்த்த காம மோக்ஷம், அந்தந்த கார்யம், அந்தந்த நேரத்துல, பண்ணனும்", அப்படீன்னு, ஒரு வார்த்தை சொல்றார். அதாவது, "நீ காமத்துல மூழ்கி, தர்மத்தை மறந்துட்டியே" அப்படீன்னு

சொல்றார். அதுக்குள்ள, அந்த கோடிக் கணக்கான, வானரர்கள் எல்லா திக்குல இருந்தும் வந்துடறா.

அன்னிக்கு, அந்த ஹனுமார் பண்ணிண உபகாரம். அவர் நடுவுல, வந்து, “நீ உத்தரவு, போடு. அது போறும்”, அப்படீன்னு, சொல்லி, நீலனை, கொண்டு, உத்தரவு, போட்டதுனால, எல்லா, திக்குலிருந்தும், எல்லா வானரர்களும், வந்து சேர்ந்துடறா. அந்த கோடிக் கணக்கான, வானரர்கள் வந்து, சேர்ந்ததுனால, ராமர் திருப்தி, ஆயிடறார். “எப்படி, சூரியன், ஒளியை கொடுக்கறதோ, எப்படி, இந்திரன், மழையை கொடுக்கறாரோ, அந்த மாதிரி, நீ சொன்ன வார்த்தையை மீற மாட்டே. எனக்கு, சஹாயம் பண்ணுவேன்னு, எனக்குத் தெரியும், ரொம்ப சந்தோஷம்”, அப்படீன்னு, சுக்ரீவன்கிட்ட சொல்லிட்டு, அப்புறம் நான்கு திக்குலேயும், அந்த வானரர்களை சீதாதேவியை தேட அனுப்பறா. அதுக்கு மேல, கதை போறது.

அதுமாதிரி, செய்த நன்றியை, மறக்கக் கூடாது. ராமர், முதலில் சுக்ரீவனை அவனை, பார்த்த போது, நானும், நீயும் friends, ன்னு சொன்ன அந்த வார்த்தையை மறக்கல. “அப்போ,ஒரு, திருப்தி, ஏற்பட்டுதே, அப்படீன்னு, அந்த நன்றியை, கூட, மறக்காம, அவனை, சுக்ரீவனை உயிரோட விட்டார். சுக்ரீவன், ஆனா, இப்ப தெளிஞ்சுட்டான். தெளிஞ்ச உடனே, அவனும் தன் படைகளை, கொண்டு, சீதாதேவி, எங்கயிருக்கான்னு கண்டு பிடிச்சு, அந்த கோடிக்கணக்கான, வானரர்களோட, வந்து, யுத்தம் பண்றான். உயிரையும், துச்சமா நினைச்சு, ராமருக்காக, யுத்தம் பண்றான். அந்த மாதிரி, அவனும் அவனோட, நன்றியை, கான்பிக்கறான். ராமர், பட்டபிஷேகத்துல, வந்து, கலந்துக்கறான். அந்த ராமருடைய, குணம், அது. சின்ன நன்றி பண்ணா கூட,

कथञ्चिदुपकारेण कृतेनैकेन तुष्यति।

न स्मरत्यपकाराणां शतमप्यात्मवत्तया।।

கதஞ்சித் உபகாரேண க்ருதேன எகேன துஷ்யதி |

ந ஸ்மரதி அபகாராணாம் ஷதமபி ஆத்மவத்தயா ||

தன்கிட்ட, பண்ண கொஞ்ச, உபகாரத்தையும், நினைப்பார். நூறு, தப்பு பண்ணாலும் மறந்துடுவார், அப்படீன்னு, ராமரோட, குணம்.

இதே குணம், நான் ஸ்வாமிகள் கிட்டயும், பார்த்திருக்கேன். அவருக்கு, யார் என்ன சின்ன, உபகாரம் பண்ணினான்னு, எல்லாம், ஞாபகம் வெச்சுபார். மகான்கள் சாக்ஷாத் பகவானை போலதான். அவர்கிட்ட, பண்ண, அபகாரங்கள், எல்லாம், அவர் நினைக்கவே, மாட்டார். மஹாபெரியவாளும், அப்படிதான், இருந்துருக்கா, அவாளை எல்லாம், நினைப்போம். நாமும் பிறர் நமக்கு செய்த நன்றியை மறக்காமல் இருப்போம்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம

மருவுக மாசற்றார் கேண்மை



இன்னிக்கு வால்மீகி ராமாயண ஸ்லோகம், சுந்தரகாண்டத்துல முப்பத்தாறாவது ஸர்க்கத்துல ஒரு ஸ்லோகம்

कच्चिन्मित्राणि लभते मित्रैश्चाप्यभिगम्यते ।

कच्चित्कल्याणमित्रश्च मित्रत्रैश्चापि पुरस्कृतः ।।

கச்சின் மித்ராணி லபதே மித்ரைஸ்சாபி அபிகம்யதே |

கச்சித் கல்யாண மித்ரஸ்ச மித்ரைஸ்சாபி புரஸ்க்ருதஹ ||

னு சீதாதேவி ஹநுமார் கிட்ட ராமரைப் பத்தி கேட்கறா.

ஹனுமார், மெதுவா ராம கதையைச் சொல்லி கீழே இறங்கி வந்து நமஸ்காரம் பண்ணி, சீதையோட நம்பிக்கையை ஜெயிச்ச பின்ன, ராமருடைய பெயர் பொறித்த மோதிரத்தை கொடுத்து, ரொம்ப சீதைக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தறார்,

“விக்ராந்தஸ்துவம் ஸமர்தஸ்துவம் பிராக்ஞஸ்த்வம் வனரோத்தமா” எப்பேர்ப்பட்ட காரியத்தை நீ பண்ணியிருக்கே, இந்த ராக்ஷஸ கோட்டையெல்லாம் தாண்டி வந்து என்னைப் பாத்து, இந்த ராமருடைய மோதிரத்தை கொடுத்து, என் உயிரை காப்பாத்தினியே! எனக்கு நம்பிக்கை ஏற்படுத்தினியே! அப்படின்னு சொல்லிட்டு, இப்ப ஹனுமார் ராமதூதன் தான் என்கிற நம்பிக்கை சீதைக்கு வந்துடுத்து, இப்போ தான் ஹனுமார் கிட்ட முழு மனசோட பேச ஆரம்பிக்கிறா.

அப்போ, “ராமர் எப்படி இருக்கார்? அவர் என்ன பிரிஞ்ச துக்கத்தில ரொம்ப துவண்டு போகமால் இருக்கிறாரா? அவர் சாப்பிடறாரா? அவர் அடுத்த அடுத்த காரியத்தை எல்லாம் கவனிக்கிறாரா? இப்படி கேட்டுண்டே வரும்போது, இந்த ஒரு ஸ்லோகம் வர்றது – “கச்சின் மித்ராணி லபதே” – அவருக்கு நண்பர்கள் கிடைக்கிறார்களா? “மித்ரைஸ்சாபி அபிகம்யதே” – அந்த நண்பர்கள், அவரை வந்து பாக்கறாளா, நெருங்கி வருகிறார்களா? ” கச்சித் கல்யாண மித்ரஸ்ச” – கிடைச்ச நண்பர்கள் நல்லவர்களாக இருக்கிறார்களா? ” மித்ரைஸ்சாபி புரஸ்க்ருதஹ” – அந்த நண்பர்கள், இவரை கௌரவிக்கிறார்களா? அப்படினு நாலு கேள்வி கேட்கறா, என்ன அழகான கேள்விகள்!

Misery Loves Company-ங்கிற மாதிரி கஷ்டகாலம் வரும்போது, யாராவது வேண்டாதவா வந்து சேர்ந்துப்பா. இன்னும், மேலும் கஷ்டம் ஜாஸ்தியாகும். அந்த மாதிரி ராமருக்கு ஒரு கஷ்ட காலம், சீதையை பிரிஞ்சு தவிக்கும்போது, நல்ல நண்பர்கள் கிடைக்கிறாளா, அந்த நண்பர்கள் இவரை, கேலி பண்ணாமல் இவரை கௌரவிக்கறாளா, அப்பப்போ வந்து இவரை பார்க்கறாளா அப்படியெல்லாம் அழகா கேக்கறா. இந்த காட்சியை பாக்கும்போது, எனக்கு ஹனுமார் எப்படி சுக்ரீவனை ராமரோடு சேர்த்து வெச்சார், சுக்ரீவன் தான் ராமருக்கு கஷ்டகாலத்துல கிடைச்ச நண்பர், அப்படி கிடைச்ச நண்பரை ஹனுமார் சேர்த்து வைக்கும் அந்த காட்சி ரொம்ப அழகாயிருக்கும்.

சுக்ரீவன் மலை மேலேர்ந்து இவா வர்றதை பார்த்தபோது, பயந்துடறான். “ரொம்ப பெரிய வீரர்களா தெரியறா இவா ரெண்டு பேரும், வாலி அனுப்பிச்சாவாளா இருக்கும்”, அப்படின்னு சொல்லி ஒரு சிகரத்துலேர்ந்து

இன்னொரு சிகரத்துக்கு தாவி ஓடறான். அப்போ ஹனுமார் "நீ ராஜாவாக ஆகணும்னு ஆசைப்படற, இப்படி பயந்தன்னா எப்படி?" னு சொல்றார். அவன் உடனே ஹனுமார் கிட்ட "சரி, உனக்கு தைரியம் இருக்குனா நீ போய் அவாளை பாத்துப் பேசி, அவா நல்லவா தானா, நாம் அவாளோட நட்பு பண்ணிக்கலாமான்னு தெரிஞ்சிண்டு வா"ன்னு, அனுப்பறான்.

ஹனுமான் ஒரு பிக்ஷு வேஷம் போட்டுண்டு வந்து, ராமரை நமஸ்காரம் பண்ணறார். அந்த மொதல்ல ஹனுமார் ராமர் கிட்ட பேசின அந்த இருபது சுலோகங்களை ஒண்ணு ஒண்ணும் எடுத்து, அதை வந்து நாம ரசிக்கணும். அந்த பேச்சைக் கேட்டு "சொல்லின் செல்வன்"னு ராமர் ஹனுமார்க்கு, title கொடுக்கிறார். "இவன் வித்வான், இவன் இவ்வளவு நேரம் பேசினதுல ஒரு அபசப்தம் கூட கிடையாது, நவவயக்காரண வேத்தா, நாலு வேதங்களையும் படிச்சவன், "உச்சாரயதீ கல்யாணீம் வாசம் ஹ்ருதயஹரீணீம்" மனத்தை கொள்ளை கொள்ளும்படியான மங்களகரமான வார்த்தைகளை பேசுகிறான், இவன் உரக்க பேசலை, ரொம்ப காதுலயே விழாம பேசலை, விறு விறு விறுனு பேசலை, ரொம்ப இழுத்து இழுத்து பேசலை, அவ்வளோ அழகா பேசறான், இவன் கிட்ட நம்ம விஷயத்த சொல்லு", அப்படினு ராமர் லக்ஷமணன் கிட்ட சொல்றார், லக்ஷ்மணனே பெரிய வித்துவான், லக்ஷ்மணன் பேசும்போதே, நிறைய grammatical peculiarityலாம் வரும்.

அப்ப லக்ஷ்மணன் சொல்றார் "தனுங்கற கந்தர்வன் சொன்னான், இங்க சுக்ரீவன் என்கிற வானரத்தை தேடி வந்துண்டிருக்கோம்" அப்படினு சொல்லி ஆரம்பிச்சவுடனே, ஹனுமார், "ஆமாம், நானும் சுக்ரீவனோடா, மந்த்ரி தான்" என்கிறார். அப்போ லக்ஷ்மணன் சொல்றார், "இது ராமர், தசரத குமாரர். எத்தனையோ லக்ஷக்கணக்கான பசுக்களை தானம் கொடுத்து, யாகமெல்லாம் பண்ணிணவர், நன்னா படிச்சவர், ஆனா காட்டுக்கு வந்துட்டார், அப்பா பேச்சை கேட்கணும்னு காட்டுக்கு வந்துட்டார், வந்த இடத்துல அவரோட மனைவி காணாமப் போய்ட்டா. ரொம்ப நாங்க கஷ்டத்துல இருக்கோம், எங்களுக்கு சுக்ரிவன்தான் தயவு பண்ணனும்" அப்படினு லக்ஷ்மணன் சொல்றார்.

அதாவது வந்திருக்கறது சுக்ரீவனோட மந்த்ரி. அதனால அந்த protocol maintain பண்ற மாதிரி, தனக்கு மந்த்ரி மாதிரி இருக்கும் லக்ஷ்மணனை கொண்டு ராமர் பேசச் சொல்றார். லக்ஷ்மணன் இந்த மாதிரி "நாங்கள் சுக்ரீவனோட தயவை நாடி வந்துருக்கோம்" அப்படினு சொல்றான். ஆனால் ஹனுமாருக்கு அது பொறுக்கலை, "ஆஹா! உங்களை மாதிரி உயர்ந்த குலத்துல பிறந்தவர்களும், கோபத்தையும், புலன்களையும் ஜெயித்தவர்களும் ஆன உங்களை மாதிரி பெரியவர்கள், சுக்ரீவனுக்கு இந்த நேரத்துல ஒரு friend ஆ கிடைக்கறது, அவன் பண்ணின பாக்யம். அவன் இந்த மலையை விட்டு வெளியில் வர முடியுமா மாட்டிண்டுருக்கான், அதனால நீங்க தான் தயவு பண்ணனும் அவன் கிட்ட, உங்கள கூட்டிண்டு போறேன், நீங்க அவனுக்கு உதவி பண்ணா, அவன் உங்களுக்கு கட்டாயம் உதவி பண்ணுவான்" என்கிறார்.

"தயவு பண்ணனும், உதவி வேணும்"னு கேட்கும்போது மட்டம் தட்டாமா, இவாளா பாத்த ஒடனே, ராமரைப் பாத்த உடனே ஹனுமார் தன்னையே ஒப்பு கொடுத்துடறார். அதனால, அவளோட கஷ்டத்தை பெரிசு படுத்தாம, "உங்களுடைய கஷ்டத்தை நாங்க போக்கிடுவோம், சுக்ரீவனுக்கு தான் உங்க தயவுவேணும்", அப்படினு சொல்றது எவ்வளவு பெருந்தன்மை.

அப்பறம் அவாளை சுக்ரிவன் கிட்ட அழைச்சிண்டு போய், அந்த ஹனுமார், ராமனை சுக்ரீவனுக்கு introduce பண்ணி, "இவர் சக்கரவர்த்தி குமாரர். பெரிய வீரர், யாகங்களாம் பண்ணவர். இந்த கஷ்ட காலத்துல உனக்கு இந்த மாதிரி friend கிடைக்கிறது கஷ்டம். இவரோட நீ friendship பண்ணிக்கோ" அப்படினு சொல்றார். அப்போ சுக்ரீவன் ரொம்ப பணிவா, "நான் ஏதோ ஒரு வானரம், என்னோட நீங்க friendship பண்ணிப்பேளா?" அப்படினு கேட்கறான். ராமர் உடனே அவனைக் கட்டிண்டு "நானும் நீயும் இனிமே friends", அப்படினு சொன்னவுடனே, உடனே ஹனுமார் அக்னி மூட்டறார். ராமரும் சுக்ரீவனும் அக்னியை ப்ரதக்ஷிணம் பண்ணி, "நானும் நீயும் இனிமே friends, உன் கஷ்டம் என் கஷ்டம், உன் சுகம் என் சுகம்" அப்படினு சொல்றா. இப்படி ரெண்டு பேரும் friendship பண்ணிக்கிறா, அது கடைசி வரைக்கும் இருக்கு. ராம பட்டாபிஷேகத்துக்கு சுக்ரீவன் வரான்.

அந்த மாதிரி நல்ல நண்பர்கள் கிடைக்கறது கஷ்டகாலத்துல ஒரு அரிய விஷயம், அது கிடைச்சதுனால தான் ராமர் அந்த கஷ்டத்துலேருந்து மீண்டு வரார். சுக்ரீவன் friendship கிடைச்சதால் தான் ராமருக்கு ஹனுமாரோட அன்பு கிடைச்சது. அது ராமருக்கு எவ்வளோ பெரிய லாபமாயிருந்தது.

இதெல்லாம், ராஜகுமாரியாக இருப்பதால் சீதாதேவி அழகாக கேட்கறா.

கச்சின் மித்ராணி லபதே மித்ரைஸ்சாபி அபிகம்யதே |

கச்சித் கல்யாண மித்ரஸ்ச மித்ரைஸ்சாபி புரஸ்க்ருதஹ || என்று கேட்கறா.

அப்பறம் “கச்சித் ஆஷாஸ்தி தேவானாம் பிரசாதம் பார்திவாத்மஜ: – தெய்வங்களை ஆராதனை செய்து அவர்களுடைய பிரசாதத்தை அடைகிறாரா? என்று கேட்கிறா. மற்ற புராணங்களில் ராமர் சிவ பூஜை பண்ணினார் என்று சொல்வதற்கு இங்க மூலத்துலேயே ஒரு proof.

கச்சித் புருஷகாரம் ச தைவம் ச ப்ரதிபத்யதே – தன்னுடைய பௌருஷத்தையும் (Freewill) உணர்ந்து விதியின் வலிமையை (fate) உணர்ந்து தெய்வங்களையும் வேண்டிக் கொண்டு முயற்சியும் செய்து வருகிறாரா? இப்படி சீதாதேவியின் மனத்தை கொள்ளைகொள்ளும் அழகான பேச்சு.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம

ராமனைக் கண்டால் க்ஷேமம் உண்டாகும்

இன்னிக்கு வால்மீகி இராமயண ஸ்லோகம், அயோத்யா காண்டத்துல, 17வது சர்கத்தில

यश्च रामं न पश्येत्तु यं च रामो न पश्यति।। निन्दितस्सर्वसेल्लोके स्वात्माऽप्येनं विगर्हते।

யஸ்ச்ச ராமம் ந பஸ்யேத் து யம்ச ராமோ ந பஸ்யதி |

நிந்தித: ஸ வசேல்லோகே ஸ்வாத்மாபி ஏனம் விகர்ஹதே ||

"யஸ்ச்ச ராமம் ந பஸ்யேத் து" எவன் ராமனை பார்க்கவில்லையோ,
"ராமோ ந பஸ்யதி " எவனை ராமன் பார்க்கவில்லையோ,
"நிந்தித: ஸ வசேல்லோகே" அவனை ஜனங்களெல்லாம் நிந்தை பண்ணுவா,
"ஸ்வாத்மாபி ஏனம் விகர்ஹதே." அவனுடைய மனசே அவனை நொந்து கொள்ளும்,

அப்படின்னு ஒரு ஸ்லோகம்.

இதை வந்து, பிரிச்சு, முதல் பாதத்தை மூணாவது பாதத்தோட, ரெண்டாவது பாதத்தை நாலாவது பாதத்தோட சேர்த்து பொருள் படுத்திக்கணும். எவன் ராமனை பார்க்கவில்லையோ, அவனை ஜனங்கள் நிந்திப்பார்கள், எவனை ராமன் பார்க்கவில்லையோ அவன் தன்னையே நொந்து கொள்வான்; அப்டின்னு அர்த்தம்.

இது எங்க வரதுன்னா, ராமர், தேர்ல ஏறி லக்ஷ்மணனோட கைகேயி அரணமனைக்கு போயிண்டுருக்கார், அந்த அழகை ஜனங்களெல்லாம் பார்த்து ரசிக்கறா. அவன் தெரு திரும்பிட்டா கூட, கண்லேர்ந்து அவனோட அழகு போகலை, அவனுடைய ரூபம் அவாளுக்கு அப்படி மனசுல பதிஞ்சிருக்கு, அப்போ, இந்த ஸ்லோகத்தை சொல்றா.

வால்மீகி முனிவருடைய ஒரு speciality என்னன்னா, அவர் contrast ரொம்ப அழகா present பண்ணுவார். ரொம்ப சோகமான ஒரு கட்டம் வரும், அடுத்து, ரொம்ப சந்தோஷமான ஒரு கட்டம் வரும். இராக்ஷஸர்கள் வருவதை ரொம்ப பிரமாதமாக வர்ணிப்பார், அடுத்தது அந்த இராக்ஷஸன் வந்து யுத்தம் பண்ணி மாண்டு போனான்னு வரும், அப்டி அந்த contrast குடுத்தாத்தான் ரொம்ப பரிமளிக்கும்.

அந்த மாதிரி, கைகேயி அரண்மனைல தசரதர் இருக்கார், அவருக்கு அது ரொம்ப ரொம்ப கஷ்டமான ஒரு ராத்திரி, ரொம்ப வருத்தத்தை ஏற்படுத்தின ஒரு ராத்திரி. அவர் சந்தோஷமா இந்த ராம பட்டாபிஷேகத்தை சொல்லலாம்னு கைகேயி அரண்மனைக்கு போறார், அங்கே போனா அவள் பலவந்தமா, எனக்கு குடுத்த ரெண்டு வரங்கள குடுக்கணும், ராமன் காட்டுக்கு போகணும், பரதன் ராஜவாகனும்னு கேட்டு, அதை கேட்கிறாள். அதை கேட்டவுடனே, தசரதர் தவிச்சுபோயிடறார், "நான் எப்படி இந்த மாதிரி ஒரு காரியத்தை பண்ணுவேன்! ராமன் ஒரு தோஷம் இல்லாதவன், குணக்கடல், அவனை என்ன சொல்லி நான் காட்டுக்கு அனுப்புவேன், அப்படி தப்பில்லாத ஒருத்தனை காட்டுக்கு அனுப்பினா, ஜனங்களெல்லாம் என்னை நிந்தை பண்னமாட்டாளா? ராமனை நான் காட்டுக்கு அனுப்பிச்சா, சத்யம் குடுத்ததுக்காக, அவர், தசரதர் காட்டுக்கு அனுபிச்சார்ன்னு ஜனங்கள் சொல்ல போறதில்லை. வயசான காலத்துல புத்தி மழுங்கிபோய், பொண்டாட்டி பேச்சை கேட்டுண்டு, ஏதோ

கைகேயி பரதனுக்கு ராஜ்ஜியம் கேட்டாளாம், இவரும், பல்லை இளிச்சுண்டு, சரின்னு சொல்லி, ராமனை காட்டுக்கு அனுப்பி இருக்கார்ன்னு, அப்படின்னு ஜனங்களெல்லாம் என்னை கேலி பேசமாட்டாளா. ஒரு பிராமணன் குடிச்சுட்டு திரிஞ்சா எப்படி உலகம் அவனை பரிகசிக்குமோ, அது மாதிரி என்னை உலகம் நிந்தை பண்ண போறது, இந்த கடைசி காலத்துல எனக்கு இது தேவையா, நீ இப்படி பண்ணலாமா?" அப்படின்னு கெஞ்சறார்.

"உன் கால்ல விழுந்து கேக்கறேன், நான் உங்கிட்ட ராஜ்யத்தை குடுக்கறேன், நீ அதை ராமனுக்கு குடு, உனக்கு பெருமையா இருக்கும், இந்த மாதிரி என்ன நிர்பந்தப் படுத்தாதே, நான் இவ்ளோ நாள் உன்ன அன்பு பாராட்டி வெச்சிருந்தேனே, என் மேல தயவு பண்ணமாட்டியா, நான் வீட்ல பாம்பை வளர்க்கற மாதிரி இல்ல உன்னை நான் வளர்த்துட்டேன், இப்போ, அது விஷத்தை கக்கற மாதிரி நீ என் மேல விஷத்தை கக்கறியே, என் ராமனை பிரிஞ்சு ஒரு நிமிஷம் கூட நான் உயிரோடு இருக்க மாட்டேனே, நீ விதவையா இருந்துண்டு தான் இந்த ராஜ்யத்தை ஆள முடியும்."

"மேலும் பரதன், ராமனை விட தர்மாத்மா, அவன் இதுக்கு ஒரு நாளைக்கும் ஒத்துக்க மாட்டான், உனக்கு இதெல்லாம் ஒண்ணுமே புரியலையா? இந்த குலத்துக்கே ஒரு கெட்ட பெயர வாங்கி வைக்கறியே". அப்படின்னு பலது சொல்லி புலம்பறார். அவள் பிடிவாதமா இருக்காள், "என் பரதனுக்கு ராஜ்ஜியம் வேணும், நீங்க சொன்ன வார்த்தைய காப்பத்துங்கோ, சொன்ன வார்த்தயை காப்பத்தறதுக்காக அவாவா கண்ணையே குடுத்துருக்கா, உடம்பையே வெட்டி குடுத்துருக்கார் சிபி சக்கரவர்த்தி", அப்டின்னு, "நீங்க இப்போ சொன்ன வார்த்தைய நீங்க காப்பதலேன்னா, நான் என் உயிரை விட்டுடுவேன்", அப்டின்னு சொல்றாள்.

அவர் என்ன பண்ணுவார் பாவம், "என் ராமனை எனக்கு பார்க்கணும்" அப்படிங்கறார், பொழுது விடிஞ்சுடறது, சுமந்தரர் வந்து மங்களகரமான வார்த்தைகளை சொல்லி, தசரதரை எழுப்பறார், "இன்னிக்கு ஒரு பொன்னான நாள், ராமனுக்கு பட்டாபிஷேகம், எல்லாரும் காத்துண்டிருக்கா, எப்படி சூரிய பகவான் சமுத்திர ராஜனை எழுப்பறானோ, எப்படி வேதங்கள் பிரம்மாவை

எழுப்பறதோ, எப்படி மாதலி இந்திரனை எழுப்பறானோ, அந்த மாதிரி உங்களை எழுப்ப வந்திருக்கேன்", அப்டின்னு அவர் சந்தோஷத்துல அவர் பேசறார். அது தசரதருக்கு துக்கத்தை ஏற்படுத்தறது, கைகேயி ரொம்ப சாமர்த்தியமா, "தசரத மஹாராஜா, ரொம்ப களைச்சு போய்ட்டார், பட்டாபிஷேகத்தை பத்தி பேசி பேசி, நீ போய் ராமனை அழச்சிண்டு வா", அப்டின்னு சொல்றாள்.

இவருக்கு அப்போ கூட ஒண்ணும் தப்பா படலை, அவர் சந்தோஷமா போய் ராமனை அழைக்கலாம்னு போனா, அங்கே ராமருடைய அரண்மனைல உற்சவமா இருக்கு. எல்லாரும் சீக்கிரம் எழுந்து ஸ்நானம் பண்ணிண்டு, நல்ல உடைகளை எல்லாம் உடுத்திண்டு, காத்திண்டுருக்கா, ராம பட்டாபிஷேகத்தை பாக்கணும்னு.

ராமரும் சீதையும் அலங்காரம் பண்ணிண்டு ராமர் சந்தனம் பூசிண்டு தங்க கட்டில்ல உட்காந்திருக்கா, சித்ரா நக்ஷத்ரத்தோட கூடிய சந்திரன போல ராமர் ஜொலிக்கிறார். அந்த சுமந்திரருக்கு, தேரோட்டின்னு ஒரு வேலை, மந்திரின்னு ஒரு வேலை, வந்தின்னு ஒரு வேலை, வந்தின்னா, நல்ல வார்த்தைகள் பேசறவர்னு அர்த்தம். அந்த, ராமரை ஸ்தோத்திரம் பண்ணனும்னு வந்தவர்,

வவந்தே வரதம் வந்தி விநயஜ்ஞோ விநீதவத்...

அப்படின்னு நமஸ்காரமே பண்ணிடறார், ஒண்ணும் வார்த்தையே வரல, அவருக்கு அந்த அழகை பார்த்து. அப்புறம், கைகேயி அரண்மனைல தசரதர் இருக்கார், உங்களை அங்க வரச் சொன்னார், அப்படின்ன உடனே ராமர் சீதை கிட்ட, "நான், போயிட்டு வரேன், தசரத மஹாராஜா, கைகேயி அம்மாவோட அரண்மனைக்கு போயிருப்பார், கைகேயி அம்மா, இந்த பட்டாபிஷேகத்தை பற்றி கேள்விப்பட்டு, ஆஹா அதை இப்படி விமரிசையா பண்ணனும், அப்படி விமரிசையா பண்ணனும், அப்படின்னு, பேசிண்டே இருந்திருப்பா, அதனால என்னை அங்க கூப்பிடறார், நான் போயிட்டுவரேன்", அப்படின்னு கிளம்பறார்.

சீதா தேவியும், ரொம்ப சந்தோஷமா, "ஆமா, நீங்க ராஜாவானா, நீங்க ராஜசூய யாகம் பண்ணும்போது, நான் பக்கதுல நிற்பேன்", அப்டிங்கறாள். "நீங்க

ராஜாவாயிட்டேள்னா, நான் ராணி ஆகிடுவேன், நல்ல நகையெல்லாம் போட்டுப்பேன், தேர்ல ஏறிண்டு நாம ஊரெல்லாம் சுத்தலாம்”, அப்டின்னு சொல்லல, அவள் ஜனகர் மகள், ஜனக மாஹராஜா, கர்ம யோகி, ஞானி, அதுனால அந்த மாதிரி, “யாகம் பண்ணும்போது கூட நிற்பேன்”, அப்படின்னு சொல்றாள்.

அப்புறம், சீதை வாழ்த்துக்கள் சொல்லி, ஆரத்தி எடுத்து, ராமரை அனுப்பறாள். ராமர் வெளில வந்தா, லக்ஷ்மணன் காத்துண்டு இருக்கான், ரெண்டு பெரும் தேர்ல ஏறி, ராஜ வீதில வரும்போது, ஜனங்கள் இந்த மாதிரி சொல்றா,

ஒருத்தர் சொல்றார், “இந்த ராமன், இதற்கு முன்னாடி இருந்த ராஜாக்கள், இவ அப்பா தாத்தா நல்ல ராஜாவா இருப்பான்”, அப்டின்னுவுடனே, இன்னொருத்தர், “அதுவா, அதெல்லாம் விட ரொம்ப நல்ல ராஜாவா இருப்பார்”, அப்படிங்கறார்.

ஒருத்தர், “இவனை பட்டாபிஷேகம் பண்ணி பார்க்கணும், அதான் எனக்கு இன்னிக்கு. பசி கூட இல்ல, சாப்பாடே வேண்டாம் போல இருக்கு”, அப்படின்னு ஒருத்தர் சொல்றார், இன்னொருத்தர் “அவன் பட்டாபிஷேகம் பண்ணிண்டு, யானை மேல, வீதி உலா வரும்போது, அதை பார்க்கணும் எனக்கு”, அப்படிங்கறார். இப்படி சந்தோஷமா இருக்கா ஜனங்கள்.

அங்கே, பெண்களெலாம் “இந்த ராமனை பெற்ற, கௌசல்யா தேவி ரொம்ப குடுத்து வைச்சவ”ங்கறா, இன்னும் சில பேர், “இந்த ராமனை கை பிடிச்ச சீதா தேவி ரொம்ப பாக்கியசாலி” – அப்படிங்கறா, இப்படி ஸ்தோத்திரமெல்லாம் கேட்டுண்டு ராமர் வந்துண்டுருக்கார். அப்போ, இந்த ஸ்லோகம் வரது.

யஸ்ச்ச ராமம் ந பஸ்யேத் து யம்ச ராமோ ந பஸ்யதி |

நிந்தித: ஸ வசேல்லோகே ஸ்வாத்மாபி ஏனம் விகர்ஹதே ||

இந்த ஸ்லோகத்துக்கு, அப்படி அழகா ராமன் ராஜவீதில பவனி வர, இந்த காட்சியை ஒருத்தன் பார்க்காம போயிட்டா ஜனங்களெல்லாம் அவனை நிந்திப்பாள, என்னடா உள்ள உட்கார்ந்திருந்தியா, ராமர் வந்தாரே, நீ பார்க்கலையான்னு சொல்வா. இன்னும் சில பேர், என்னை ராமர் பார்த்தார்,

என்னை ராமர் பார்த்தார்-ங்கறபோது, ஒருத்தன், என்ன ராமர் பார்கலையேன்னு நொந்துப்பான், அப்படின்னு இது ஒரு direct அர்த்தம்.

ஆனா ஸ்வாமிகள் சொல்வார், நாம கோவில்ல போய் ஸ்வாமி தர்சனம் பண்ணணும், ஒரு உற்சவத்ல வாசல்ல ஸ்வாமி வந்தா , ஓடிப்போய் தர்சனம் பண்ணனும், அப்படி இல்லாம, ஆத்துல டிவி பார்த்துண்டிருந்தா, அவனை சாதுக்களெல்லாம் நிந்தனை பண்ணுவா, என்னடா, ஸ்வாமி ஆத்து வாசல்ல வரார், நீ வந்து பாக்கமாட்டியா, அப்படின்னு நிந்தனை பண்ணுவாளாம், – அப்படின்னு இந்த முதல் பாதிக்கு அர்த்தம் சொல்வா,

இன்னொரு பாதிக்கு, ராமன் தன்னை பார்க்கலைன்னா நொந்துப்பா – அதுக்கு ஸ்வாமிகள் என்ன சொல்வார்ன்னா, சுந்தர காண்ட பாராயணம் நடக்கிறது, போலாமான்னு ஒருத்தன் கேட்பான், அந்த இன்னொருத்தன் friend சொல்வான், ஆமா அவருக்கு அது பொழப்பு, எனக்கு என் பொழப்பு இல்லையா, வேலைக்கு போகணும் – அப்படின்னு பதில் சொல்வான், அவன் போற வழில பைக்லேர்ந்து கீழே விழுந்து அடிபட்டுண்டு, கால்ல கட்டு போட்டுண்டு இருக்கும் போது, நான் ஏதோ எனக்கு வேலை இருக்குப்பா, நீ ரொம்ப குடுத்து வைச்சுருக்க, நீ போய் சுந்தரகாண்டம் கேளு அப்படின்னு சொல்லாம, அவர் பொழப்பு, என் பொழப்புன்னு வாயில வந்ததை பேசினேன், இப்போ இந்த மாதிரி அடிபட்டு கிடக்கிறேன், அன்னிக்கு நானும் போய், சுந்தரகாண்டம் கேட்டிருந்தேன்னா, ராமருடைய கடாக்ஷம் என் மேல பட்டிருந்தா எனக்கு இந்த ஆபத்தே வந்திருக்காது, அப்படின்னு தன்னையே நொந்துப்பான் – அப்படின்னு ஸ்வாமிகள் சொல்வார்.

அப்படி ஸ்வாமிகளுடைய ராம பக்தி. இது மாதிரி ராமரை பார்த்துண்டே இருக்கணும், அவருடைய கடாக்ஷம் நம்மேல விழும்படியா நடந்துக்கணும், ராமாயணம் படிக்கணும், ராமாயணம் கேக்கணும்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

<u>தத்புதம் ராகவ கர்ம துஷ்கரம்</u>



இன்னிக்கு வால்மீகி ராமாயண ஸ்லோகங்கள், யுத்தகாண்டத்துல ராமர் கடல் மேல பாலம் கட்டின அந்த காட்சியும், அதோட முடிவுல தேவர்கள் ராமரை வாழ்த்தறா, அந்த ரெண்டு ஸ்லோகங்களும் பாக்கலாம்.

तद् अद्भुतम् राघव कर्म दुष्करम् समीक्ष्य देवाः सह सिद्ध चारणैः |

उपेत्य रामम् सहसा महर्षिभिः समभ्यषिन्चन् सुशुभैः जलैः पृथक् ||

“தத் அத்புதம் ராகவ கர்ம துஷ்கரம் ஸமீக்ஷ்ய தேவா: ஸஹ சித்தசாரணை: |

உபேத்திய ராமம் ஸஹஸா மஹர்ஷிபிஹி ஸமப்பியஷிஞ்சன் ஸுஷுபை: ஜலை: ப்ருதக் ||

இந்த அற்புதமான, ராமருடைய காரியத்தை பார்த்து, பிறரால் செய்யமுடியாத, இந்த ஆஸ்சர்யமான, லங்கை வரைக்கும் கடல் மேல பாலமே காட்டினார்ங்கிற ராமருடைய காரியத்தை பார்த்து, சித்தசாரணைஹி ஸஹ, சித்தர்களும், சாரணர்களும், மஹரிஷிகளும், தேவர்களும் எல்லாரும் வந்து, “ராமம் உபேத்ய” ராமருக்கு அருகில் வந்து ” ஸமப்யஷிஞ்சத்” அவர் மேல ” ஸுஷுபை: ஜலை: ” திவ்யமான ஸுத்த ஜலத்தை கொண்டு, அவர் மேல ஒரு மழையாக கொட்டி, அவருக்கு ஒரு அபிஷேகம் பண்ணிணா, அப்படின்னு ஒரு ஸ்லோகம். இது ஒரு பட்டாபிஷேகம்.

அங்க கோதாவரி நதிக்கரையில, சீதாதேவியும், ராமரும், லக்ஷ்மணருமாக போய், ஸ்நானம் பண்ணிட்டு வந்தாங்கிற போது, சிவபெருமானும், பார்வதி தேவியும், நந்திகேஷ்வரரும் ஸ்நானம் பண்ணிட்டு வருவது போல இருக்கு அப்படின்னு சொல்றார் வால்மீகி. அதை ஒரு பட்டாபிஷேகம்னு சொல்லுவா. பாதுகா பட்டாபிஷேகம் இருக்கு, சுக்ரீவ பட்டாபிஷேகம், விபீஷண பட்டாபிஷேகம், அது போல இங்க தேவர்களும் சித்தர்களும் எல்லாரும் சேர்ந்து ராமருக்கு ஒரு பட்டாபிஷேகம் பண்றா. அப்பறம் ஸ்தோத்ரமா சொல்றா,

जयस्व शत्रून् नर देव मेदिनीम् ससागराम् पालय शाश्वतीः समाः |

इतीव रामम् नर देव सत्कृतम् शुभैः वचोभिः विविधैः अपूजयन् ||

ஜய ஸ்வஷத்ரூன் நரதேவ மேதினிம் ஸஸாகராம் பாலய சாஷ்வதி ஸாமா: |

இதீவ ராமம் நாரதேவ ஸதக்ருதம் ஷுபைர் வாசோபி: விவிதை: அபூஜயன் ||

“விவிதை: அபூஜயன்” பலவிதமான ஸ்தோத்ரங்கள் சொல்றாளாம். அதுல ” ஜய ஸ்வஷத்ரூன் ” ராமா நீ உன் ஷத்ருக்களை ஜெயிச்சு, “நரதேவா” மனிதர்களுக்குள் சிறந்தவனே ” மேதினிம் ஸஸாகராம் பாலய ” நான்கு புறமும் கடல்சூழ்ந்த இந்த உலகத்தை நீ, ” சாஷ்வதி ஸாமா:” பல்லாண்டு பல்லாண்டு காலம் ஆள்வாய் “ஜய” உனக்கு, வெற்றி ஏற்படட்டும், அப்படின்னு “இதீவ

ராமம்” தேவர்கள் எல்லாம் ராமரை ஸ்தோத்ரம் பண்ணார்கள், அப்படின்னு இந்த ரெண்டு ஸ்லோகம்.

அந்த காட்சி என்னன்னா, விபீஷணன் வந்து சரணாகதி பன்றான். சுக்ரீவன் முதலான வானரர்கள் “வேண்டாம் இவன் எதிரி பக்ஷத்துலேர்ந்து வந்துருக்கான்”ன்னு சொல்றா, ஹனுமார் “இவன் தர்மாத்மா. இவனை சேர்த்துக்கலாம்” அப்படின்னு சொல்றாறர். இது தனியா விபீஷண ஷரணாகதி விஸ்தாரமா பாக்கணும், அந்த விபீஷணனுக்கு ராமர் “என்னை வந்து நமஸ்காரம் பண்ணி, அபயம்னு கேட்டா நான் அவனுக்கு சரணாகதி கொடுப்பேன், இது என்னுடைய தர்மம்” அப்படின்னு விபீஷணனுக்கு சரணாகதி கொடுக்கறார், “அவனை வரச் சொல்லு”ங்கறார். அவன் வந்து நமஸ்காரம் பண்ணுகிறான், “இப்பவே சமுத்ர ஜலத்தை கொண்டு, லக்ஷ்மணா, இந்த விபீஷணனுக்கு இங்கயே லங்கைக்கு ராஜாவா, பட்டாபிஷேகம் பண்ணி வை”ங்கிறார். அந்த மாதிரி இங்கேயே, இக்கரையிலேயே அக்கறையோடு விபீஷணனை ராஜாவாக்கிட்டார் ராமர்.

அப்பறம், ராமர் விபீஷணன் கிட்ட கேக்கறார் “இந்த கடலைக் கடந்து வானரப்படையோடு எப்படி லங்கைக்கு போறது? அதுக்கு ஏதாவது ஒரு யோஜனை சொல்லு” அப்படீன்னு கேட்டவுடனே, விபீஷணன் சொல்றான் “உங்களுடைய முன்னோர்கள், ஸகர மஹாராஜா, அவருடைய புத்ரர்கள், இந்த கடலை விரிவு படுத்தினா. அதனால, இந்த சமுத்ரராஜா உங்களுக்கு உதவி பண்ணுவார், அவர் கிட்ட வேண்டிக்கோங்கோ'”ன்னு சொல்றான். ராமர் திரும்பி பாத்து சுக்ரீவன் லக்ஷ்மணன் கிட்டயெல்லாம் “இந்த எண்ணம் நன்னாயிருக்கா?” அப்படினு கேட்கறார், அவாளும் “ஆஹா, ரொம்ப நல்ல யோசனை தான் இது”, அப்படீன்னு சொல்றா, “நல்ல உபாயமா தெரியறது” அப்படீன்னு சொல்றா. இது என்னன்னா விபீஷணன் வந்து சரணாகதி பண்ணினான், அபயம் கேட்டான், ராமர் அபயம் கொடுத்தார். அதனால அவன் வந்து அதே உபாயத்தை ராமருக்கு சொல்றான், ராமர் இன்னொருத்தர் கிட்ட போய் அபயம்னு கேட்கவேண்டிய தேவையே இல்லை. அனாலும் அவன் சொன்னவுடனே அதை எடுத்துண்டு, ராமர் தர்ப்பை புல்லைப் ஒரு பாயாட்டம்

போட்டு, அதுல படுத்துண்டு, கைகள்மேல தலைய வெச்சிண்டு, மூணு நாள், உபவாசம் இருந்து, ஸமுத்ர ராஜா கிட்ட வேண்டிக்கறார்.

சமுத்ர ராஜா வரலை. ராமர் கடுங்கோபத்தோடு "ஹே லக்ஷ்மணா! சிலர் பேர்கிட்ட , பொறுமைங்ரது, நல்ல குணமில்ல, அது பலிக்கமாட்டேங்கிறது, என்னுடைய வில்லையும் அம்பையும் எடு, என்ன பண்றேன் பார்"னு ஒரு சில அஸ்த்ரங்களை கடல்ல விடறார். கடலில் இருக்கற, நாகங்களும், மகரங்களும், திமிங்கங்களும், எல்லாம் நடுங்கறது, ஹா ஊன்னு, கூச்சல் போடறது, அப்போ ராமர் "ப்ரஹ்மாஸ்திரத்தை எடு"ங்கிறார். "நான் கடல வத்தடிச்சுடரேன், நம்ம நடேந்தே போலாம் லங்கைக்கு" அப்படிங்கிறார், அப்போ ஸமுத்ரராஜன் வர்றான், அந்த ஸமுத்ர ராஜன் ஆகாசத்துல அலைகளை ஆடையாக உடுத்திக்கொண்டு, மணிகளையும், ரத்னங்களையும், (ரத்னங்களெல்லாம் கடலிலேர்ந்து தானே கிடைக்கும்), ரத்னங்கல்லாம் மாலையை போட்டுண்டு, அந்த ஸமுத்ரராஜன் மனுஷ்யரூபம் எடுத்துண்டு, வந்து ராமர்கிட்ட வந்து கைக் கூப்பறான், "இல்ல நீ என்ன வத்தடிச்சுடாதே"ன்னு வேண்டிக்கறான். அப்போ ராமர் , "எனக்கு லங்கைக்கு போறதுக்கு வழி சொல்லு" அப்டின்ன உடனே, "ஒரு கடல்னு இருந்த அது கடக்க முடியாததாக தான் இருக்கணும், அந்த மாதிரி இந்த பஞ்ச பூதங்களுக்கு பகவானோட ஆணை இருக்கறதுனால, பதில் சொல்லாம இருந்தேன். ஆனா, நீங்க பிரார்த்தனை பண்ணதுக்கு நான் தர்ஸனம் கொடுத்திருக்கணும், மன்னிச்சுக்கோங்கோ" ன்னு சொல்லிட்டு, "இங்க உங்களுடைய சேனைல, நளன் னு விஸ்வகர்மாவோட பிள்ளை இருக்கான், அவனை கொண்டு நீங்க பாலம் காட்டுங்கோ, அவனுக்கு அவன் அப்பாவோட அனுக்ரஹம் இருக்கு, நான் அந்த பாலத்தை முழுகாம பாத்துக்கிறேன்", அப்படின்னு ஸமுத்ரராஜன் சொல்றான். உடனே ராமர் "சரி, இப்போ கையில எடுத்த அம்புக்கு பதில் சொல்" என்றவுடன், "த்ருமகூல்யம்னு ஒரு க்ஷேத்ரம் இருக்கு, அங்க கடல் கொள்ளைக்காரர்கள் இருக்கா, நீங்க அங்க விட்டுடுங்கோ" ன்ன உடனே, ராமர் அங்க விடறார், அந்த க்ஷேத்திரத்தில இருந்த துஷ்ட ஜனகளெல்லாம் மாண்டு போயிடுறா. அப்பறம் ராமர் அந்த க்ஷேத்திரத்தில நல்லபடியா பசுக்களும், பயிர்களும், எப்போதும் பழங்களை

கொடுக்கக் கூடிய மரங்களும் அந்த க்ஷேத்திரத்துல வளரட்டும் அப்படின்னு ஆசிர்வாதம் பண்றார்.

அதுக்கப்பறம் நளன் சொல்றான், “ஆமா, என்னால இந்த கார்யத்தை பண்ணமுடியும், இப்ப ஸமுத்ரராஜன் சொன்ன உடனே ஞாபகம் வந்துடுத்து, எங்க அப்போவோட அனுக்ராஹம் இருக்கு நான் அந்த பாலத்தை கட்டறேன்” அப்படின்னு சொல்லி எல்லா வானரர்களையும் “வாங்கோ பெரிய பெரிய கற்களையும், மலைகளையும், மரங்களையும் கடல்ல கொண்டு வந்து போடுங்கோ” , அப்படின்னு அவன் direct பண்றான். பத்து யோஜனை அகலமும், நூறு யோஜனை நீளத்துக்கு ஒரு பாலம் கட்டறா, அவன் சரிப்படுத்திண்டே வரான் நளன். அந்த பெரிய பெரிய மலைகளெல்லாம் முயற்சி பண்ணி கொண்டு வந்து கடலில் போட்டார்கள், ஆகாஸம் வரைக்கும் அலைகள் எழும்பித்து, அப்படின்னு அந்த வர்ணனைகளெல்லாம் ரொம்ப அழகாயிருக்கும். தேவர்கள் எல்லாம் என்ன ஆச்சர்யம் என்று பாக்கறா.

இந்த பாலத்த கட்டும் போது, முதல் நாளில் பதினாலு யோஜனை கட்டினாளாம், அடுத்த நாளில் இருபது, அதுக்கு அடுத்த நாளில் இருபத்தொண்ணு யோஜனை, அதுக்கு அடுத்த நாளில் இருபத்திரெண்டு, அதுக்கு அடுத்த நாளில் இருபத்தி மூணு யோஜனை, இப்படி அஞ்சு நாள்ல நூறு யோஜனை கட்டி லங்கை வரைக்கும் இந்த பாலத்த காட்டிடறா. இந்த 14, 20, 21, 22, 23 அப்படிங்கிற numbers ஐ கூட்டினா 100 வர்றது, அதுலேயே, பொதுவாக project எப்படி proceed ஆகும் அப்படிங்கிறது தெரியறது, எடுத்த உடனே கொஞ்சம் மெதுவாதான் நடக்கும், அவாளுக்கு என்னண்ணு புரிஞ்சிக்கறதுக்கு நேரமாகும் இல்லையா, அப்படிங்கிற மாதிரி, முதல் நாள் பதினாலு, புரிஞ்ச உடனே productivity ஜாஸ்தியாரது. முடிக்க முடிக்க உத்சாகம் அதிகம் ஆகி 20, 21, 22, 23 என்று கட்டி, அஞ்சு நாள்ல அந்த பாலத்தை கட்டி முடிக்கறா, அப்படிங்கிற இந்தமாதிரி எல்லா detailsஉம் இருக்கு புஸ்தகத்தில. கயிறுகளையும், கற்களையும், பெரிய மலைகளையும், அப்டி என்னென்ன மலைகளை கொண்டுவந்தா , என்னென்ன மரங்களை கொண்டுவந்தா அப்படின்னு வர்ணனை, அப்படி ஆஸ்ச்சர்யமா நூறு யோஜனைக்கு ஒரு பாலம்

லங்கை வரைக்கும் ராமர் உத்தரவின் பேரில், நளன் மேற்பார்வையில் கட்டிமுடிக்கிறா.

அப்போ உடனே ஹனுமார் "என் மேல ஏறிக் கொள்ளுங்கள்" ன்னு ராமர் கிட்ட சொல்றார், அங்கதன் வந்து லக்ஷ்மணன்கிட்ட "என் மேல ஏறிக் கொள்ளுங்கள்" ன்னு சொல்றான், அப்படி அந்த வானரப் படை கடல் மேல கட்டின பாலத்து மேல ஏறி, லங்கைக்கு போய் சேருகிறது. போற வழில இந்த வானரர்கள் வீர விளையாட்டுயெல்லாம் பண்ணிக் காட்டறா. ரொம்ப சந்தோஷம் அவாளுக்கு, பெரிய காரியத்த முடிச்சிட்டோம்னு,

राघवस्य प्रियार्थम् तु धृतानां वीर्यशालिनाम् |

हरीणाम् कर्मचेष्टाभिस्तुतोष रघुनन्दनः ||

"ராகவஸ்ய பிரியார்தம் து த்ருதானாம் வீர்யஷாலினாம் |

ஹரிணாம் கர்மசேஷ்டாபி: துதோஷ ரகுநந்தன: ||

அப்படினு இந்த வீர விளையாட்டெல்லாம் பண்ணிண்டே போறா, அதெல்லாம் பாத்து, "துதோஷ ரகுநந்தன:" ராமர் மிகவும் சந்தோஷம் அடைந்தார், அப்படினு முடியறது.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

குரு என்கிற மாலுமி, பகவத் அனுக்ரஹம் என்கிற அனுகூல காற்று

இன்னிக்கி வால்மீகி ராமாயண ஸ்லோகம், சுந்தர காண்டலத்திலேர்ந்து முப்பத்தொன்பதாவது ஸர்கத்துல கடைசி ஸ்லோகம். ஹனுமார் சீதாதேவி கிட்ட, கடைசியாக விடைபெற்று கிளம்பும் போது சொல்ற ஸ்லோகம்,

नास्मिंश्चिरं वत्स्यसि देवि देशे रक्षोगणैरध्युषितेऽतिरौद्रे ।

न ते चिरादामगमनं प्रियस्य क्षमस्व मत्सङ्गमकालमात्रम् ।।

நாஸ்மின் சிரம் வத்ஸ்யதி தேவி தேஷே ரக்ஷோகணை: அத்யுஷிதேதிரௌத்ரே |

ந தே சிராத் ஆகமனம் ப்ரியஸ்ய க்ஷமஸ்வ மத் ஸங்கமகால மாத்ரம் ||

அப்படினு ஒரு ஸ்லோகம். அதுக்கு என்னஅர்த்தம்னா, "தேவி", சீதாதேவிய கூப்பிட்டு சொல்றார், "நாஸ்மின் சிரம் வத்ஸ்யதி தேஷே" அஸ்மின் தேஷே, இந்த தேசத்தில், சிரம், ரொம்ப காலம் நீ வசிக்க வேண்டி இருக்காது. "ரக்ஷோகணை: அத்யுஷிதேதிரௌத்ரே" இந்த ராக்ஷர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்டு, நீ வெகு காலம் இங்கே தங்க வேண்டி வராது, "ந தே சிராத் ஆகமனம் ப்ரியஸ்ய" உன்னுடைய பிரியமான ராமர் வெகு விரைவில் வந்துவிடுவார், "க்ஷமஸ்வ மத் ஸங்கமகால மாத்ரம்" நான் அவரை போய் பார்க்கும் அந்த ஒரு கொஞ் நேரம் பொறுத்துக்கோ" அப்படிங்கிறார்.

"நான் இங்கிருந்து திரும்பி போய் ராமரைப் பார்த்து, சீதை எங்கேயிருக்கா என்கிற செய்தியை சொல்லும் அந்த கொஞ்சம் நேரம் தான் நீ பொறுக்கணும், அவர் ஓடி வந்துடுவார், உன்னை மீட்டுன்னு போறதுக்கு", அப்படினு சொல்றார், ரொம்ப ஒரு அழகான ஸ்லோகம்.

நாம வசிக்கிற வீட்டுல, ஏதோ தொல்லைகள், neighbors சரியில்லை, அந்த மாதிரி தொல்லைகள், அல்லது, officeல அந்த மாதிரி ரொம்ப ச்ரமங்கள் இருந்தா கூட, இந்த ஸ்லோகத்தை சொன்னா, "இந்த இடத்துல நீ ரொம்ப நாள் இருக்க மாட்டாய், இந்த கஷ்டத்துல இருந்து நீ சீக்கிரம் மீண்டு விடுவாய்", அப்படிங்கிற, வார்த்தைகள் இருக்கறதுனால, சுந்தர காண்டத்துல எல்லாமே மந்த்ரம்னு சொல்லுவா, அப்படி இந்த ஸ்லோகத்தை சொல்லிண்டு இருந்தா, நல்ல இடத்துக்கு மாற்றம் ஏற்படும், அப்படின்னு ஒரு பலஸ்ருதி சொல்லுவா.

அதுக்கு மேலான ஒரு பலன் இருக்கு, பக்தி மார்கத்துல, அதை நான் உங்களுக்கு கடைசியில் சொல்றேன்.

இந்த ஸ்லோகம் context என்னன்னா, ஹனுமார் சீதாதேவி கிட்ட "நான் இப்பவே உங்களை கொண்டு போய் ராமர் கிட்ட சேர்த்துடட்டுமா, என்னுடைய தோள்ல ஏத்திண்டு போய், ராமர் கிட்ட கொண்டு போய் விடட்டுமா?ன்னு கேட்கறார், அப்ப, சீதாதேவி, "இல்லப்பா நான் எப்படி உன் முதுகில் ஏறி வருவேன்?" அப்படின்னு சொன்ன பின்ன, "நீ போய் ராமரை சீக்கிரமா அழைச்சிண்டுவா,

स मे हरिश्रेष्ठ सलक्ष्मणं पतिं सयूथपं क्षिप्रमिहोपपादय ।
चिराय रामं प्रति शोककर्शितां कुरुष्व मां वानरमुख्य हर्षिताम् ।।

ஸ மே ஹரிஸ்ரேஷ்ட ஸ லக்ஷ்மணம் பதிம்

ஸயூதபம் க்ஷிப்ரம் இஹோபபாதய |

சிராய ராமம் பிரதி சோக கர்ஷிதாம்

குருஷ்வ மாம் வானர முக்ய ஹர்ஷிதாம் ||

அப்படின்னு சொல்லி, "நீ சீக்கிரமா ராமர அழைச்சிண்டு வா"ன்னு சொல்றா. அதுக்கப்றம், "ஹனுமார் வாஸ்தவம், நான் உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்கணுங்கிறஆசையில அப்படி சொன்னேன், நீங்க என்னுடைய முதுகுல ஏறிண்டு வர்றதுங்கிறது, நீங்கள் விரும்பமாட்டீர்கள் என்று புரிந்து கொண்டேன்", அப்படின்னு சொல்றார்.

அப்பறம், "நான் வந்து உங்களை பார்த்துட்டு போனதுக்கு ஞாபகார்த்தமாக, அடையாளமாக, ஏதாவது ஒரு செய்தி சொல்லுங்கள், நான் அதை ராமர் கிட்ட சொல்றேன்", அப்படின்ன உடனே, சீதாதேவி ஒரு வ்ருத்தாந்தம் சொல்றா, "சித்ரகூடத்துல இருக்கும் போது, ஒருநாள் நான் ராமர் மடில படுத்துண்டு தூங்கினேன். அப்பறம், நான் எழுந்த பின்ன, என் மடியில படுத்துண்டு ராமர் தூங்கினார். அப்போ ஒரு காக்கா வந்து என்னை மார்புல கொத்தித்து. நான் ராமரை எழுப்பினேன், அவர் எழுந்து ஒரு காக்கா தான் பார்த்த உடனே, என்ன பார்த்து சிரிச்சிட்டு, திரும்பவும் தூங்கிட்டார். ஆனா அந்த காக்கா திரும்பவும் வந்து என்னை கொத்தித்து. அப்போ நான் ராமரை எழுப்பினேன். அவர் ரத்தம் சொட்டறதை பார்த்த உடனே, கோபமாக "யாரு இந்த மாதிரி பண்ணிணா?"

ன்னு கேட்டார். “இந்த காக்கா தான்”னு காண்பிச்சேன். அது இந்திரனோட பிள்ளை அப்படி வந்தது. அப்போ ராமர் கடும்கோபம் வந்து, ஒரு புல்லை எடுத்து, ப்ரஹ்மாஸ்திரத்தை சொல்லி, அந்த காக்கா மேல ஏவினார். அந்த புல்லே ப்ரஹ்மாஸ்திரமாகி அந்த காக்கைய துரத்தித்து. அவன் போய், தன்னோட அப்பாம்மா, இந்திரன் கால்ல விழுந்தான். அவா எங்களால ஒண்ணும் பண்ண முடியாது, நீ ராமர் கிட்ட அபசாரம் பண்ணிட்டேன்னு சொன்னா, அப்பறம் எல்லா தெய்வங்கள் கால்லயும் விழுந்தான், அப்பறம் ரிஷிகள் காலில் எல்லாம் போய் விழுந்தான். அவா எல்லாரும் “நீ ராமர் கால்ல போய் விழுந்து மன்னிப்பு கேளு, வேற வழியே உனக்கு இல்லைன்னு சொன்னா, அதானல, அந்த, காகரூபமாயிருந்த அவன் வந்து ராமருடைய காலில் விழுந்தான், மன்னிச்சிடுங்கோ, உயிர்ப் பிச்சை கொடுங்கோனு கெஞ்சினான். “சரி போ, என்னுடைய இடது கண்ணை இந்த அஸ்த்ரம் எடுத்துக்கட்டும்”னு சொல்லிடு, அப்படின்னு ராமர் சொன்னோடனே, அந்த மாதிரி அந்த அஸ்த்ரம், அவனோட இடது கண்ணை வாங்கிடுத்து. அவன் நமஸ்காரம் பண்ணி ஓடி போயிட்டான். இப்படி என்னிடம் அபச்சாரம் பண்ணின ஒருத்தனை, நீங்கள் இவ்வளோ கோச்சிண்டேளே, இப்ப என்னை இந்த ராவணன் தூக்கிண்டு வந்துட்டான், அவன் கிட்ட இருந்து நீங்க என்னை மீட்க வேண்டாமா? நான் என்ன தப்பு பண்ணினேன், அப்படினு சீதை புலம்புறா.

அப்பறம், அடையாளமா ஏதாவது சொல்லுங்கோன்னு சொன்னதுனால, தான் துணியில கட்டி வெச்சிருந்த, சூடாமணிங்கற தலைல போட்டுக்ற ஒரு ஆபரணம், சீதாதேவியோட கல்யாண காலத்துல அது போட்டுண்டு இருந்தா அப்படின்னு அவளே சொல்றா, “இந்த சூடாமணியை ராமர் கிட்ட காட்டு, இதை பாத்தா அவருக்கு , என்னுடைய ஞாபகம், என்னுடைய அப்பா, அம்மா தன்னுடைய அப்பா எல்லாரோட ஞாபகம் வரும், அதனால இந்த சூடாமணியை ராமர் கிட்ட காண்பி”, அப்படின்னு அதை எடுத்து கொடுக்கறா.

அப்பறம் இன்னொரு சமாச்சாரம் சொல்றா, ஒரு நாளைக்கு நாங்க போயிண்டு இருந்த போது , என் நெத்தில பொட்டு, திலகம் அழிஞ்சிருந்தது, அப்போ அவர்

சிகப்பான மனச்சிலா என்ற ஒரு கல்லை உறைச்சு, அந்த பொட்டை எடுத்து என் நெத்தில இட்டு, கன்னத்திலேயும் பூசி விட்டார், இதை ஞாபகப்படுத்து, அப்படின்னு சொல்றா, இது இவாளுக்குள்ள உள்ள இருக்கற ஒரு ரஹஸ்யமான, ஒரு intimate ஆனா ஒரு விஷயம்.

அதுக்கப்பறம் ரொம்ப பரிதாபமா சீதாதேவி

हनुमन्यत्नमास्थाय दुःखक्षयकरो भव।।

ஹனுமன், யத்னமாஸ்தாய துக்கக்ஷயகரோ பவ

“எப்படியாவது முயற்சி பண்ணி இந்த கஷ்டத்துலேர்ந்து என்னை காப்பாத்துப்பா, என்னுடைய துக்கத்தை போக்கு” அப்படின்னு சொல்றா, அந்தமாதிரி நம்முடைய பாபத்னால நமக்கு துக்கம் வருது, அந்த துக்கம் போகணும்னா, நம்ம இந்தமாதிரி நான் பெரியவன் என்று நினைக்காமல், என்னுடைய வினைகள் போகணும்னு, பணிவா பகவான் கிட்ட வேண்டிண்டா, அவருடைய கருணை ஏற்பட்டா தான், நம்மளுடைய கஷ்டங்கள் தீருமே தவிர, நாம ஏதோ சுவாமிக்கு பண்றோம், ஒரு பூஜை பண்றேன், அல்லது ஒரு ஸ்தோத்ரம் சொல்றேன், இல்ல ஒரு கோவிலில் போய் ஏதோ செலவு பண்ணி மண்டகப்படி பண்றேன்னா, அதுனால மட்டும் நம்மளோட கஷ்டம் தீராது. ஸ்வாமியோட கணக்கு வழக்கு கெடையாது. அவருடைய க்ருபை ஏற்படும்படியா நாம நடந்துக்கணும், அப்படி “ஹனுமன், யத்னமாஸ்தாய துக்கக்ஷயகரோ பவ” முயற்சி பண்ணி என்னுடைய துக்கத்தை போக்கு அப்படின்னு சொல்றா.

ஒரு பத்து ஸ்லோகம் லக்ஷ்மணனோட குணங்களை கொண்டாடி, அந்த ராமருக்கு லக்ஷ்மணன் கிட்ட ரொம்ப பிரியம், என்னைக் காட்டிலும் லக்ஷ்மணன் கிட்ட தான் பிரியம், அப்பேற்பட்ட அந்த லக்ஷ்மணனுக்கு க்ஷேமத்தை சொல்லுன்னு சொல்றா. அவனையும் தயவு பண்ண சொல்லுனு சொல்றா, லக்ஷ்மணன் கிட்ட அபசாரமா ஒண்ணு பண்ணிணதுனால, அந்த கோபத்துனால நம்மை வந்து இன்னும் மீட்கவில்லையோ அப்படின்னு நெனைச்சிண்டு, அந்த மாதிரி என் தப்புகளெல்லாம் மன்னிச்சு என்னை வந்து மீட்டுண்டு போக சொல்லு அப்படின்னு சொல்றா.

அப்பறம் சீதை ஒண்ணு கேட்கறா "ஹே ஹனுமான், நீ வாயுகுமாரன், நீ கருடனை போல, வாயுவை போல எங்கும் போகற. அதனால நீ கிளம்பி வந்துட்ட, கடல் தாண்டி வந்து என்ன பார்த்த. மத்த வானராள் எல்லாம் எப்படி வருவா, மேலும் ராமலக்ஷ்மணா எப்படி வருவா? இந்த கடல்தாண்டி எப்படி வருவா" அப்படின்னு கேட்ட போது, ஹனுமார் சொல்றார் "அம்மா சுக்ரீவனோட சந்நிதியில், எனக்கு ஸமமான வீரர்களோ, எனக்கு மேலான வீரர்களோ தான் உண்டே தவிர, எனக்கு கீழ ஒருத்தருமே கிடையாது" அப்படிங்கறார் ஹனுமார். அவர் அவ்வளோ humble, அவர் அப்படி நிஜமாவே தன்னைப் பத்தி அவ்வளோ humbleஆ நினைக்கிறார், சுக்ரீவனோட சந்நிதியில ஏவல் கூவல் பணி பண்றவன் நான் என்கிறார். ஒரு headmaster ஒரு letterஐ post பண்ணனும்னா, ஒரு சின்ன பையனை கூப்பிட்டு "இந்தாடா இதை போய் போஸ்ட் பண்ணு"னு சொல்வார், அதுக்குப் போய் HODஐ கூப்பிடுவாரா, அந்த மாதிரி, சுக்ரீவனோட சந்நிதியில் ரொம்ப எளிமையானவன் நான், அதனால தானே என்ன தூதனா அனுப்பிஇயிருக்கா, இதுலேர்ந்தே தெரியலையா" அப்டிங்கறார் ஹனுமார், "நானே வந்துட்டேன்னா அவாள்ளாம் பூமியே ப்ரதக்ஷிணம் பண்ணுவா, அதனால வனரா எல்லாம் ஒரு எம்புல இங்க லங்கைல வந்து குதிச்சுருவா, ராமலக்ஷ்மணாளை நான் என் தோள்ள தூக்கிண்டு வந்துடுவேன், நீங்க கவலை படாதீங்கோ, அப்படின்னு சொல்லிட்டு, இந்த ஸ்லோகத்தை சொல்றார், "அஸ்மின் தேஷே" இந்த தேஷத்தில், நீங்கள் ரொம்ப நாள் வசிக்க வேண்டிய நிர்பந்தம் இருக்காது, இந்த ராக்ஷஸர்களின் துன்பத்தில் இருந்து உங்களுடைய பிரியமான ராமர் வந்து, உங்களை மீட்டுண்டு போவார்" அப்படின்னு சொல்றார்

"மா ருதோ தேவி ஷோகேன மாபூத் தே மனஸோsப்ரியம்", அழதம்மா உன்னுடைய மனஸுக்கு அப்ரியமான விஷயங்கள் எதுவுமே நீ இனிமே எதையும் நினைக்க வேண்டாம், "ஷசீவ பத்யா ஷக்ரேன பத்யா நாதவதி ஹ்யஸி, எப்படி சசி தேவிக்கு இந்திரன் இருக்கானோ, அந்த மாதிரி உனக்கு உன் கணவர் ராமர் இருக்கார், நீ அநாதை கிடையாது" அப்படின்னு சொல்றார் 'ராமாத் விஷிஷ்டஹ கோன்யோஸ்தி, கஸ்சித் சௌமித்ரினா சம:' ராமருக்கு

சமமா யாரிருக்கா, லக்ஷ்மணனுக்கு சமமா யாரிருக்கா? “அக்னி மாருத கல்பௌ தௌ ப்ராதரௌ தவ ஸம்ஷ்ரயௌ” அக்னியையும், வாயுவையும் போன்ற அவ்வளவு பராக்ரமம் படைத்த அவர்கள், உனக்கு துணையா இருக்கா, அதனால் நீ ஏன் கவலைப்படற, இனி கவலைப்பட வேண்டியதே இல்லை நீ” அப்படின்னு அவ்வளோ powerfulஅ வார்த்தைகள் சொல்றார் “தமரிக்னம் க்ருதாத்மானம் க்ஷிப்ரம் த்ரக்ஷ்யஸி ராகவம், லக்ஷ்மணம் ச தனுஷ்பாணிம் லங்காத்தவாரம் உபஸ்திதம்” இந்த லங்கையோட வாசலில் ராமரும் லக்ஷ்மணரும் தனுஷ்பாணியாக வில்லோடு வந்து நிக்கறதை வெகு விரைவில் நீ பார்ப்பாய்” அப்படீன்னு இந்த பத்து சர்க்கதுல ஒரு இருபது தடவை சொல்றார். “சீக்கிரம் வந்துடுவா, இதோ வந்துடுவா” அப்படீன்னு திரும்ப திரும்ப ஆறுதலான வார்த்தைகளை சொல்றார்.

சீதாதேவி, “ஹனுமான், என்னால இனிமே ராவணன் பேச்சைக் கேட்டுண்டு உயிரோட இருக்க முடியாது, இன்னும் ஒரு மாசம் பொறுத்துண்டு இருப்பேன், அதுக்குள்ள நீ எப்படியாவது அவாளை அழைச்சுண்டு வா”, அப்படீங்கறா. ஹனுமார் சரீன்னு சொல்றார். சீதை இன்னொன்னு சொல்றா. “நீ இங்க எங்கயாவது மறைவா இருந்துட்டு, நாளைக்கு போயேன், இன்னொரு நாள் உன் முகத்தை நான் பார்த்துண்டு இருக்கேன், எனக்கு உயிர் மேல, நம்பிக்கை வரும்”, அப்படீன்னு சொல்றா. அப்போ ஹனுமார், சொல்றார், “இல்லம்மா, நான் எவ்வளவு சீக்கிரம் போறேனோ அவ்வளவு சீக்கிரம் அவாளை அழைச்சுண்டு வந்துடுவேன், அதனால நான் கிளம்பறேன்”, அப்படின்னு சொல்லிட்டு, சீதா தேவிகிட்ட உத்தரவு வாங்கிண்டு, அந்த சூடாமணியை மடியில கட்டிண்டு, நமஸ்காரம் பண்ணிட்டு ஹனுமார் கிளம்பறார்.

அப்புறம் அசோக வனத்தை அழிச்சு, ராவணனை பார்த்து, அவனுக்கு நல்ல புத்தி சொல்லிட்டு, அவன், அவர் வால்ல தீ வைக்கறான், அதை கொண்டு, இலங்கையையே எரிச்சுட்டு, இலங்கையை எரிச்சதுனால சீதைக்கு ஏதாவது ஆபத்து ஆயிடுத்தோன்னுட்டு, பயந்துண்டு, திரும்ப சீதா தேவியை வந்து பார்க்கறார். “சீதாதேவி தான் நெருப்பை எரிப்பாளே தவிர, நெருப்பு சீதா தேவியை ஒண்ணும் பண்ணாது” அப்டீன்னு, தானும் நினைக்கறார், ஆகாசத்துல

சாரணர்களும், அதே வார்த்தைகளை சொல்றா. அப்புறம் நேர்ல வந்து சீதா தேவியை பார்த்து, நமஸ்காரம் பண்ணிட்டு, திரும்ப போறார். கண்டேன் சீதையை, அப்படீன்னு நண்பர்களுக்கு சொல்றார்.

நாஸ்மின் சிரம் வத்ஸ்யதி தேவி தேஷே ரக்ஷோகணை: அத்யுஷிதேதிரௌத்ரே |

ந தே சிராத்த ஆகமனம் ப்ரியஸ்ய க்ஷமஸ்வ மத் ஸங்கமகால மாத்ரம் ||

அப்படீன்னு இந்த ஸ்லோகம், நான் முதல்லயே சொன்ன மாதிரி, நாம் ஏதாவது தப்பான ஒரு இடத்துல இருக்கோம், அப்படீன்னு தோணித்துனா, இதை ஜபிச்சா அங்கேயிருந்து வெளியில வந்துடலாம், இடமாற்றம் ஏற்படும் அப்படீன்னு ஒண்ணு சொல்வா. இது சாதாரணமான ஒரு பலஸ்ருதி. மஹான்கள், ராமகிருஷ்ண பரமஹம்சர் போன்றவா, என்ன சொல்றான்னா, "நீங்கள் எல்லாம், குடம் குடமா, மனைவி, குழந்தைகள்,பணத்துக்காக, கண்ஜலம் விடறேள். பகவானுக்காக, இந்த மாதிரி கண் ஜலம் விட்டா, பகவான் கிடைப்பார்" அப்படீன்னு சொல்றார். அப்படி "காளிக்காக நீ என்னிக்கு அழுதே?" அப்படீன்னு கேட்கறார். அப்படி, இந்த மகான்கள், உலக விஷயங்கள்ல வெறுப்பு ஏற்பட்டு, உண்மையான பக்தி பண்ணும் போது, ஹனுமார், சீதா தேவிக்கு வந்து ஆறுதல் சொன்ன மாதிரி ஒரு குரு வந்து ஆறுதல் சொல்வார். அப்போ இந்த ஸ்லோகத்துக்கு என்ன அர்த்தம்னா, "இந்த material worldல, நீ ரொம்ப நாள் இருக்க வேண்டாம்", அவாளுக்கு இங்க இருக்கறதே ரொம்ப வெறுப்பா இருக்கும், "நீ சீக்கரமே பகவான் கிட்ட போயி சேர்ந்துடுவ, பகவான் உன்னை வந்து மீட்டு கொள்வார்". அப்படீங்கிற மாதிரி இதுக்கு ஒரு அர்த்தம் புரியும். மஹான்கள் வாக்கு, திருவாசகம் எடுத்தாலும் சரி, எல்லா மஹான்களும். அந்த மாதிரி, அச்சப்பத்துன்னு, ஒரு பத்து பாட்டு சொல்றார். இந்த சிவ பக்தி இல்லாதவாளை எல்லாம் எனக்கு பாக்கறதுக்கே பயமா இருக்கு, அப்டீங்கறார். இந்த, வாழ்க்கையே எனக்கு பாரமா இருக்கு, அப்டீங்கறார்.

உற்றாரை யான் வேண்டேன்; ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்;

கற்றாரை யான் வேண்டேன்; கற்பனவும் இனி அமையும்;

குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா! உன் குரை கழற்கே,

கற்றாவின் மனம் போல, கசிந்து, உருக வேண்டுவனே!

அப்டீன்னு, உற்றாரை யான் வேண்டேன், எனக்கு உறவுக்காரா யாரும் வேண்டாம், ஊர் வேண்டேன் பேர் வேண்டேன், எனக்கு, இந்த ஊர்காரன் னு பெருமை, இந்த ஊர்ல உனக்கு ரொம்ப நல்ல பேரு, இதெல்லாம் எனக்கு வேண்டாம். கற்றாரை நான் வேண்டேன், எனக்கு படிச்சவா வேண்டாம், கற்பனவும் இனி அமையும், நானும் இனி எதையும் புதுசு புதுசா, படிக்கவே போறது இல்லை, குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தா, குற்றாலத்துல இருக்கற கூத்தாடும் சிவ பெருமானே, உன் குரை கழற்கே, கற்றாவின் மனம் போல உன் பாதங்களுக்கு, ஒரு தாய் பசு கன்றை நினைத்து எப்படி ஏங்குமோ, அந்த மாதிரி, கசிந்துருக, வேண்டுவனே, எனக்கு அந்த உருக்கத்தை கொடு, அந்த பக்தி, நான் பண்ணிணேன் என்றால் என்னை நீ தானா வந்து என்னை மீட்டுண்டு போயிடுவ, அப்படீன்னு மஹான்கள் சொல்ற மாதிரி, இந்த ஸ்லோகத்துக்கு அர்த்தம்.

அதே மாதிரி, நீ இன்னும் கொஞ்ச நேரம் இரு ஹனுமான்! உன்னை பார்த்துண்டே இருக்கறது எனக்கு ஒரு ஆறுதலா இருக்குன்னு, சொல்ற மாதிரி, நாம குருவை தரிசனம் பண்ணி, அவர், கொஞ்சம், அந்த பகவானோட லவலேசத்தை, அந்த அனுபவத்தை காண்பிச்ச பின்ன, குரு மேல ரொம்ப ஒரு பிடிப்பு ஏற்படறது. ஆனா குருங்கிறவர் வழி காண்பிச்சுட்டு அவர் போயிடறார். பகவானை அடையணும்கிற இலட்சியத்தை நமக்குள்ள, ஏற்படுத்திட்டு, குருங்கிறவர், மறைஞ்சு போயிடறார். அந்த மாதிரி ஹனுமார், திரும்பியும் ராமர் கிட்ட போறார். ராமரை அழைச்சுண்டு வரார். அந்த மாதிரி, நாம் குரு காண்பிச்ச ஒரு பஜனத்தை பண்ணனும், அவர் உயிரோட இல்லையே, அப்டீங்கிறதை நினைச்சு, நினைச்சு ரொம்ப தாப பட வேண்டியது இல்லை. குரு என்கிற மாலுமி நம்முடைய படகை ஓட்டினாலும், பகவானுடைய அனுக்ரஹம் என்ற அனுகூல காற்று வீசினா தான், நாம கரை சேர முடியும். அதனால, குரு பண்றது எல்லாமே சரி. அவர் நமக்கு முன்னாடியே இருந்துண்டு இருக்கணும், அப்ப தான் அனுக்ரஹம், அப்படீன்னு நாம நினைக்க கூடாது, அவர் சொல்லி

கொடுத்தத கேட்டு, அதன் மூலமாகவே நாம பகவானை நெருங்கிண்டு இருக்கோம், அப்படீன்னு நம்பிக்கை வெக்கணும், இப்படி ரொம்ப ஒரு அழகான ஸ்லோகம்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம

ராமேதி மதுராம் வாணீம்;ஸீதேதி மதுராம் வாணீம்

இன்னிக்கு வால்மீகி ராமாயண ஸ்லோகம், பாலகாண்டத்துல இருபத்திரெண்டாவது ஸர்க்கத்துல, ஒரு ஸ்லோகம்

अध्यर्धयोजनं गत्वा सरय्वा दक्षिणे तटे। रामेति मधुरां वाणीं विश्वामित्रोऽभ्यभाषत ॥

அத்யர்த்த யோஜனம் கத்வா, ஷரைய்வா தக்ஷிணே தடே |

ராமேதி மதுராம் வாணீம் விஷ்வாமித்ரோப்யபாஷாத ||

அப்படினு சொல்லி ஒரு ஸ்லோகம், அத்யர்த் யோஜனம் அப்படின்னா, ஒன்றரை யோஜனை. ஒரு யோஜனை எட்டு மைல்ம்பா, பத்து மைல்ம்பா,பத்து மைல்னு வெச்சுக்கலாம். ஒரு பதினைந்து மைல் போன பின்னா, விஷ்வாமித்ர மஹரிஷி, சரயு நதியின் தடத்தில், கரையில், ராமலக்ஷ்மணர்களை திரும்பி பார்த்து, “ராமேதி மதுராம் வாணீம்”, ராமா என்ற இனிமையான வார்த்தையை சொல்லி, மதுரமான வார்த்தைகளை கூறி, அவர்களை அழைத்து “உங்களுக்கு நான், பலா அதிபலா (பலை அதிபலை) அப்படின்னு ரெண்டு மந்த்ரங்கள் உபதேஸம் பண்றேன். இந்த காட்டு வழில போகும்போது, களைப்போ, பசியோ, தூக்கமோ ஏற்படாது, நீங்க தூங்கும் போது உங்களை ராக்ஷர்கள்லாம் ஹிம்சை பண்ணாம முடியாம இருக்கும், இந்த மந்த்ரம் உங்களை காப்பாத்தும்” அப்படின்னு சொல்லி அந்த மத்ரங்களை உபதேஸம் பன்றார். அவா ரெண்டு

பேரும், ஸ்னானம் பன்னிட்டு, ஆசமனம் பண்ணிட்டு, இவர் மந்த்ரோஉபதேஸம் பண்ணார், அதை அவர் repeat பண்றா, அந்த மத்ரங்களை க்ரஹிச்சுக்குறா. அப்படி உபதேசம் வாங்கிண்ட பின்ன, ரொம்ப தேஜஸோட விளங்குகிறார்கள். அப்படின்னு வரும்.

இந்த இருபத்திநாலாயிரம் ஸ்லோகம் வால்மீகி ராமாயணத்துல, இந்த இடத்துல, ராமேதி மதுராம் வாணீம் அப்படின்னு வர்றது. சுந்தர காண்டத்துல சீதாதேவி ஹநுமார்க்கிட்ட, “என் ராமர் என்னை ஞாபகம் வெச்சிண்டு இருக்காறா? ஏன் வந்து இன்னும் என்ன காப்பாத்திண்டு போல, நான் என்ன தப்பு பண்ணேனேன்?”ன்னு ரொம்ப வருத்தமா பேசும் போது, ஹனுமார் பதில் சொல்லறார் “அம்மா உங்களை ராமர் ஒரு க்ஷணம் கூட மறக்கவில்லை. அவர் சரியா சாப்பிடறது இல்லை, சரியா தூங்கறது இல்லை, எப்பவுமே உங்களையே தான் நெனைச்சிண்டு இருக்கார், எப்பவாவது ஒரு அஞ்சு நிமிஷம் கண் அசந்தாகூட, “சீதா! அப்படின்னு சொல்லி எழுந்துட்றார்”, ஹனுமார் சொல்றார் “கனவுல உங்களை பாத்து, “சீதேதி மதுராம் வாணீம்” அப்டின்னு சொல்றார் ஹனுமார்.

அந்த மாதிரி ராமாயணம் முழுக்க, இந்த இடத்துல ஒரு வாட்டி “ராமேதி மதுராம் வாணீம்” வறது, அந்த எடத்துல ஒரு வாட்டி ” சீதேதி மதுராம் வாணீம்” வறது, அந்த மாதிரி வால்மீகி முனிவருக்கு “ராமா சீதா” அப்படிங்கிற இந்த ரெண்டு பதங்கள் தான் மதுரமாக படறது, வேற எதுவுமே அவ்வளவு மதுரமாக இல்லை. அப்படி எல்லாத்துக்கும் மேல ஒரு மதுரமான ஒரு வார்த்தைகள் இந்த “ராமா, சீதாங்கறது” இந்த ராம நாமத்தை நாமும் ஜபம் பண்ணுவோம், சீதா ராமரை த்யானம் பண்ணுவோம்.

இந்த எடத்துல வேடிக்கையா ஒண்ணு சொல்லுவா, விஷ்வாமித்ரர், வசிஷ்டரைப் போல தானும் ப்ரஹ்மரிஷி ஆகணும்னு தானும் ஆசைப்பட்டார், அவர் தபஸ் பண்ணி “நீங்க ப்ரஹ்மரிஷி தான்”னு, ப்ரஹ்மாவே சொன்னாலும், “வசிஷ்டரரே வந்து சொன்னா, நான் திருப்தி ஆவேன்” அப்படின்ன உடனே, வசிஷ்டரரே வந்து “அப்படியே ஆகட்டும்”ன்னு சொல்றார், அப்படி அவர் ப்ராஹ்மரிஷி ஆனார்.

அப்பறம் வசிஷ்டர், இக்ஷ்வாஹு காலத்தில் இருந்தே இவளோட குடும்பத்துக்கு, குலகுருவா இருந்து எல்லாருக்கும், ஆயுஷ்ய ஹோமம், கல்யாணம் பண்ணி வெச்சு, எல்லா கார்யங்களையும் பண்ணிண்டு இருக்கார், வஷிஷ்டர் எதுக்காக அப்படி பண்ணார்னா, இந்த குலத்தில ராமர் வந்து பிறக்கப்போறார், அவனுக்கு ராமன் பேர் நான் வைக்கணும், அப்படின்னு, இவ்வளோ உழைச்சிருக்காராம். விஷ்வாமித்ரர்க்கு உடனே தானும், “ராமரோட இருக்கணும். எனக்கும் ராமரோட ஸங்கம் வேணும்” அப்படின்னு ஆசை. அவர் தசரதர் சபைக்கு வரார். தசரதர் கிட்ட “ராமனை என்னோட அனுப்பு”ங்கிறார், தசரதர் கலங்கறார், அப்பறம் இவர் கோச்சுக்கிற மாதிரி நடிக்கிறார், “என்ன கொடுத்த வாக்கை காப்பத்த மாட்டேங்கிற” அப்படின்னு கோச்சுக்குறார், அப்பறம், வசிஷ்டர் சமாதான படுத்தி, “நீ ராமனை அவரோட அனுப்பு, அவர் மிகுந்த நன்மைகளை செய்வார், உன் குழந்தைகளுக்கு” அப்படின்னு சொல்றார், அந்த மிகுந்த நன்மைகள் என்னன்னா, “அஸ்திர வித்தைகளை உபதேஸம் பண்ணப் போறார், மிதிலைக்கு கூட்டினு போய் சீதாதேவியை கல்யாணம் பண்ணி வைக்க போறார், அதனால உன் ராமனை விஷ்வாமித்ரரோட அனுப்பு”ன்னு வசிஷ்டர் சொன்ன உடனே, தசரதர் சமாதானம் அடைஞ்சு ராமரை அனுப்புறார். அப்படி, வசிஷ்டர் மாதிரி தனக்கும் அந்த ராமரோட ஸங்கம் கிடைக்கணும் கிடைக்கணும் அப்படிங்கிறது நடந்துடுத்துது.

அவர் போயிண்டே இருக்காராம், திடீர்னு அவர்க்கு வந்து, என்ன இருந்தாலும் வசிஷ்டர் குரு, அவர்வந்து உபதேஸங்கள்லாம் பண்ணி இருக்கார், வேதமெல்லாம் சொல்லித் தரார், நம்மளும், ஏதாவது ஒண்ணு உபதேஸம் பண்ணி, அதுலயும், வஷிஷ்டருக்கு ஸமானமா ஆயிடனும் அப்படின்னு சொல்லி, விஷ்வாமித்ரர் “வாங்கோ, நான் உங்களுக்கு, பலை அதிபலை என்ற ரெண்டு மந்த்ரங்களை உபதேஸம் பண்றேன்”, அப்படின்னு இந்த ரெண்டு உபதேஸம் பண்ணாராம், அப்படி வேடிக்கையா சொல்லுவா.

அப்படி இந்த ராமேதி மதுராம் வாணீம் எங்கிறத நினைச்சிண்டு, ராம நாமத்தை ருசிப்போம். தியாகராஜ ஸ்வாமிகள் 96 கோடி ஜெபிச்சு, ராம தர்ஷனம் பண்ணார். ஸ்மர்த்த ராமதாஸர் 13 கோடி ஸ்ரீ ராம ஜய ராம ஜய ஜய ராமா னு ஜபம் பண்ணி, ஹனுமாரோட தர்ஷனம் பண்ணிணார். அவரை ஹனுமாரோட அவதாரமாவே சொல்லுவா, அப்படி எல்லா மஹான்களும் நாம மஹிமையை சொல்றா. நம்ம தேசத்துல, சன்யாசிகளா போதேந்திராள் அவதாரம் பண்ணி, அவர் ராமநாமத்தின் மஹிமையை பத்தி ஒரு லக்ஷம் ஸ்லோகங்கள் எழுதியிருக்கார், இந்த ராம நாமத்துல ருசி வர்றது தான் எல்லாத்துக்கும் மேல. சமாதில நிஷ்டையா இருக்கறதை விட, ராம நாமத்துல ருசி வந்து அதை ஜபிச்சிண்டு இருக்கறது தான் பெருசு, அவ்ளோ தூரம் அவர், ராம நாமத்தின் மஹிமையை போதேந்திராள் சொல்லிருக்கார், அப்பேர்ப்பட்ட "ராமேதி மதுராம் வாணீம் விஷ்வாமித்ரோப்யபாஷாத" விஷ்வாமித்ரர் அந்த மதுரமான வார்த்தையை சொன்னார், ராமான்னு சொன்னார், அப்பறம் மந்த்ரோபதேஸம் பண்ணார்ன்னு, இந்த கட்டத்துல, இந்த ராமேதி மதுராம் வாணீம்ங்கிறத நெனச்சு, நாமும் நெறய ராம நாம ஜபம் பண்ணி, பேரின்பத்தை அடைவோம்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

<u>வால்மீகி ராமாயணத்தில் ஜோதிஷம்</u>

இன்னிக்கு வால்மீகி ராமாயணத்ல, ராம ஜனனம், பதினெட்டாவது சர்க்கத்துல, பாலகாண்டத்துல, ராம ஜனனம் ஆகபோறது, அந்த எடத்துல ஒரு ரெண்டு ஸ்லோகத்தை எடுத்துண்டு, ராமாயணத்துல ஜோசியத்தை பத்தி என்ன வரதுன்னு சொல்றேன்,

ततश्च द्वादशे मासे चैत्रे नावमिके तिथौ।।1.18.8।।

नक्षत्रेऽदितिदैवत्ये स्वोच्चसंस्थेषु पञ्चसु।

ग्रहेषु कर्कटे लग्ने वाक्पताविन्दुना सह।।1.18.9।।

प्रोद्यमाने जगन्नाथं सर्वलोकनमस्कृतम्।

कौसल्याऽजनयद्रामं सर्वलक्षणसंयुतम्।।1.18.10।।

विष्णोरर्धं महाभागं पुत्रमैक्ष्वाकुवर्धनम्।

ததஸ்ச த்வாதஸே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ ||

நக்ஷத்ரேSதிதிதைவத்யே ஸ்வோச்ச ஸம்ஸ்தேஷு பஞ்சஸு |

க்ரகேஷு கர்கடே லக்னே வாக்பதாவிந்துனா ஸஹ |

ப்ரோத்யமானே ஜகன்நாதம் ஸர்வலோகநமஸ்க்ருதம் |

கௌஸல்யா ஜனயத் ராமம் ஸர்வலக்ஷணஸம்யுதம் ||

விஷ்ணோர்அர்தம் மஹாபாகம் புத்ரமைக்ஷ்வாகவர்தனம் |

இன்னும், அடுத்தது, கைகேயி பூச நக்ஷத்ரத்தில் பரதனை பெற்றெடுத்தாள், க்ருஷ்ணருடைய ஜனனம், ராத்திரி பன்னெண்டு மணிக்கு, அதனால, கோகுலாஷ்டமிம் போது ராத்திரில பூஜை பண்ணுவா, ராமருடைய ஜனனம் காத்தால ஆறு மணிக்கு, அதனால, ராமநவமி பூஜை காத்தால பண்ணுவா. அன்னிக்கு காத்தால, ராமர் பொறந்தார், சாயங்காலம் பரதன் பொறந்தான், அடுத்த நாள், லக்ஷ்மணனனும், ஷத்ருக்னனும் சுமித்ரா தேவியிடத்தில் ஆயில்ய நக்ஷத்ரத்தில் உதித்தார்கள், இப்படி இந்த ராம ஜனன கட்டம் அப்படின்னு ஒரு பதினைந்து ஸ்லோகங்கள படிப்பா.

முதலில் "ததஸ்ச த்வாதஸே மாஸே" அந்த அஸ்வமேதயாக பூர்த்தில, ருஷ்யஸ்ரீங்க முனிவர் புத்ரகாமேஷ்டி பண்ணி, அதுனால தெய்வங்கள் த்ருப்தி அடைஞ்சு, ஒரு மஹாபுருஷர் அந்த வேதிலயே, அக்னியிலேயே வந்து, ஒரு தங்க பாத்திரத்தில் திவ்யமான பாயசத்தை கொடுத்து, "இதை உங்களுடைய மனைவிகளுக்கு பகிர்ந்து கொடுங்கோன்னு" சொன்ன உடனே, தசரதர் ரொம்ப சந்தோஷப்பட்டு, கௌஸல்யா தேவிக்கும், கைகேயி தேவிக்கும், சுமித்ரா தேவிக்கும் அதை பகிர்ந்து கொடுக்கிறார். ததஸ்ச த்வாதஸே மாஸே – அதிலிருந்து பன்னிரெண்டாடாவது மாஸத்தில், அதுல, பகவான் ரெண்டு மாஸம், தசரதர் கிட்ட இருந்து, பத்து மாஸம் தேவிகள் கிட்ட இருந்து, அதுக்கப்புறம், அவதாரம் பண்ணிணார்ன்னு ஒண்ணு சொல்லுவா. அந்த பன்னிரெண்டாடாவது மாஸத்தில், சைத்ரே , சித்திரை மாசத்தில், 'நாவாமிகே திதௌ' நவமி திதியில், "நக்ஷத்ரே அதிதி தெய்வத்யே" அதிதியை தெய்வமாக

கொண்ட, ஒவ்வொரு நக்ஷத்ரத்துக்கும், ஒரு அதிதேவதை இருக்கு, அந்த மாதிரி, அதிதியை தேவதையாக கொண்ட நக்ஷத்ரம், புனர்வஸு நக்ஷத்தரம், ஸ்வோச்ச ஸம்ஸ்தேஷு பஞ்சஸு, அஞ்சு கிரஹங்கள் உச்சத்தில் இருக்கும்போது, ” க்ரகேஷு கர்கடே லக்னே ” கற்கடக லக்னம், வாக்பதாவிந்துனா ஸஹ – அங்க வாக்பதி: வாக்பதின்னா ‘குரு’ ‘இந்துநா ஸஹ’ இந்துனா சந்திரன், so சந்திரன் கற்கடக லக்கினத்தில் இருக்கார், கூட குரு இருக்கார், குரு அங்க உச்சம், புனர்வஸு நக்ஷத்ரம். அப்படிப் பட்ட சுப முஹுர்த்ததில் ராமர் அவதரித்தார், அடுத்தது, பரதன் எந்த நக்ஷத்திரத்தில் பொறந்தான், ஷத்ருக்னன் லக்ஷ்மணன் எந்த நக்ஷத்ரத்துல பொறந்தா, அப்படிங்கிற விவரங்களும் இருக்கு.

இப்படி வால்மீகி ராமாயணத்துல, இந்த ஜாதகம், ஜனன காலத்தில் கிரஹங்கள் எங்கு இருக்கு, அதை பொறுத்து பலன், அப்படிங்கிற மாதிரி விஷயங்கள், இப்படி ராம ஜனனத்துல ஆரம்பிச்சு, நிறைய இடத்துல வர்றது. தசரத மஹாராஜா “என்னுடைய நக்ஷரத்தை, அங்காரகன், புதன், ராகு மூணுபேரும் சேர்ந்து பீடிக்கிறா, அதனால எனக்கு ஆபத்துன்னு, தெய்வஞர்கள், தெய்வஞஹ, அப்படின்னா ஜோஸ்யர்கள் அப்படின்னு இன்னிக்கி நாம useபண்ற வார்த்தை, தெய்வம் அப்படிங்கற வார்த்தைக்கே “fate”ன்னு அர்த்தம், destiny, தெய்வஞஹ: ணா fate என்ன அப்படிங்கிறது தெரிஞ்சவர்கள், அதாவது, ஜோஸ்யர்கள், “அவா அப்படி, என்னுடைய நக்ஷரத்தை புத அங்காரா ராகு, மூணுபேரும் சேர்ந்து பீடிக்கிறா, அதனால, ஆபத்துனு சொல்றா, அதனால என் பிள்ளை ராமனை, நாளைக்கே ராஜாவாக நான் பட்டாபிஷேகம் பண்ணிடறேன். நான் முடிவு பண்ணிட்டேன் என்றே, தசரத மஹாராஜா announce பண்ரார்.

சில பேர் நினைப்பா, “இவ்ளோ ஜோசியம், ஜாதகம் பாக்கறா, வசிஷ்டர் ப்ரஹ்மரிஷி இருக்கார், அவர் குறிச்ச நாள்ல ஏன் ராமர் பட்டாபிஷேகம் நடக்காம தடைப்பட்டுது?”, அப்படின்னு கேப்பா, அது இந்த விஷயம் தெரியாதவா தான் கேட்பா, “அந்த முதல் முஹூர்த்தம் ராமர் பட்டாபிஷேகதுக்கு வசிஷ்டர் குறிக்கல, அது தசரதர் தானே குறிச்சது. வசிஷ்டர்

கிட்ட கேட்திருந்தா, அவர் பதினஞ்சு வருஷம் பொறுத்து தான் முஹூர்த்தம் குடுத்திருப்பார்"னு ஸ்வாமிகள் சொல்லுவார், அந்த மாதிரி மஹான்களுக்கு முக்காலமும் தெரியும். அந்த தசரதர் குறித்த முஹூர்த்தத்துல, அந்த பட்டாபிஷேகம் நடக்கல. அவருக்கு உயிராபத்து தான் வந்தது. அப்பறமா 14 வருஷம் கழிச்சு பட்டாபிஷேகம் நடந்தது. இப்படி, ஜாதகம், ஸ்வப்னங்கள், அதனால வரக்கூடிய பலன்கள், பரதன் தசரதர் காலம் ஆன போது கெட்ட ஸ்வப்னம் காண்கிறான், த்ரிஜடை சீதைக்கு நன்மையான, ராக்ஷஷர்களுக்கு கெடுதலான ஸ்வப்னம் பார்க்கிறாள். இப்படி ஸ்வப்ன ஸாஸ்திரம் இருக்கு. ராமர் சித்ரகூடத்தில போய் பர்ணசாலை கட்டிண்டு தங்கினார், அடுத்தது கோதாவரி கரையில பஞ்சவடியில் போய் பர்ணசாலை கட்டிண்டு தங்கினார் அப்டிங்கிற எடத்துல வாஸ்து சாந்தி பண்ணிட்டு அங்கே தங்கினார். ஒரு வீடு கட்டினா வாஸ்து சாந்தி பண்ணிட்டு அங்க தங்கணும் அப்படிங்கிற விஷயம் வர்றது.

அடுத்தது, சாமுத்ரிகா லக்ஷணம் அப்படின்னு ஒருத்தருடைய உடற்கூறு, கண் எப்படியிருக்கு, காது எப்படியிருக்கு, உடம்பு பாகங்கள்லாம் எப்படியிருக்கு அப்படிங்கிறத வெச்சுண்டு, ஒரு பலாபலன்கள் சொல்றதுன்னு. சீதாதேவி ராமருக்கு உயிராபத்துன்னு நினைத்து அழும் போது, என்னுடைய சாமுத்திரிகா லக்ஷ்ணத்தின்படி நான் சக்ரவர்த்தினியாக முடி சூடிக்கொண்டு பிள்ளைகள்லாம் பெற்று நீண்டகாலம் இருப்பேன்னு சொன்னாளே, இப்படி ராமருக்கு ஆபத்து வந்துடுத்தே, அப்படின்னு பொலம்பறா. வைதவ்யம் வரலை, அப்படி அவ நெனச்சுக்கிறா, அந்த மாதிரி, அப்படி அந்த நாகபாஸத்தில அவா கட்டுண்டு இருக்கும் போது, பார்த்த உடனே கவலைப்படறா, அப்போ த்ரிஜடைன்னு கூட வந்தவ சொல்றா "இல்ல, அவருக்கு உயிராபத்து இல்ல, ஏதோ மயக்கமே இருக்கா அவ்வளவுதான்", கருடபகவான் வந்து அந்த நாகபாஸத்தில இருந்து அவாள விடுவிச்சுடறார். அந்த மாதிரி, சகுன சாஸ்திரம். இப்படி ராமாயணத்துல, நெறைய இடத்துல ஜோஸ்ய சமாச்சாரங்கள் வரது.

ஜோதிஷம் அப்படிங்கறது வேதாங்கம். வேதம் நான்கு, ரிக் யஜுஸ் ஸாம அதர்வம். அதுக்கு ஆறு அங்கங்கள், அதுல ஒண்ணு ஜோதிஷம். அப்படி ஜோதிஷம்ங்கிறது ஒரு வேத அங்கம், ஒரு சாஸ்த்ரம். அதுனால நம் தேசத்தில்

astronomy அப்படிங்கறது ரொம்பவே develop ஆயிருக்கு, இப்போ நான் சொன்ன இந்த நக்ஷத்ரம், மாஸம், திதி, லக்னம் இதுவே பெரிய calculation. இப்ப சொன்ன இந்த ரெண்டு வரியை வெச்சிண்டு ராமரோட ஜாதகத்தை போட்டுடலாம், அப்படி ஸம்ஸ்க்ருதத்தோட power அது, அப்படி astronomy அப்படிங்கறது ரொம்ப wonderfulஅ develop ஆயிருக்கு, இன்னிக்கும், formulaவ வெச்சிண்டு, அதுல கொஞ்சம் adjustment பண்றது, formulaவ வெச்சு கணிக்கற பஞ்சாங்கத்துக்கு வாக்ய பஞ்சாங்கம்னு பேரு, அது கூட நேரா வானத்தில் பாத்து கொஞ்சம் adjustment பண்றதுக்கு பேரு த்ருக்கணிதம், பார்த்து caliberations பண்ணி த்ருக் – பார்த்து, கணிதம் – calculations பண்ணி, பண்றதுக்கு, பேரு, த்ருக்கணிதம் னு பேரு. மஹாபெரியவா, நம்ம மடத்துல, த்ருக் கணிதம் தான், உபயோகப் படுத்தறோம், எல்லாரும், அதை உபயோகப் படுத்துங்கோ னு சொல்லி இருக்கா. ஸ்வாமிகள், அதைத் தான் உபயோகப் படுத்தினார். மடத்து பஞ்சாங்கம்னு சொல்வா. இன்னிக்கும், ஜோசியர்கள், த்ருக்கணிதம் தான் உபயோகப் படுத்தறா. ஏன்னா, அவாளுக்கு accuracy வேணும். அப்படி, ஒரு நாழிகை, வினாடி, தவறாம, correctஆ என்னிக்கு எப்போ, கிரகணம், பிடிக்கப் போறது, விடப் போறதுங்கிறது, முதற்கொண்டு, ஒரு விதமான, telescope மாதிரி equipment ம் இல்லாம, calculate பண்ண தெரிஞ்சிருக்கு. ஆதி காலத்துலேயே ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு, முன்னாடியே, நம்மோட முன்னோர்களுக்கு, தெரிஞ்சிருக்கு. அப்படி, astronomy ங்கிறது, ரொம்ப highly developed ஆ இருந்திருக்கு. astrology அப்படிங்கிறது, ஒரு astronomy + psychology = astrology ன்னு சொல்லலாம். அதுவும், உபயோகப் படுத்தியிருக்கா. முஹூர்த்தம், குறிக்கறது, ஒரு காரியம், எந்த க்ரஹங்கள் அனுகூலமா இருக்குமோ, அந்த மாதிரி, ஒரு வேளைல கார்யங்கள், ஆரம்பிச்சா நன்னா நடக்கும், அப்படீங்கிற நம்பிக்கையின் பேர்ல, முஹூர்த்தம் குறிக்கறதுங்கிறது, இன்னிக்கும் நாம, கல்யாணங்களுக்கு முஹூர்த்தம் குறிக்கறோம். இதெல்லாம், சாஸ்திரங்கள், இதெல்லாம், வந்து ராமாயணத்துல இருக்கு.

என்னுடைய அனுபவத்துல, ஸ்வாமிகள் தானே, பஞ்சாங்கம், ஜாதகம் பார்ப்பார். தினமும், கார்த்தால எழுந்தா, ஒரு நாளுக்கு, பஞ்ச அங்கம், அஞ்சு விதமான, sections ஆர் important aspects. ஒரு நாள் னா, திங்கட்கிழமையா அது, வாரம், திதி, வார, நக்ஷத்ர யோக, கரணம், அப்படீன்னு, அஞ்சு aspects. இந்த அஞ்சும், தெரிஞ்சுகறது, ஒரு புண்யம்னு சொல்லி இருக்கா. திதியை தெரிஞ்சுண்டா, வியாதி போகும், அப்படீன்னு, ஒண்ணொண்ணும், ஒவ்வொண்ணு பலாபலன் இருக்கு. மஹாபெரியவா, நித்யம், எழுந்த உடனே, கொட்டகைக்கு போயிட்டு வந்த உடனே, “பஞ்சாங்கத்தை எடுத்து, இன்னிக்கு, திதி, வார, யோக, கரண, நக்ஷத்ரம், படி”, அப்படீன்னு ஒருத்தரை, படிக்க சொல்லி, கேட்பா. அப்படி, அந்த ஒரு கார்த்தால, எழுந்து, அதை கேட்ட உடனேயே, ஒரு maths ல experts ஆ இருக்கிறவா, உடனே, அவாளால, detail ஆ calculations போட்டுட முடியும். அப்பறம் அன்னிக்கு ஒருத்தர், வந்து, யாரானும், ஒருத்தர், ஒரு கேள்வி, கேட்டான்னா,அவா கேட்கற அந்த வேளையோட குணத்தை, வெச்சுண்டு, அந்த வேளை, நல்ல வேளையா, சுமாரான வேளையாங்கிறதை வெச்சுண்டு, அவாளால, answer சொல்ல முடியும், அப்படி, mathematics ல, ஒரு, well developed mind ஆ இருக்கு, இதெல்லாம், இருக்கு. ஸ்வாமிகள், இதெல்லாம், தெரிஞ்சுண்டு, அவர் calculate பண்ணி, ஒருத்தரை, ஸ்வாமிகள், தெரிஞ்சுட்டார்னா அவாளோட, ஜாதகத்தை, குறிச்சு, அதுமூலமா, அவா அவாளுக்கு, வர ஆபத்தை,முன்னாடியே, ஒரு, உபாயங்கள், சொல்லி, உனக்கு, இன்ன தசா புக்தி ஆரம்பிக்கறது, தசா புக்தி,இல்ல, இன்னிக்கு, அவனுக்கு, என்ன தசை புக்தி, அந்தரம், வரைக்கும், ஸ்வாமிகளுக்கு தெரியும். அவாளுக்கெல்லாம் , மஹான்களுக்கு, அதனால, இன்னிக்கு, நீ இந்த trainல போகாதே, அடுத்த train ல போன்னு, சொல்வா. அது வந்து, அவாளுக்கு, பெரிய ஆபத்துல இருந்து காப்பாத்தும்.

அப்படி எல்லாம் இருந்தாலும், ஸ்வாமிகள், “இந்த science நன்னாயிருக்கு. இதோட, practitionersலாம், இந்த காலத்துல, சரியா இல்லை”ன்னு, அப்படீன்னு, சொல்லி, ஸ்வாமிகளும் சரி, சிவன் சாரும் சரி, என்னை இந்த

ஜோஸிய விஷயத்துல ஈடுபட அனுமதிக்கலை, அப்படீங்கிறதை,சொல்லி முடிக்கறேன்.

ஏன்னா, இந்த ஜோஸியம்ங்கிறது, ரொம்ப interesting science. ஒரு வாட்டி, தலையை, கொடுத்துட்டா, அதுகுள்ளா, இருந்து, வெளியே வர்றதுக்குள்ள வயசாயிடும். கடவுள் தான், நம்மை மீட்டு விடணும். அவ்வளோ, interesting ஆ இருக்கும். ஆனா இந்த காலத்துல, அது ஒரு பிழைப்பா போயிடுது. மூணு கேள்வி, ஐநூறு ரூபாய். ஒரு மணிநேரம், ஜாதகம் பாக்கறதுக்கு, 2000 ரூபாய் அப்படி, போயிண்டு இருக்கு. அப்படி இருக்கிறவா, பேரு தெய்வக்ஞர்கள், கிடையாது.

தெய்வக்ஞர்கள் னா, முதல்ல, வேதம் படிச்சு, தர்மசாஸ்திர படி வாழ்ந்து, சத்ய நிஷ்டையினால் வாக் பலிதம் அடைந்து, முக்காலமும் உணர்ந்து, கருணையோட, ஜனங்களுக்கு, விதாயம் சொல்றவா. அவா வந்து, இதை வெச்சு சம்பாதிக்க மாட்டா. நிறைய ஜாதகங்கள் எல்லாம் பார்க்க மாட்டா. ஒரு நாளைக்கு, ஒரு ஜாதகம் தான் பார்ப்பா. இதை வெச்சு, சம்பாதிச்சு, மாடி வீடு கட்டினான்னா, அதுல பல ஆபத்துகள் இருக்கு. க்ரஹங்களுடைய கோபத்துக்கு ஆளாகி விடுவார்கள்.

“நாமளே, நம்மோட ஜாதகத்தை எல்லாம், கொண்டு போய், அடிக்கடி ஜோசியர் கிட்ட காண்பிக்கவே படாது” அப்படீன்னு பெரியவா எல்லாம் சொல்வா. ஒரு கல்யாணம், அது மாதிரி, முக்கிய நிகழ்ச்சிகள் போது தான், ஜோசியா கிட்டயே போகலாம். ஒரு ஜோசியனே என்னை, விரட்டி விட்டான். ரெண்டாவது தடவை போன போது, “இப்பதானே நீ வந்தே, ஆறு மாசத்துக்கு முன்னாடி, இதுதான், நம்ம பிராம்மணா கிட்ட. ஜாதகக்கட்டை எடுத்துண்டு வந்துட வேண்டியது, அவாள்லாம், உள்ள வெச்சான்னா, வருஷக் கணக்கா, தொடமாட்டா. போடா” அப்படீன்னார். அது ஒரு பெரிய அனுக்ரஹம். அதுக்கப்பறம் எனக்கு இந்த ஜாதகம் பாக்கணும்ங்கிற ஆசையே விட்டுப் போச்சு.

மஹான்கள், எப்படி, ஜோசியத்தை, உபயோகப் படுத்திண்டு இருந்தான்னா, மனசை, சமாதானப் படுத்திக்கறதுக்கு, வாழ்க்கைனா, இந்த ஏற்றத்தாழ்வுகள், இருக்கத் தான் செய்யும். நாம இங்க வந்து பொறந்துருக்கோம்னாலே,

வாழ்கையில பாபமும், புண்யமும், கலந்து, பண்ணி இருக்கறதுனால, தான், நமக்கு ஜன்மா வந்திருக்கு. அதனால பாபத்தோட effects வரத்தான் போறது. அப்படீங்கிற ஞானத்தோடு, கஷ்ட தசையில் மனசு தளராம இருக்கிறதுக்கு, ஒரு ஆறுதலுக்கு, இந்த ஜோசியத்தை, உபயோகப் படுத்தியிருக்காளே, தவிர, இதை வெச்சுண்டு, எனக்கு, promotion வருமா, நான் foreign போவேனாங்கிறது, எல்லாம் அந்த காலத்துல பண்ணலை.

அதாவது, கர்மா theory ன்னு ஒண்ணு இருக்குதான், அந்த கர்மா theoryல ஸ்வாமிகள் ஒண்ணு சொல்வார், இன்னின்ன கஷ்டத்துக்கு, ஏதோ திடீர்னு ஒரு, உடம்புக்கு வந்தது, ஒரு வியாதி வந்தது, திடீர்னு, ஒரு குடும்பதுல ஏதோ ஒரு கஷ்டம் வந்ததுன்னா, இந்த கஷ்டம் எதுனால, எந்த பாபத்தினால் வந்தது அப்படீன்னு, சொல்ற ஒரு புஸ்தகம் இருக்காம். அந்த புஸ்தகத்தை பார்த்து, அதுல சொன்ன ஒரு பரிகாரத்தை, பண்ணுவா. அந்த புஸ்தகதுல நான் பார்த்தபோது, நூத்துக்கு, தொண்ணூறு இடத்துல, விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் பரிகாரமா, சொல்லியிருக்கா. ஸ்ரீ ருத்ரஜபம், பரிகாரமா சொல்லி இருக்கா. அதுனால, நித்யம், சஹஸ்ரநாம பாராயணம், பண்ணிண்டு இருக்கிறவாளுக்கு, ஒரு விதமான கிரஹங்களும், ஒண்ணும் affect பண்ணாது, ரெண்டாவது,

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி

மாசறு திங்கள் கங்கை முடி மேல் அணிந்து என் உளமே புகுந்தவதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே

ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே!

போன்ற பதிகங்கள் இருக்கு. இந்த மாதிரி பதிகங்களைச் சொல்லிண்டு, பகவான் கிட்ட, பக்தி பண்ணிண்டு, இருக்கிறவாளுக்கு, கிரஹங்கள் ஒண்ணும் பண்ணாது. அடுத்தது சந்தியா வந்தனம், பண்ணும் போது, “ஆதித்யம் தர்ப்பயாமி” “ஸோமம் தர்ப்பயாமி” ன்னு நவ க்ரஹங்களுக்கு, தர்ப்பணம், பண்றவாளை, க்ரஹங்கள் ஒண்ணும் பண்ணாது. அப்படி நாம ஒரு தெய்வ வழிபாட்டை, ஒரு கடமையா பண்ணி, அடக்கத்தோட இருந்தா, ஒரு சின்னக்

கஷ்டம் வந்தாலும், என்னடா கஷ்டம் வரது, அப்படீன்னு, ஒரு ஜோசியன் கிட்ட போனா, இப்பல்லாம், மாட்டிக்கறோம். எல்லா ஜோசியாளும், பெரியவா அனுக்ருஹம் பெற்றவாதான். பெரியவாதான் அவாகிட்ட பேசறா, அப்படீ சொல்லிக்கறா.

ஒரு வாட்டி, சிவன்சாருக்கு நாடி ஜோசியத்துல, அவருடைய ஓலைச் சுவடி, யாரோ எழுதி கொடுத்திருக்கா. அதை படிச்ச பின்ன, நான் ஒருநாள், எங்கயோ காஞ்சிபுரம் தாண்டி, தேடி போயி, ஒரு நாடி ஜோஸியரைப் பார்த்தேன். அவன் சொன்னது, ஒண்ணும் புரியலை. பொதுவா நன்னாதான் சொன்னான். அதை வந்து, சிவன்சார் கிட்ட, சொன்னேன். நீ ஏன் போனேன்னு கேட்டார். இனிமே போகதே வேண்டாம் இது, அப்படீன்னு, சொல்லிட்டார். அது மாதிரி, இந்த காலத்துல, practioners சரியா இல்ல, கார்யங்கள், பண்றதுக்கு தெய்வ பலம், வேணும். மனித முயற்சியும் வேணும். யத்தனமும் பண்ணனும், அப்படீங்கிறதை வெச்சுண்டு, அந்த தெய்வ தெய்வ பலம் கூடறதுக்கு, ஏதாவது, ஒரு வழிபாட்டை, நித்யம், கடமையா, பண்ணிண்டு இருந்தா ஜோசியாள் கிட்ட போகாம இருக்கலாம். போகாம இருக்கறது, ரொம்ப க்ஷேமம். அவசியம்னா, வாழ்கையில ஒரு தடவை, ரெண்டு தடவை, ஆத்துல, கல்யாணம், வர்றது, அப்படீன்னா, நன்னா படிச்சவாளா, ரொம்ப ஒழுக்கம் இருக்கறவாளா, பேராசை இல்லாதவாளா, நமக்கு தெரிஞ்சவாளா, நம்ம க்ஷேமத்தை நினைக்கறவாளா, யாராவது, ஒருத்தரை, தெரிஞ்சுண்டு, அவா சொல்றதை கேட்டுண்டு, நம்ம கார்யங்கள், பண்ணிண்டு, போகலாம்., அப்படீங்கிறது, எனக்கு, அவா காண்பிச்ச வழி.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

<u>பதகமலஸேவாம்ருதரஸம் அஹம் கதா லப்ஸ்யே?</u>

இன்னிக்கி வால்மீகி ராமாயண ஸ்லோகம், கிஷ்கிந்தா காண்டத்துல ஆறாவது ஸர்க்கத்துல, ராமர் லக்ஷ்மணன் கிட்ட சீதா தேவியோட நகைகளை காண்பிச்சு, “ஹே லக்ஷ்மணா! பாத்தியா, இந்த நகைகள் இருக்கு, என் சீதையை காணுமே” அப்படின்னு சொல்லும்போது, லக்ஷ்மணன் ஒரு ஸ்லோகம் சொல்றான்,

नाहं जानामि केयूरे नाहं जानामि कुण्डले ।
नूपुरे त्वभिजानामि नित्यं पादाभिवन्दनात् ।।

நாஹம் ஜானாமி கேயூரே, நாஹம் ஜானாமி குண்டலே |

நுபுரே து அபிஜானாமி நித்யம் பாதாபிவந்தனாத் ||

அப்படின்னு சொல்றான. இந்த தோள்கள்ல போட்டுக்குற நகைக்கு கேயூரம் னு பேர், குண்டலங்றது காதுல போட்டுக்கறது, இந்த ஸ்லோகத்தோட அர்த்தம் என்னன்னா, “நாஹம் ஜானாமி கேயூரே”, இந்த தோள்கள்ல போட்டுக்கற கேயூரங்கள், தோள்வளைகள் எனக்கு அடையாளம் தெரியல, இந்த காதுல

போட்டுக்கற குண்டலங்களும் எனக்கு தெரியல, கால்ல போட்டுண்டு இருக்கற நூபுரம், நூபுரம்னா, சதங்கை அல்லது கொலுசு, அது எனக்கு அடையாளம் தெரியறது, "நித்யம் பாதாபி வந்தனாத்", தினமும் நமஸ்காரம் பண்ணும்போது பாத்திருக்கேன், இந்த கால்ல போட்டுண்டு இருந்த பாதஸரம் தான் எனக்கு அடையாளம் தெரியறது என்கிறார்.

இது context என்னன்னா, சீதாதேவிய ராவணன் தூக்கிண்டு போகும்போது, இந்த ரிஷ்யமூக மலைமேல, அஞ்சு வானராளை அவ பாக்காறா. சுக்ரீவன், ஹனுமார், நளன், நீலன், தாரன். அவாளை பார்த்த உடனே, சில நகைகள கழட்டி, தான் மேல போட்டுண்டிருந்த துணில சுருட்டி, "ராமர பார்த்தா காட்டுங்கோ" ன்னு சொல்லி தூக்கி இவா கிட்ட போடறா, இதை ராவணன் கவனிக்கல.

ஒரு pick-pocket வந்து எதையாவது எடுத்துண்டு அந்த sceneலேருந்து தப்பிச்சு ஓடும் போது, purse-மேல கவனம் வைக்கமாட்டான், தப்பிச்சு ஓடறதுலதான் கவனமா இருப்பான், அந்தமாதிரி, அவன் சீதாதேவியை கவனிக்கல, இந்த spotல இருந்து ராமலக்ஷ்மணா வரதுக்குள்ள ஓடிப் போகணும் எங்கிறதலதான் அவன் இருக்கான். அந்த நகைகள் தெய்வாதீனமா எதோ புல் மேல விழறது, ஒண்ணும் நசுங்காம இருக்கு, சுக்ரீவன் அதை எடுத்து வெச்சுக்கறான்.

பின்னாடி, ராமருக்கும் சுக்ரீவனுக்கு ஹனுமார் சக்யம் பண்ணி வைக்கறார். அப்போ, பேசிண்டு இருக்கும் போது சுக்ரீவன் சொல்றான், "ஒரு பெண்ணை ஆகாசத்துல, ஒரு ராக்ஷசன், தூக்கிண்டு போயிண்டு இருந்தான், அப்போ அவ ராம ராமன்னு கத்திண்டு போனா, அவ சில நகைகளை தூக்கி போட்டா" அப்படின்னு சொன்னஉடனே, ராமர் "ஆஹா, அது சீதாவாகத் தான் இருக்கணும். எனக்கு அந்த நகைகளை உடனடியா கொண்டு வந்து காண்பி" அப்படின்னு சொல்றார். அந்த நகைகளை கொண்டு வந்து காண்பிச்ச போது ராமர் புலம்பி அழறார்.

In fact, சுக்ரீவன், "இவ்வளவு துக்கப் படாதேங்கோ, உங்கள் உயிரே போயிடப் போறது, நீங்க படற துக்கத்தை பாத்தா, ரொம்பவே எனக்கு தாங்கலை. கொஞ்சம் சமாதானம் படுத்திக்கோங்கோ, நான் கூட மனைவியை இழந்து

இருக்கேன், நான் ஒரு அளவுக்கு சமாதானப் படித்திண்டு இல்லையா? ரெண்டு பேருக்கு ஒரே துக்கம் இருந்தா, அதனால ஒரு friendship வரது. இவா ரெண்டு பேருக்கும், அந்த மனைவியை இழந்த துக்கம். “கொஞ்சம் பொறுத்துக்கோங்கோ, நான் எப்படியாவது சீதாதேவியை தேடித் தருகிறேன்” அப்படின்னு சொல்றான் சுக்ரீவன், அது ராமருக்கு ஆறுதலா இருக்கு.

அப்போ லக்ஷ்மணன் கிட்ட “இந்த நகைகள பாக்கறேன் என் சீதைய காணமே, இது அவ போட்டுக்கற கேயூரம், இது அவ போட்டுக்கற குண்டலம்” அப்படியெல்லாம் சொல்லும்போது, லக்ஷ்மணன் சொல்றார் “”நாஹம் ஜானாமி கேயூரே, நாஹம் ஜானாமி குண்டலே , நுபுரே து அபிஜானாமி நித்யம் பாதாபிவந்தனாத்”

இந்த ஸ்லோகத்துக்கு, சாதாரணமாக அர்த்தம் எடுத்துக்கறதா இருந்தா, ஒரு fiction மாதிரி ராமாயணத்தை படிச்சா, லக்ஷ்மணன் சீதாதேவி போட்டுண்ட நகைகளை கவனிக்கலை. மனைவி போட்டுண்டிருக்கற நகைகளையே ஓரளவு தான் ஆம்பளைகள் கவனிப்பா, பெண்களுக்கு நகைகளில் இருக்கிற interest ஆம்பளைகளுக்கு இல்ல, அதனால “நன்னாயிருக்கா சரி” ன்னு அவ்வளவு தான். என்ன நகை என்ன design அதெல்லாம் உற்று பார்த்து, அடையாளம் சொல்ற அளவுக்கு தெரியாது. அப்படி இருக்கறச்சே லக்ஷ்மணனுக்கு சீதாதேவி மன்னி, அவ போட்டுண்ட நகை அடையாளம் தெரியலைனு சொல்றார், அப்படின்னு, ராமாயணத்தை கதை மாதிரி படிச்சா, இப்படி அர்த்தம் பண்ணிக்கலாம்.

இல்லை, ராமாயணத்திலேர்ந்து, நமக்கு நல்ல புத்தி வரணும், ஒழுக்கம் வரணும், அப்படின்னு நினைச்சு படிச்சோம்னா, “ஆஹா, எவ்வளோ உத்தமன் இந்த லக்ஷ்மணன்! ராமரையும் சீதாதேவியையும் அவன் நித்யம் நமஸ்காரம் பண்றான். அதனால பாதத்துல இருந்த நூபுரத்தைதான் அடையாளம் தெரியரது. மன்னியை கூட ஏறெடுத்து பார்க்காத குணம்”, அப்படின்னு அவன் ஒழுக்கத்தை போற்றி, நம்பளும் இப்படி இந்தமாதிரி, பிறர் மனைவிய ஏறெடுத்து பார்க்கக்கூடாது, அப்படிங்கிறது தெரிஞ்சிக்கலாம்.

ஆனா, ராமாயணத்தை ரொம்ப பக்தியோட படிச்சா, யாரு சீதாதேவியையும் ராமபிரானையும் நித்யம் நமஸ்காரம் பன்றாளோ, அவாளுக்கு லக்ஷ்மணன் மாதிரி காமமே அத்து போய்டும் அப்படின்னு புரிஞ்சுக்கலாம்.

அன்னிக்கு காட்டுக்கு கிளம்பும்போது சுமித்ரா தேவி சொன்னா, "ராமம் தசரதம் வித்தி", ராமரை தசரதராக நினைத்துக் கொள், "மாம் வித்தி ஜனகாத்மஜாம்", ஜனகர் மகளான சீதாதேவியை நான்னு நினைச்சிக்கோ, அம்மான்னு நினைச்சிக்கோ, "அயோத்யாம் அடவீம் வித்தி" காட்டை அயோத்தியாக நினைச்சுக்கோ, "கச்ச தாத யதாஸுகம்" நீ இஷ்டப் படுவது போல் ராமரோட போ, அப்டிங்கறா, போய்ட்டுவா ன்னு சொல்லலை அவ அம்மா. பகவான் கிட்ட போகும் போது எங்க திரும்ப வர்றது? அதனால, நீ உன்னிஷ்டப்படி ராமனோட போ என்கிறாள். "ராமனுக்காக நீ உயிரையும் கொடுக்கணும்" அப்படின்னு சொல்றா சுமித்திரை. அதே மாதிரி லக்ஷ்மணன் யுத்தத்துல உயிரையே குடுக்கறான். ஏதோ ஹனுமார் திரும்பவும் லக்ஷ்மணை உயிர்ப்பிச்சார். அப்படி அவன் அம்மா சொன்ன வார்த்தைய கேட்டு, எல்லாத்தையும் துறந்து, தன்னுடைய சுக போகங்களையும்சு, மனைவியும் துறந்து, காட்டுக்கு வறான். அவனுக்கு ராம கைங்கர்யம் கிடைக்கிறது.

அப்படி ராமரையும் சீதையும் நித்யம் நமஸ்காரம் பண்றதுனால, லக்ஷ்மணனுக்கு காமத்தோட ஞாபகமே இல்லாம போயிடறது. நமஸ்காரம் பண்ணும்போது, பாதத்தில் இருந்த அந்த நூபுரங்கள் மட்டும் தான் எனக்கு அடையாளம் தெரியறது என்கிற அளவுக்கு, ஒரு தூய்மையான ஒரு மனசு அவனுக்கு வந்துடறது.

கதை கேட்கிறோம், நம்மால் எதையுமே விட முடியவில்லை அப்படின்னு தோன்றுகிறது. ஆனால் மகான்கள் நம் மனக்கவலைகள் போகறதுக்கு பதகமல சேவாம்ருத ரஸம் தான் என்ற மருந்துன்னு சொல்றா.

कदा दूरीकर्तुं कटुदुरितकाकोलजनितं महान्तं सन्तापं मदनपरिपन्थिप्रियतमे ।

क्षणात्ते कामाक्षि त्रिभुवनपरीतापहरणे पटीयांसं लप्स्ये पदकमलसेवामृतरसम् ॥

கதா தூரீகர்த்தும் கடுதுரித காகோல ஜனிதம்

மஹாந்தம் சந்தாபம் மதனபரிபந்திப்ரியதமே |

க்ஷணாத்தே காமாக்ஷி த்ரிபுவனபரீதாப ஹரணே

படீயாம்ஸம் லப்ஸ்யே பதகமலசேவாம்ருதரஸம் ||

அப்படின்னு மூக கவி சொல்றார். கடுதுரித காகோல ஜனிதம் – கடுமையான பாபங்கள் என்ற விஷத்தினால் ஏற்பட்ட, மஹாந்தம் சந்தாபம் – ஓயாத மனக்கவலை, இதை கதா தூரீகர்த்தும் – இதை நான் அப்படி போக்கிப்பேன்? மதனபரிபந்திப்ரியதமே – மதனனை எரித்தவருடைய மனைவியே, ஆனா இதுக்கு ஒரு மருந்து இருக்கு. த்ரிபுவனபரீதாப ஹரணே – மூவுலகத்தின் பரிதாபத்தையும் போக்க கூடிய படீயாம்ஸம் – திறமை வாய்ந்தது. அது எதுன்னா, அம்மா காமாக்ஷி, பதகமலசேவாம்ருதரஸம் – உன்னுடைய பாதகமலங்களுக்கு சேவை செய்வது என்ற அம்ருதம், இந்த மனக்கவலை என்ற விஷத்துக்கு முறிவு, அது எனக்கு எப்போது கிடைக்கும்? அப்படின்னு கேட்கறார். மாணிக்கவாசகரும்

புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாகிப்

பல்விருகம், ஆகி, பறவையாய்ப் பாம்பாகி,

கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய்,

வல்அசுரர் ஆகி, முனிவராய்த் தேவராய்,

செல்லா அநின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்!

மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்!

என்று பாடுகிறார். எந்த பிறவியாய் இருந்தாலும் எப்போது பகவானின் பாதங்களை பார்க்கிறோமோ அப்போது தான் மோக்ஷம். மோக்ஷம் னா ஆசைகளிலேர்ந்து விடுபடறது தான்.

அப்படி நாமும் லக்ஷ்மணன் மாதிரி நித்யம் சீதாராமரின் சரணகமலங்களில் நமஸ்காரம் பண்ணி, அவரை மாதிரி ராம கைங்கர்யமும் தூய்மையான மனுசும் நமக்கும் கிடைக்கணும்னு வேண்டிப்போம்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

சபர்யா பூஜித: ஸம்யக்

இன்னிக்கி வால்மீகி ராமாயணத்துல, ஆரண்ய காண்டத்து முடிவுல, ராமர் சபரி அப்படிங்கற ஒரு தபஸ்வினியை பார்க்கறார், அந்த எழுபத்தி நாலாவது சர்க்கத்துல ஒரு ஸ்லோகம்,

तौ च दृष्ट्वा तदा सिद्धा समुत्थाय कृताञ्जलिः ।

रामस्य पादौ जग्राह लक्ष्मणस्य च धीमतः॥

தௌ ச திருஷ்ட்வா ததா ஸித்தா சமுத்தாய க்ருதாஞ்ஜலி: |

ராமஸ்ய பாதௌ ஜக்ராஹ லக்ஷ்மணஸ்ய ச தீமத: ||

அப்படின்னு , சபரி ராமலக்ஷ்மணாளை பார்த்த உடனே எழுந்து வந்து கைக்கூப்பி, அவர்களுடைய பாதங்களை பற்றினாள், அப்படின்னு வர்றது. இந்த எடத்துல "சித்தா' அப்படின்னு ஒரு வார்த்தை வர்றது, அவள் சித்தபுருஷர்களை போல இருக்கா, அப்படின்னு சொல்றார் வால்மீகி. எப்படி அவ ஸித்தி அடைஞ்சா? ஒரு வேடுவ ஸ்த்ரீ, எப்படி, வேதம் படிச்சு, கர்ம, பக்தி, ஞானமார்கத்துல போய், மஹான்கள் அடையக் கூடிய நிலைமையை எப்படி அடைஞ்சா! அப்படின்னு கேட்டுண்டு ஸ்வாமிகள் அவளுடைய பூர்வ வ்ருத்தாந்தத்தை சொல்வார்.

பக்தி தான் முக்யம், அப்டிங்கிறது, இந்த சபரியோட கதை நமக்கு காண்பிச்சு குடுக்கறது. அவள் ஒரு வேடுவ குலத்துல பிறந்தாலும், அவளுக்கு "ஜாயமான கடாக்ஷம்" அப்படின்னு, பிறந்த போதே பகவானோட கடாக்ஷம், சிலர் பேர் மேல விழறது. அவாளுக்குத் தான் இந்த சாது மார்கத்துல இருந்து பகவானை அடையனும், அப்டிங்கிற இந்த எண்ணமே வர்றது. அப்படி அந்த சபரிக்கு இருந்ததுனால, அவளுக்கு ஒரு அஞ்சு வயசு ஆகும் போது பாக்கறா, அந்த வேடுவ குலத்தல எல்லாரும் ரொம்ப ஹிம்சை பண்றா. வேடுவ ஸ்த்ரீகள்லாம் கல்யாணம் பண்ணிண்டா, நாலுபேர பெத்துக்கறா. அவாளும் வேடர்களா இருக்கா, மேலும் மேலும் பாப மூட்டையைத்தான் ஏத்திக்கறா, இதுல, இந்த மாதிரி நம்ம ஜென்மாவிலேயே இருந்துற கூடாது, நாம இதுலேருந்து, மீளணும், அப்படின்னு அவளுக்கு தோண்றது. உடனே, யார் கிட்டயும் சொல்லிக்காம அந்த கூட்டத்லேருந்து விலகிடறா. அப்படின்னு ஒரு வார்த்தை, "யார் கிட்டயும் சொல்லாம விலகறது" எங்கிறது முக்கியம், ஏன்னா, ஒரு சிறைல இருக்கும்போது ஒரு திருடனுக்கு தப்பறத்துக்கு வழி தெரிஞ்சுடுதுத்ன்னா, அவன்பாட்டு தப்பிச்சு போய்டுணும், இன்னொரு கைதி கிட்ட சொன்ன , அந்த இன்னொருத்தன், அவன் weak-minded ஆக இருப்பான், அவன் போய் jail warden கிட்ட சொல்லிடுவான். அந்த மாதிரி நமக்கு வழிதெரிஞ்ச, நம்ம தப்பிச்சு போயிடணும். அந்த மாதிரி அவ அங்கேர்ந்து வேடுவ கூட்டத்துலேர்ந்து கிளம்பறா.

அவளுடைய பூர்வ புண்யத்துனால மதங்க முனிவரோட ஆஸ்ரமத்து பக்கத்துல வந்து, அந்த முனிவரை தர்சனம் பண்றா. உடனே அவளுக்கு இந்த முனிவருக்கு நாம் ஏதாவது கைங்கர்யம் பண்ணனும் அப்படிங்கற நல்லெண்ணம் வரது. என்ன பண்ணலாம் அப்படின்னு பாக்கறா. அவர் தினம், பம்பைங்கிற ஏரி பக்கத்துல இந்த மதங்க ஆஸ்ரமம் இருக்கு. அவர் தினமும் ஏரில போய் ஸ்னானம் பண்றாங்கிறத பாத்துட்டு, அவரும், அவரோட சிஷ்யர்களும் போற வழில இருக்கிற , சுள்ளியெல்லாம் பொறுக்கி, கொஞ்சம் தென்னம்குச்சி எடுத்து ஒரு தொடப்பம் பண்ணி, பெருக்கி, அவா நடக்கும் போது, கால்ல முள்ளெல்லாம் குத்தாம. சமையலுக்கு விறகு கொண்டு வந்து போடறா. அந்த மாதிரி சாஸ்த்ர சம்மதமான கைங்கர்யங்கள் பண்றா. அப்போ முனிவர் “யார் இந்த மாதிரி தினம் பண்றா?” அப்படின்ன உடனே, “ஒரு சின்ன குழந்தை வந்துருக்கா, அவ இந்த மாதிரி பண்றா” ன்ன உடனே, “சரி, நீங்கள் எல்லாம் சாப்பிட்ட உடனே அவளுக்கும் சாப்பாடு போடுங்கோ”, அப்படின்னு சொல்றார், அப்படி அவ அந்த இடத்துல இருந்துண்டு இருக்கா, தினம் முனிவரை தள்ளி நின்னு தர்சனம் பண்றது, அந்த கைங்கர்யங்கள் பண்றது, அப்படின்னு இருந்துண்டு இருக்கா. அவளுக்கு, அந்த மாஹானுடைய கடாக்ஷம் கிடைச்சதுனால, தனியான ஒரு த்ருப்தியோட இந்த சேவைகள் பண்ணிண்டு இருக்கா.

இந்த சபரிய பத்தி, முதல் சர்க்கத்துலயே , பால காண்டத்தோட முதல் சர்க்கத்துலயே, சங்க்ஷேப ராமாயணத்துலேயே, ரெண்டு மூணு வாட்டி, சபரி ராமரை சென்று தர்சனம் செய்தார், சபரியால் நன்கு பூஜிக்கப்பட்டார், சபரியிடம் விடைபெற்று கொண்டு, ரிஷ்யமுகமலைக்கு சென்றார், அப்படின்னு வரது. அந்த, இருக்கறதே நூறு ஸ்லோகம். அதுல, முழு ராமாயணத்தை சொல்லும்போது, யுத்தகாண்டத்தையே ரெண்டு ஸ்லோகத்துல சொல்றார், ஆனா சபரியைப் பத்தி இவ்ளோ பேசறா, அப்படி, “சபர்யா பூஜித: ஸம்யக்” சபரியால் மிக நன்றாக புஜிக்கப்பட்ட ராமர், அப்படியென்ன அவா நன்னா பண்ணினா? மத்த ரிஷிகளெல்லாம், ராஜாக்களெல்லாம் பண்ணிணதை விட சபரி என்ன பண்ணான்னா, அவ வந்து ராமருடைய அடியவர்களுக்கு பூஜை பண்ணா, மதங்கருக்கும், மதங்க சிஷ்யர்களுக்கும் கைங்கர்யம் பண்ணா,

அப்படி, அடியவர்களுக்கு, அடியவளா இருந்து அவ பண்ணதுதான், “சபர்யா பூஜித: ஸம்யக்” அது தான் உயர்ந்த பூஜை அப்படின்னு வால்மீகி முனிவர் குறிப்பிடறார். அப்படி அந்த, குஹன் போன்ற படகோட்டியும், ஜடாயு போன்ற பக்ஷிகளும், ஜாம்பவான் போன்ற கரடிகளும், ஹனுமார் சுக்ரீவன் போன்ற வானரர்களும், சபரி போன்ற வேடுவ ஸ்த்ரீயும், யாராயிருந்தாலும் பக்தி தான் முக்கியம் அப்படின்னு ராமாயணம் காண்பிக்கறது,

அப்படி அவ, மதங்க முனிவருக்கும், சிஷ்யர்களுக்கும் கைங்கர்யம் பண்ணிண்டு இருக்கா, எல்லா கூட்டத்திலேயும் யாராவது ஒரு அசத்து இருப்பாளே, அந்தமாதிரி “இந்த வயசான காலத்துல முனிவருக்கு என்னாச்சோ தெரியல, இந்த மாதிரி யாரோ ஒரு பொண்ணு பக்கத்துல இருக்கா”, அப்படின்னு யாரோ ஒரு வார்த்தை சொல்றா, அப்படி சொல்லிண்டே ஸ்னானம் பண்ண போறா, அப்படி பேசினவன் பம்பைங்கிற ஸரஸ்ல எறங்கின உடனே, அது நாத்தம் அடிச்சு சாக்கடையா போய்டுறது, கூவமாட்டம் ஆயிட்றது. எல்லாரும் பயந்து போய் முனிவர் கிட்ட சொல்றா, முனிவர் “நான் சொன்னேன்னு சபரியை போய் அதுல ஸ்னானம் பண்ண சொல்லு” அப்படிங்கிறார், அந்த சபரி “அப்படியே” ன்னு சொல்லி வந்து, அந்த பம்பைல எறங்குறா, எறங்கின உடனே அந்த ஏரி திரும்பவும் முன்ன போல, தெளிவான ஶுத்த ஸ்படிக ஜலமாட்டம் தூய்மையாக ஆகிடறது. அப்படி அவளோட பெருமைய எல்லாரும் புரிஞ்சிக்கிறா.

அப்பறம் மதங்கமுனிவரோட காலம் முடியும்போது, அவர் சபரிய கூப்பிட்டு,”நீ இங்க இருந்துண்டுஇரு, இன்னும் கொஞ்ச காலம் கழிச்சு ராமலக்ஷ்மணா னு ரெண்டு பேர் வருவா, அவாளை தர்சனம் பண்ணிட்டு, உபசாரம் பண்ணி, பூஜை பண்ணிட்டு, அப்பறம் நீயும் மேலுலகத்துக்கு வரலாம்” அப்படின்னு மதங்கமுனிவர் சொல்றார், இந்த வார்த்தையை திடமாக மனசுல வாங்கிகிறா. அப்படி அவளுக்கு ராம நாம உபதேசம் அவளுக்கு கிடைக்கறது. ராம நாமத்தையே சொல்லிண்டு இருக்கா, மதங்கர் வைகுண்டத்துக்கு போய்டுறார். மதங்க சிஷ்யர்கள் கிட்ட, “ராமர் எப்படி இருப்பார், லக்ஷ்மணர் எப்படி இருப்பார்” னு கேட்டுண்டு, அந்த ராமலக்ஷ்மண ரூபத்தையே த்யானம்

பண்ணிண்டு இருக்கா, ராம நாமத்தையே இடையறாது ஜபிச்சிண்டு இருக்கா. தினமும், அவா வந்தா அவாளுக்கு கொடுக்கணும் அப்படின்னு பழங்கள்லாம் எடுத்து வெச்சுக்கறா, இந்த சபரி கடிச்சு பாத்து, நன்னா இருக்கறத ராமருக்கு வெச்சாங்றது வால்மீகி ராமாயணத்துல இல்ல, அவ ரொம்ப, ஆச்சார, அனுஷ்டானத்தோட, ரொம்ப பாவனமான ரம்யமான அவளுடைய குடில் அப்படின்னு தான் இருக்கு. அந்த மாதிரி ராமலக்ஷ்மணாளை நெனைச்சிண்டே இருக்கா. எப்பாவது நாம தூங்கும் போது ராமலக்ஷ்மணா வந்துட்டு போய்ட்டா என்ன பண்றது, அப்படின்னு தூக்கத்தை விட்டா. அப்பறம் நம்ம சாப்பிட்டு கொண்டு இருக்கும்போது வந்துட்டு போய்ட்டா என்ன பண்றதுன்னு சாப்பாட்டையும் விட்டா. இப்படி சாப்பாடு, தூக்கத்தை விட்டு, ராம நாமத்தை சொல்லிண்டு, ராம ரூபத்தையே த்யானம் பண்ணிண்டு இருந்ததுனால, அவ ஜீவன் முக்தையா, சித்தபுருஷாளா போல ஆயிட்டா.

அப்பேற்பட்ட அந்த சபரியை, ராமலக்ஷ்மணா தர்சணம் பண்றா, அந்த சபரி அவாளுக்கு பூஜை பண்றா, அந்த சபரி என்ன கொடுத்தார், ராமர் அதை சாப்பிட்டாரா அப்படிங்கிறது “நைவேத்தியத்தின் போது வால்மீகி திரை போட்டுட்டார்” அப்படின்னு வேடிக்கையாக சொல்லுவா. வால்மீகி ராமாயணத்துல, பழங்களை கொடுத்தாள் ங்கறது வரைக்கும்தான் இருக்கு, அவர் அதை சாப்பிட்டாரா ங்கறது, அந்த line அங்க இல்லை. அதுக்கு அப்படி விளையாட்டா சொல்வா, வால்மீகி முனிவர் “நைவேத்தியத்தின் போது வால்மீகி திரை போட்டுட்டார்”.

அந்த சபரிகிட்ட ராமர் கேக்கறார் “நீ பண்ண தபஸுக்குக்கு பலன் கடச்சுதா, உன்னுடைய காமம், கோபமெல்லாம், அடங்கிடுத்தா, நீ உன்னுடைய குருவுக்கு பண்ணின சிஷ்ருஷைக்கு உனக்கு பலன் கிடைச்சுதா, திருப்தியா இருக்கியா?” அப்படின்னு கேக்கறார், அந்த சபரி சொல்றா “அவாளுக்கு பண்ணினதுக்கு அபார பலன் கிடைச்சுது. இன்னிக்கி உங்களுடைய தர்சனம் கிடைச்சுதுனால, நான் புனிதம் அடைந்தேன். பூரணமா திருப்தி ஆயிட்டேன்” அப்படின்னு சொல்றா.

அதுக்கப்பறம், ராமர் "இங்க மதங்க சிஷ்யர்கள் இருந்தா. அவாளோட மஹிமையை பத்தி தனுங்கிற கந்தர்வன் சொன்னான், அதெல்லாம் எங்களுக்கு கொஞ்சம் காண்பி", அப்படின்னு கேட்கறார், அதாவது "குரும் ப்ரகாஷயேத் தீமான்" அப்படின்னு ஒரு புத்திமானாக இருக்கிறவன், தன்னுடைய குருவினுடைய பெருமையை ப்ரகாசப் படுத்தணும், அப்படின்னு சாஸ்த்ரம், அப்படி அந்த சபரிக்கு அவளுடைய குரு, இந்த மதங்கர் மதங்க சிஷ்யர்கள் தானே, அவாளுடைய பெருமையை அவ மூலமாவே உலகத்துக்கு தெரியப் படுத்தணும், அப்படின்னு ராமர் கேட்கறார்.

அப்போ சபரி "ஆமா வாங்கோ. காண்பிக்கறேன்" என்று சொல்லி "அந்த மதங்க சிஷ்யர்கள் தினமும் ஏழு சமுத்திரத்தில் போய் ஸ்நானம் பண்ணிட்டு வருவா. வயசான காலத்தில் அந்த ஏழு சமுத்ரத்தையும் ஏழு கிணறுகளாக பக்கத்துலேயே வர வெச்சுண்டுட்டா. ஒண்ணுல பால் இருக்கு, ஒண்ணுல நெய் இருக்கு, ஒண்ணு கரும்பு சாறு, ஒண்ணு சுத்த ஜலம் அப்படி ஏழு கிணறுகள். அதுல ஸ்நானம் பண்ணிட்டு அவா பூஜை பண்ணின போது பகவானுக்கு போட்ட புஷ்பங்கள் இன்னும் வாடாமல் இருக்கு. அவா ஹோமம் பண்ணின அக்னி இன்னும் அணையாமல் இருக்கு" அப்படின்னு அந்த தனுங்கற கந்தர்வன் சொன்னதை எல்லாம் சபரி நேரே காண்பிக்கறா.

அதுக்கப்பறம் ராமர் கிட்ட "ஹே ராமா! எனக்கு இந்த உடம்பில் ரொம்ப தளர்ந்து போய் விட்டேன். நீ பார்க்க நான் என் குருநாதர் இருக்கற லோகத்துக்கு போகிறேன்." என்றவுடன் ராமர் "சரி"ன்னு சொல்றார். அப்பறம் அவ ஒரு நெருப்பை மூட்டி அதுல தன் உடம்பைக் குடுத்துவிட்டு ஒரு திவ்ய தேஹம் எடுத்துக் கொண்டு சபரி ஆகாசத்துல போறா. இந்த ஆரண்ய காண்டத்தின் முதலில் சரபங்க முனிவர் ராமர் கிட்ட தன்னுடைய புண்யத்தை எல்லாம் அர்ப்பணம் பண்ணிட்டு ராமர் கிட்ட உத்தரவு வாங்கிண்டு, உடம்பை நெருப்புல குடுத்துட்டு திவ்ய தேஹம் எடுத்துண்டு பிரம்ம லோகம் போனார்னு வரது. அவர் வேதம் படிச்சவர். முனிவர். அதே போன்ற ஒரு பாக்கியத்தை, அதே ராம தர்சனத்தோடு இந்தஉடம்பை விட்டுட்டு திவ்ய தேஹத்தோட தன்னுடைய குருமார்களான மதங்க முனிவரும் மதங்க சிஷ்யர்களும் எங்கு போனார்களோ அந்த ஸ்வர்கத்தை, இங்க ஸ்வர்கம் என்பதற்கு "ஸ்வ: கீயதே இதி ஸ்வர்க:" ஸ்வர்லோகத்தில் எந்த இடத்தை புகழ்ந்து பாடுகிறார்களோ அந்த வைகுண்டம்

அப்படின்னு அர்த்தம் பண்ணுவா. அப்படி சபரி வைகுண்டத்துக்கு போனாள். மோக்ஷம் அடைந்தாள்.

இந்த சபரி வ்ருத்தாந்தத்தை நினைக்கும் போது நாமும் அடியார்க்கடியனாக இருக்க வேண்டும் என்று தெரிஞ்சுக்கணும். அப்படி இருந்தால் அதில் பகவான் விரைவில் திருப்தி அடைந்து நமக்கு மோக்ஷம் குடுப்பார்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

<u>ஆதித்ய ஹ்ருதயம் ஸ்தோத்ர மகிமை</u>

வால்மீகி ராமாயணத்துல ஆதித்ய ஹ்ருதயம் அப்படின்னு அற்புதமான ஒரு ஸ்தோத்திரம். அகஸ்த்ய பகவான், ஸ்ரீ ராமருக்கு, யுத்தகளத்துல, உபதேசம் பண்ணினது.

ஆதித்ய ஹ்ருதயம் புண்யம் ஸர்வ சத்ரு விநாசனம் |

ஜயாவஹம் ஜபேந்நித்யம் அக்ஷய்யம் பரமம் சிவம் ||

ஸர்வ மங்கல-மாங்கல்யம் ஸர்வ பாப-ப்ரணாசனம் |

சிந்தா-சோக-பிரசமன-மாயுர்-வர்தன-முத்தமம் ||

என்று பலஸ்ருதியை முன்னாடியே சொல்லி ஆரம்பிக்கறார். "அப்பேற்பட்ட இந்த ஆதித்ய ஹ்ருதயத்தை, ஆசமநம் பண்ணிட்டு, மூணு தடவை ஜபிச்சு, சூரிய பகவானோட ஆசிர்வாதத்தை பெற்று, ராவணனோட போய் யுத்தம் பண்ணு, நீ வெற்றி பெறுவாய்", அப்படின்னு சொல்லி, அகஸ்த்ய பகவான், உபதேசம் பண்ணிட்டுப் போறார். அதே மாதிரி, ராமர் மூணு ஆவர்த்தி ஜபிச்சு, சூரிய பகவான் ப்ரத்யக்ஷ தெய்வம். அவர் பரம சந்தோஷம் அடைந்து நேராக ராமரிடம் "விரைவில் ராவண வதம் என்ற கார்யத்தை முடி" அப்படின்னு சொல்றார். அந்த ஆதித்ய ஹ்ருதயம் ஒரு முனிவர் வந்து உபதேசம் பண்ணி, அதனால ராமர்பலம் பெற்று, வெற்றி பெற்றார், அப்படிங்கிறது, அந்த whole context ஐ பாத்தா ரொம்ப அழகா இருக்கும்.

ராவணன், ரிஷிகளை ஹிம்சை பண்றவன், பெண்களை ஹிம்சை பண்றவன், பிறருடைய சொத்தை அபகரித்துக் கொள்ளுகிறவன், குபேரனுடைய புஷ்பக விமானத்தையும், லங்கை பட்டினத்தையும், அபகரிச்சுண்டுட்டான். இது அவனுடைய குணாதிசயங்கள். (ராவணன், சிவபக்தன்னு, வால்மீகி ராமாயணத்துல எங்கயும் இல்லை. அது ஏதோ பின்னாடி வந்தவா சொல்றான்னு நினைக்கிறேன். ராமர் சிவபக்தர்னு இருக்கு.) ராமர் குணங்களோ இதற்கு நேர்மாறு. பொறந்த நாள்ல இருந்து, அவருக்கு, ரிஷிகள் தான் எல்லாம். வசிஷ்டர் தான் ராமன்னு பேர் வெச்சார். விஸ்வாமித்ரர் கூட்டிண்டு போயி அஸ்திரங்களை எல்லாம் சொல்லிக் கொடுத்தார். பதினாலு வருஷம் காட்டுக்கு வந்த போது பரத்வாஜர், அத்ரி, சரபங்கர், சுதீக்ஷ்ணர், அகஸ்த்யர்னு தேடி தேடி போய் நமஸ்காரம் பண்றார். அப்படி பார்த்தா, வால்மீகி ராமாயணம்ங்கிறது, ரிஷிகளோட மகிமையை சொல்லும் ஒரு கதைனே சொல்லலாம். அவ்வளவு ரிஷிகளோட விஷயங்கள் வாரது.

பெண்களை மதிக்கறதுலயும் ராமர் தனி. தன்னுடைய அப்பா தசரதருக்கு யாரு மனைவியாக இருந்தாலும், அவாளை எல்லாம், தன்னுடைய அம்மாவா நினைச்சு மதிப்பார். அப்பேற்பட்ட குணம். கைகேயி "நீ காட்டுக்குப் போ" ன்ன உடனே, காட்டுக்குக் கிளம்பினார். மான அவமானம் பாக்கலை. அம்மா

சொன்ன வார்த்தை. அப்பா கொடுத்த சத்யம் அப்படின்னு கிளம்பினார். சீதையை, அன்பா நடத்தினார். ராமருக்கும் சீதைக்கும் இருந்த பரஸ்பர பிரேமையை, சுந்தர காண்டத்தை படிச்சு, நாம அதை அனுபவிக்கணும். அதை தனியா நான் ஒரு தடவை சொல்றேன். சீதையை பிரிஞ்சு ராமர் அவ்வளவு கஷ்டப் பட்டு, அப்புறம் இருக்கிற இடத்தை ஹனுமார் மூலமா கண்டுபிடிச்சு, அவளை ஆசுவாசம் பண்ணி, ராமர் கிட்ட வந்து ஹனுமார் கண்டேன் சீதையை, அப்படின்னு சொன்ன அன்னிக்கே யுத்தத்துக்கு கிளம்பிடறார். நேராக போயி பாலம் கட்டி, ராவணாதி ராக்ஷதர்களை எல்லாம் வதம் பண்ணி, சீதா தேவியை மீட்டுண்டு வரார். அப்படி பெண்கள்கிட்ட, அன்பும், பரிவும், மரியாதையும் இருக்கிறவர் ராமர்.

பரதனுக்கு, ஏதாவது கொஞ்சம் இந்த அயோத்தியை பதினாலு வருஷம், பாத்துண்டதுல, கொஞ்சம் ஆசை இருந்தா கூட, அவனே வெச்சுக்கட்டும், அப்படின்னு, நினைக்கிறார், அப்படி பிறர் சொத்துல ஆசை படாதவர். அப்பேற்பட்டவர் ராமர்.

இந்த ராமருக்கும், ராவணனுக்கும், யுத்தம். கடைசி யுத்தம். ராவணன் கடைசீயா அவன் மட்டும் தான் மிஞ்சறான். யுத்தத்துக்கு வரும்போது, அவனுடைய தம்பி, கும்பகர்ணன், பிள்ளைகள், இந்திரஜிது எல்லாரும் வதம், ஆயிட்டான்ன உடனே, அந்த கோபம் எல்லாத்தையும் வெச்சுண்டு வந்து கடுமையா யுத்தம் பண்றான். அவனும் பெரிய வீரன்தான். எல்லாரையும் யுத்தத்துல தவிக்க பண்ணிண்டு ராமர் கிட்ட வரான். அங்கே விபீஷணனை பார்த்த உடனே ராவணனுக்கு கடுங்கோபம் வர்றது, விபீஷணனை கொல்லணும், அப்டீன்னு, அவன் மேல ஒரு வேலை வீசறான். பக்கத்துல இருக்கற லக்ஷ்மண சுவாமி அதை தடுத்துடறார். இன்னொரு வாட்டி வேலை வீசறான். அதையும் லக்ஷ்மண சுவாமி தடுத்துடறார். உடனே ஒரு வேலை எடுத்து, லக்ஷ்மணன் மேல போடறான், லக்ஷ்மணர், இறந்தது போல ஆகிடறார். அப்போ, ராமர் பக்கத்துல அடிபட்டு விழுந்த லக்ஷ்மணனை பார்த்து, தவிக்கறார். ஹா, ஹா லக்ஷ்மணா அப்டீன்னு, மடில போட்டு அழறார். இராவணன் மேல படபடன்னு அம்பு போடு அவனை விரட்டிடறார். அப்புறம், லக்ஷ்மணனை வெச்சுண்டு புலம்பறார். “எப்பேற்பட்ட வீரன் நீ, என் பின்னாடி காட்டுக்கு வந்தியே, ஒரு

நாள் கூட என் கிட்ட கோபமா பேச மாட்டியே, ரொம்ப அன்பா இருந்தியே என்கிட்ட. உலகத்துல, சீதை மாதிரி ஒரு அன்பான மனைவி யாருக்காவது இருப்பாளா இருக்கும். ஆனா உன்னை மாதிரி, ஒரு தம்பி யாருக்கு கிடைப்பா. கார்த்த வீர்யார்ஜுனன் ஆயிரம் கைகளால ஆயிரம், அம்பை விடுவான்னு பெருமை. நீ ரெண்டு கைகளாலயே ஆயிரம் அம்பை விடுவியே. நீ என் பின்னாடி காட்டுக்கு வந்தே. எப்பேற்பட்ட வீரன் நீ. இப்ப நீ எமலோகத்துக்கு போயிட்ட. அதுனால, உன் பின்னாடியே நானும் எமலோகத்துக்கு வந்துடறேன். என்னால உன்னை பிரிஞ்சு உயிர் வாழ முடியாது. இங்க என்ன இருக்கு. ஒண்ணுமே வேண்டாம்" அப்படி எல்லாம் புலம்பறார். அப்புறம் சுஷேணர்ங்கிறவர், ஹனுமாரை பார்த்து "நீ திரும்பவும் போயி அந்த சஞ்ஜீவி மலையை கொண்டு வா", ன்ன உடனே, ஹனுமார் திரும்பவும் அந்த சஞ்ஜீவி மலையைக் கொண்டு வரார். அதுக்கு நடுவுல ராமர், கோபத்தோடு சொல்றார். "இன்னிக்கு இந்த ராமருடைய ராமத் தன்மையை இந்த உலகம் பார்க்கப் போகிறது. இன்னிக்குப் பொழுது சாயரதுக்குள்ள, இந்த உலகத்தில் ஒண்ணு, ராமர் இருக்கணும், இல்ல இராவணன் இருக்கணும்" அப்டீன்னு, பிரதிக்ஞை பண்றார்.

அதுக்கப்புறம் ஹனுமார், சஞ்ஜீவி மலையை கொண்டு வந்து, லக்ஷ்மணனை உயிர் பிச்சுடறார். அப்போ ராமர் லக்ஷ்மணன், கிட்ட "நீ இல்லேன்னா, நான், வாழ்ந்து என்ன ப்ரயோஜனம்னு நினைச்சேன்", அப்டீன்னு சொன்ன போது, லக்ஷ்மணன் சொல்றான். அவன் மயக்கதுலதான் இருந்திருக்கான், முழுக்க, உயிர் பிரியல. அதுனால "அண்ணா நீ பண்ண பிரதிக்ஞையை நிறைவேத்து, ராவணனை வதம் பண்ணு" அப்டீன்னு சொல்றான்.

ராமர், உடனே ராவணனோட யுத்தம் பண்றார். ராம ராவண யுத்தம். எல்லாரும் தள்ளி நின்னு, மலைகள் ல, மரங்கள் ல, இருந்து பாருங்கோ, நடுவுல வராதிங்கோ, அப்டீன்னு, warn பண்ணிட்டு, ராவணனோட யுத்தம் பண்றார். கடுமையான யுத்தம். அந்த ராம ராவண யுத்தம், யுத்த காண்டத்துல நூத்தி ஒண்ணாவது சர்கத்துல இருந்து நூத்தி பதினொண்ணாவது சர்கம் வரைக்கும், இதை வந்து நிறுத்தாம, படிச்சுடுவா. மூடி வெச்சுட்டு அடுத்த நாள் வந்து படிக்க

மாட்டா. ஏன்னா, ராமர் வந்து சத்யம் பண்ணி இருக்கார். பொழுது சாயரதுக்குள்ள ராவணனை வதம் பண்றேன்னு, ராமர் சொன்னதால, அன்னிக்கே அந்த ராவண வதம் வரைக்கும் படிச்சு முடிச்சுடுவா. அப்படி அந்த ராவண வதம் அந்த பத்து சர்கங்கள். ரொம்ப அழகா இருக்கும்.

ராமர், தரையில நின்னுண்டு இருக்கார். இராவணன் தேர்ல இருக்கான்ன உடனே, இந்திரன், மாதலி ன்னு, தன்னோட சாரதியை தேரோட அனுப்பறான். ராமர் அந்த தேர்ல ஏறி நின்னுண்டு இருக்கார். ரெண்டு பேரும், சம யுத்தமா ரெண்டு பேரும் பண்ணிண்டு இருக்கா. ஒருத்தரை ஒருத்தர், கடுமையா மோதிண்டு, உலகமே வியக்கும் படியா யுத்தம் பண்ணிண்டு இருக்கா. ககனம் ககனாகாரம், சாகரஸ் சாகரோபமா: | ராம ராவணயோர் யுத்தம் ராம ராவணயோரிவ || வானம் வானம் மாதிரிதான், ஸாகரம் ஸாகரம் மாதிரிதான். அதுக்கு ஒப்புமை சொல்ல முடியாது. அந்த மாதிரி ராம ராவண யுத்தத்துக்கு, ஒப்புமையே சொல்ல முடியாது.

அப்போ ராமர், " எந்த தைரியத்தில் நீ சீதா தேவியை, எந்த தைரியத்துல தூக்கிண்டு போனியோ, அதை நீ காமி. எப்படி நான் காரனையும், வாலியையும், கும்பகர்ணனையும் வதம் பண்ணினேனோ, அப்படி உன்னையும் நான் இன்னிக்கு வதம் பண்றேன்"னு சொன்னவுடன், ராமருக்கே தன்னுடைய கதையை திரும்பி சொல்லும்போது, தனி ஒரு உத்சாகம் வர்றது. ராவணனை கடுமையாக் காயப் படுத்தி விடுகிறார். உடனே, அவனுடைய தேரோட்டி, அவனை தள்ளிக் கூட்டிண்டுப் போயிடறான். அப்போ, இராவணன் தன் தேரோட்டியை திட்டறான். "இவ்வளவு அழகா ராமர் யுத்தம் பண்ணிண்டு இருக்கார், என்னைத் தள்ளி கூட்டிண்டு வந்து, எனக்கு அவமானத்தை உண்டாக்கிட்டியே, நான் ஒரு நாள் கூட யுத்தத்துல இருந்து ஓடி வந்தது கிடையாது. நீ எதிரிக் கிட்ட லஞ்சம் வாங்கினியா?", அப்டீன்னு கேட்கறான் இராவணன். "இல்ல இல்ல. எங்களுக்குப் பரம்பரையா, இந்த தொழில்ல ஒவ்வொண்ணும் பாத்துப் பண்ணனும். குதிரைகள், தளர்ந்துடுத்தா, இல்ல யுத்தம் பண்ற வீரன் தளர்ந்துட்டானா, இல்ல குதிரை போற அந்த வழி எல்லாம், மேடு பள்ளமா இருக்கா, அதெல்லாம் பார்த்துப் பண்ணனும், அதனால, நீ

தளர்ந்து உட்கார்ந்ததுனால நான் கூட்டிண்டு வந்தேன். ப்ரியமிதி அப்ரியம் கிருதம். உனக்குப் பிரியமா இருக்கும்னு நினைச்சு, நான் அப்ரியத்தைப் பண்ணிட்டேன். அப்டீன்னு உடனே, சரி சரி, இந்தா அப்டீன்னு, தன் கையில் இருக்கின்ற கங்கணத்தை கழட்டி கொடுத்துட்டு, திரும்பி யுத்தத்துக்குப் போனான்.

இராவணன், அந்த பக்கம் போயிருக்கும்போது, அகஸ்த்யர் வந்து ராமருக்கு ஆதித்ய ஹிருதயத்தை உபதேசம் பண்றார். ராமர் ஆதித்ய ஹ்ருதயம் ஜபிச்சு, யுத்தத்துக்குக் கிளம்பறார்.

ராம ராவண யுத்தம் நடக்கறது. ராமர், அம்புகளை போட்டு, ராவணனோட தலை விழறது, ஆனா, திரும்ப அவனுக்குத் தலை முளைச்சுடறது. இப்படி நூறு தடவை அவனுடையத் தலையை வீழ்த்தறார். ஆனா திரும்பத் திரும்ப முளைக்கறது. அப்போ மாதலி சொல்றார், நீங்க, இவன் மேல

பிரம்மாஸ்த்திரத்தைப் போடுங்கோ, அப்டீன்னு சொல்றார். உடனே ராமர், பிரம்மாஸ்த்திரத்தைப் போடறார். இராவணன் வீழ்ந்துடறான். இப்படி, உலகத்துக்கே, ஒரு கொடுங்கோலனா, லோக கண்டகனா இருந்த இராவணனை ராமர் வதம் பண்றார். தேவர்களும், ரிஷிகளும், பூமியில இருக்கிற எல்லா பிரஜைகளும், எல்லா ஜீவராசிகளும் ரொம்ப சந்தோஷப் படறது. எல்லா வானராலும் ஓடி வந்து ராமரை சூழ்ந்துண்டு, இராமச்சந்திர மஹராஜ் கி ஜய், அப்டீன்னு கோஷம் பண்றா. அப்பேற்பட்ட, ராமருக்கு, உத்சாகத்தை கொடுத்து, தைரியத்தை கொடுத்து, அவருடையப் பிரதிக்ஞை நிறைவேறதுக்குக் காரணமா இருந்தது, இந்த ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரம். அவசியம் எல்லாரும் கேட்க வேண்டியது.

இந்த ராம ராவண யுத்தம்ங்கிறது, எல்லார் life லயும் நடந்துண்டே இருக்கு. அதுல ராமரை நாம ஜெயிக்க வைக்கணும். அதுக்கு, ரிஷிகளை, ஆஸ்ரயிச்சு, ராமரை போல, தர்மத்தோட பக்கத்துல, சத்தியத்தோட பக்கத்துல இருந்தோம்னா, மனம் தளரும் போது, ஆதித்ய ஹ்ருதயம் மாதிரி, அவா சொன்ன வாக்கு, வந்து நிற்கும், காப்பாத்தும், அப்படிங்கிறதுக்கு, இந்த ஆதித்ய ஹ்ருதயம் ஸ்தோத்திரம் அழகான ஒரு அத்தாட்சியா இருக்கு.

இப்படி ஆதித்ய ஹ்ருதயம், எல்லா கவலைகளையும், எல்லா வருத்தங்களையும் போக்கும், வெற்றியை கொடுக்கும், மங்களங்களைக் கொடுக்கும், இதை எல்லாரும் கேட்போம்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத்ர மஹிமை

மஹாபாரதத்துல சாந்தி பர்வம்னு இருக்கு. அதுல யுதிஷ்டிரர், கிருஷ்ண பகவான் சொன்னபடி, பீஷ்மாச்சார்யாள் கிட்ட பலவிதமான தர்மங்களை கேட்டுக்கறார். அவர் அடுத்தது சக்கரவர்த்தி ஆகப் போறார். அதனால ராஜ தர்மங்களை கேட்டுண்டு, கடைசீல, இந்த ஆறு கேள்விகளை கேட்கறார். “கிமேகம் தைவதம் லோகே? கிம்வாபி ஏகம் பராயணம்? ஸ்துவந்த: கம்? கமர்ச்சந்த: ப்ராப்னுயுர் மானவா: சுபம்? கோதர்ம: ஸர்வ தர்மானாம் பவத: பரமோ மத:? கிம் ஜபன் முச்யதே ஜந்து: ஜன்ம ஸம்ஸார பந்தனாத்?” அப்டீன்னு கேட்கறார்.

இந்த கேள்விகளுக்கு, பீஷ்மாச்சாரியாள், ஆறு கேள்விக்கும் ஆறு பதில் சொல்றார். அந்த ஆறு கேள்விக்கும் பதில் சொல்லும்போது முடிவாக சொல்றார்.

“ஏஷமே ஸர்வ தர்மானாம், தர்ம: அதிகதமோ மத: |

யத் பக்த்யா புண்டரீகாக்ஷம் ஸ்தவைஹி அர்ச்சேன் நரஸ்ஸதா ||”

நான் அறிந்த வரையில் கமலக் கண்ணனான, புண்டரிகாஷனான, விஷ்ணு பரமாத்வை, “ரிஷிபி: பரிகீதானி”, ரிஷிகளெல்லாம் பாடும், வேதங்களில் உள்ள, ஒரு ஆயிரம் நாமாக்களை சொல்கிறேன். இந்த ஆயிரம் நாமாக்களை, “ஸ்தவைஹி அர்ச்சேன் நரஸ்ஸதா” இந்த ஸ்தோத்திரத்தை சொல்றதே ஒரு அர்ச்சனை. இதைச் சொல்வது தான் என்னை பொறுத்த வரைக்கும், “ஏஷமே ஸர்வ தர்மானாம், தர்ம: அதிகதமோ மத:” எல்லாத்துக்கும் மேலான தர்மம். அப்டீன்னு சொல்றார்.

விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத்ரத்திற்கு, ஆதிசங்கர பகவத்பாதாள் பாஷ்யம் எழுதி இருக்கார். அந்த பாஷ்யத்துல, “நாக்கு இருக்கு, நாமம் இருக்கு. சுலபமான இந்த வழியை, இந்த நாமங்களைச் சொல்வது ஏன் இவ்வளவு உயர்ந்த தர்மமாக பீஷ்மாசாரியாள் சொல்கிறார்?”, அப்டீன்னு கேள்வி கேட்டுண்டு, “இந்த நாம ஜபத்தால் செய்யும் பகவத் பஜனம் என்பது, எந்த ஒரு திரவ்ய, தேச, கால நியமங்களோ, தோஷங்களோ இல்லாதது. ஒரு ஹோமம் பண்ணா, அதுக்கு திரவ்யங்கள் சேர்க்கறோம். அதுல ஏதாவது தோஷம் இருந்தா, நமக்கு தோஷம் வரும். அப்படி, ஒவ்வொரு புண்ய கார்யத்துலயும் ஏதாவது தோஷங்கள் வரதுக்கு வாய்ப்புகள் இருக்கு. இந்த நாமத்தை ஜபிக்கும்போது எதுவும் தோஷங்கள் வராது. யாருக்கும் ஹிம்சை கிடையாது. ஆகையினால, இது, எல்லா தர்மத்துக்கும் மேற்பட்டது. பகவானோட அனுக்ரஹத்தை நேரடியாக பெற்றுத் தரக் கூடியது”, அப்டீன்னு, ஆதி சங்கரர் சொல்றார்.

ஆதி சங்கர பகவத் பாதாள் பாஷ்யத்துல, ஒவ்வொரு நாமாவளிக்கும், அழகழகா அர்த்தம் சொல்றார். சூரசேன:, அப்டீங்கிரதுக்கு, ஹனுமார் போன்ற சூரர்களை கொண்ட சேனையை படைத்த ராமர், அப்டீன்னு சொல்வார்.

ஸ்ருதி ஸ்மிருதி புராணானாம் ஆலயம் கருணாலயம் |

நமாமி பகவத் பாத சங்கரம்,லோக சங்கரம் ||

னு சொன்ன மாதிரி, இந்த ஆயிரம் நாமங்களுக்கும், வேத சாஸ்திர புராணங்களில் இருந்து ஆதி சங்கரர், ஒவ்வொண்ணுக்கும் எடுத்து சொல்றார்.

ஸுவ்ரத:, அப்டீங்கிரதுக்கு, பித்ரு வாக்ய பரிபாலனம் என்கிற விரதத்தையும், சரணாகதி கொடுப்பது என்ற விரதத்தையும் கொண்டவர், அப்டீன்னு சொல்வார். ஸுமுக:, அப்டீன்னா, இன்னிக்கு ராஜ்ஜியம் அப்டீன்னு சொன்ன அப்பா, நாளைக்கு காலம்பர கூப்பிட்டு, வன வாசம் அப்டீன்னு சொன்ன போது, எந்த முகம், கொஞ்சம் கூட வாடாம இருந்ததோ, அந்த தாமரை போன்ற முகம் படைத்த ராமர், அப்படி, ராமர், கிருஷ்ணர், நரசிம்மர், அப்படி எல்லா தெய்வங்களையும் எல்லா புராணங்களையும் வெச்சுண்டு, சொல்வார்.

மஹா பெரியவா ஒரு பத்து நிமிஷம் "தத்வம் தத்வம் விதேகாத்மா ஜன்ம ம்ருத்யு ஜராதிக:" அப்டீங்கிறதுக்கு விளக்கம் சொல்லி, அந்த தத்வம், அதை அறிந்தவன், தத்வவித். அந்த தத்வத்தை அறிந்தவன் தத்வமாகவே ஆகி விடுகிறான். ஏகாத்மா. அவனுடைய லக்ஷணம் என்னன்னா, ஜன்ம ம்ருத்யு ஜராதிக:, அப்டீன்னு, ஜன்மா, ம்ருத்யு,ஜரை இதெல்லாம் தாண்டி முக்தி அடைவான், அப்டீன்னு, ஒரு, பெரியவா, ஒண்ணுகொண்ணு, கோத்துண்டு போறது, அப்டீன்னு சொல்றா. அந்த மாதிரி, இதுல, ஒரு நாமமும் இருக்கு, நாமத்து மூலமா செய்திகளும் இருக்கு. சரித்தரமும் இருக்கு. "குணி நிஷ்ட குணாபிதானாம் ஸ்தவ:" அப்டீன்னு, "குணசாலிகளிடத்தில் உள்ள குணங்களை எடுத்து பேசுவதற்கு ஸ்தோத்திரம் என்று பெயர். இந்த சஹஸ்ரநாமம் நாம ஜபமும், அதுவே ஸ்தோத்ரமும் ஆக இருக்கு" அப்டீன்னு சொல்லியிருக்கா. அப்படி பகவானோட குணங்களை ரிஷிகள் சொன்ன, வேதத்துல இருக்கக் கூடிய நாமங்களை எடுத்து, பீஷ்மாசாரியாள் கோர்த்துக் கொடுத்துருக்கார்.

ஒரு தடவை வினோபா பாவே கிட்ட, இந்த விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத்திரம் கொஞ்சம் கடினமா இருக்கே, நீங்க சுலபமா ஒரு விஷ்ணு சஹஸ்ரநாமம் பண்ணி கொடுத்தேள்னா, எங்களுகெல்லாம், சௌகர்யமா இருக்குமே அப்டீன்னு அவருடைய சிஷ்யர்கள் கேட்டாளாம். அவர் சொன்னாராம், "இந்த பீஷ்மாசார்யாள் சொன்ன விஷ்ணு சஹஸ்ரநாமம், எத்தனையோ யுகக் கணக்காக, எல்லாரும் ஜபிச்சு, அந்த vibrations எல்லாம் ஆகாசத்துல இருக்கு. நாம ஒரு தடவை ஜபிச்சா, அந்த vibration னுடன் சேர்ந்து, நமக்கு, அதோட பலன் கிடைக்கும். அதுனாலா இன்னொரு விஷ்ணு சஹஸ்ரநாமம் பண்ணக்

கூடாது, நாம பீஷ்மர் பண்ணினதைத் தான் சொல்லணும்" அப்டீன்னு சொன்னாராம். அப்பேற்பட்ட மஹிமை வாய்ந்தது.

மஹா பெரியவா, தினமும் மூணு ஆவர்த்தியாவது சஹஸ்ரநாமம் சொல்லிடுவா. அவருடைய பிக்ஷையின் போது விஷ்ணு சஹஸ்ரநாமம் கட்டாயம் உண்டு. அதை தவிர, அந்த வண்டியை பிடிச்சுண்டு, நடந்து போயிண்டு இருக்கும்போது, நெத்தியில குட்டிண்டானா, சுக்லாம் பரதரம் சொல்லி விஷ்ணுசஹஸ்ரநாமம் ஆரம்பிக்கணும்.

ஸ்வாமிகள், இந்த பூர்வ பாகம், சுக்லாம் பரதரத்துல இருந்து, விஸ்வஸ்மை நம:, வரைக்கும் சொல்லிட்டு. இந்த "விஸ்வம் விஷ்ணுர் வஷட்கார: லேர்ந்து வனமாலீ ஸ்லோகம் முடிய, தினம் இருபத்தொரு ஆவர்த்தி, நாற்பதெட்டு நாள், சொல்லி, முடிக்கும் போது இந்த பலஸ்ருதி சொல்றது. அப்படி, அந்த ஸ்தோத்திர பாகத்தை நிறைய ஆவர்த்தி பண்றது, அப்படி ஒரு வழி சொல்வார்.

70-80 வருஷங்களுக்கு முன்னால் காமகோடி கோஷஸ்தானம் அப்டீன்னு ஒரு printing press வெச்சு மஹாபெரியவா, பக்தி க்ரந்தங்கள் எல்லாம், அவாளே ஸ்ரீ முகம் கொடுத்து, பெரியவாளே proof read பண்ணி பிரிண்ட் பண்ணா. அதோட பிரிண்டும் தனி அழகு, ஒரு தப்பு இருக்காது. அந்த press ல போட்டது, ஸ்வாமிகள் குடுத்த சஹஸ்ரநாமம் புஸ்தகத்தை வெச்சுண்டுதான் நான் கத்துண்டேன். ஸ்வாமிகள் கிட்ட நான் விஷ்ணு சஹஸ்ரநாமம் கத்துண்ட போது, ஒவ்வொரு நாமாவையும் தெளிவா சொல்லணும், அப்டீனுட்டு, "வேதா: ஸ்வாங்க: அஜித: கிருஷ்ண: த்ருட: ஸங்கர்ஷண: அச்யுத:" அப்படீன்னு படிச்சேன். இதை கேட்கறவாளுக்கு, வித்யாசமா இருக்கும். ஏன்னா, நமக்கு விறுவிறுன்னு, படிச்சுதான் பழக்கம். "யுகாதிக்ருத், யுகாவர்த:, நைகமாய:, மஹாசன: அத்ருஷ்ய: வ்யக்தரூபச்ச: ஸஹஸ்ரஜித், அனந்தஜித், இஷ்ட:, விசிஷ்ட: சிஷ்டேஷ்ட:, சிகண்டி இப்படி எழுதி படிச்சு, நான் அவர்கிட்ட ஒப்பிசேன். அதுக்கப்புறம், எப்பவும் போல பாராயணம் பண்றது. அப்படி ஒரு நாமாவளி கூட தப்பா சொல்லக் கூடாது என்று ஸ்வாமிகள் சொல்வார். அவ்வளவு perfection.

பயக்ருத் பயநாசன: அப்டீன்னு ஒரு இரண்டு நாமாவளி வரது. ஸ்வாமிகள், யாராவது, office ல, வேலை போயிடும்போல இருக்கு, குழந்தை பயப்படறா அப்டீன்னு எந்த பயத்தை சொன்னாலும், ஸ்வாமிகள் “பயத்தை கொடுக்கறதும், பயத்தைப் போக்கறதும், பகவான்தான். அம்மா வந்து குழந்தை எங்கயாவது, நெருப்பை தொடப் போறதேன்னு, அடுப்பை போயி தொட்டுறப் போறதுன்னு, பூனை மாதிரி கத்துவா. அந்த குழந்தை, ஓடி வந்து, உடனே, அம்மா காலை கட்டிண்டுடும். அந்த மாதிரி பகவான், தன்கிட்ட தன்னுடைய குழந்தைகளை வர வைக்கறதுக்க்காகதான், பயத்தை கொடுக்கறார். அவரே பயத்தை, நிவர்த்தியும் பண்ணுவார். பயக்ருத், பயநாசன:”, அப்டீனுட்டு, இதை சொல்லி, “சஹஸ்ரநாமத்தை, சொல்லுங்கோ. இல்லை, பத்து நிமிஷம் ராம நாமம் சொல்லுங்கோ. சரியா போயிடும்” அப்டீம்பார். அந்த பயம் சரியா போயிடும்.

இதே பயக்ருத் பயநாசன:, மஹாபெரியவாளும் சொல்லி இருக்கா. கௌதா லலித் மனோகர்ங்கிறவர், மஹா பெரியவாள பத்தி, தன்னோட அனுபவங்களை, சொல்லி இருக்கார். அதில் அவர் பெரியவாளுக்கு service பண்ணிண்டு இருக்கார். பெரியவா, அவா ஊருக்கு வந்து, தங்கியிருக்கும்போது, அவர் wife pregnant ஆ இருந்து, குழந்தை பொறக்கறது. குழந்தை, பொறக்கும்போது, cleft lift, அப்படீன்னு, உதடு வளைஞ்சு இருக்கு. அப்போ அவர் அதை சொல்லி வருத்தப் படறார். மஹாபெரியவா வந்து, பயக்ருத் பயநாசன:, அப்படீன்னு, பகவான்தான், பயத்தை கொடுக்கறார். பயத்தை போக்கறார். கவலை படாதேன்னு சொல்லி, அந்த காலத்துல plastic surgeonsலாம் கிடையாது. ரொம்ப கொஞ்சம் பேர் தான். யாரோ ஒருத்தர் வந்து, அதை சரி பண்ணி கொடுக்கறார். அந்த மாதிரி ஸ்வாமிகள், சொல்ற மாதிரியே பயக்ருத், பயநாசன: அப்டீன்னு, மஹா பெரியவாளும் சொல்லி இருக்கா. அப்டீங்கிறதை கேட்டபோது எனக்கு, ரொம்ப சந்தோஷமா இருந்தது.

பகவத் பாதாள், பாஷ்யத்துல, பலஸ்ருதி சொல்லிண்டே வரும்போது, ரோகார்த்தோ முச்யதே ரோகார்த்து, அப்டீன்னு, ரோகத்துல இருந்து விடுபடலாம், பணம் தேவை படரவாளுக்கு, பணம் கிடைக்கும். பிராமணனுக்கு,

வேதத்தின், முடிவான, ஞானம் கிடைக்கும். உபநிஷத் தத்வங்கள், அவனுக்குப் புரியும். ராஜா வெற்றி பெறுவான், எல்லாருமே, யார் இதை கேட்டாலும், அவா சந்தோஷத்தை அடைவா. அப்டீன்னு, இந்த மாதிரி பலஸ்ருதி சொல்லிண்டே வரும்போது, நடுவுல, த்வௌ: ஸ சம்த்ரார்க நக்ஷத்ரா கம் திஶோ பூர்மஹோததி: | வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதானி மஹாத்மன: ||

இந்த உலகம், ஆகாசத்துல இருந்து, சூர்யன், சந்திரன், நக்ஷத்ரங்கள் வரைக்கும், எல்லாமே, பகவானோட ஆணைப் படிதான், அங்க அங்க அது அது இருந்துண்டு இருக்கு என்று ஆரம்பிச்சு பகவானோட பெருமையா நாலு ஸ்லோகங்கள் இருக்கு. அதற்கு அப்பறம், திரும்ப பலஸ்ருதி, வர்றது. இதுக்கு, ஆதிசங்கரர், பாஷ்யத்துல சொல்றார். இந்த பலஸ்ருதில சொல்லப் பட்டவைகள், அதிசயோக்தி, exaggeration கிடையாது. இதெல்லாம் சத்யம், அப்டீங்கிறதை, emphasis பண்றதுக்காக, நடுவுல, அந்த பகவானோட பெருமை எப்படி பட்டதுங்கிறதை, பீஷ்மாசார்யாள் எடுத்து சொல்றார், என்கிறார்.

அதற்கப்புறம் இன்னும் கொஞ்சம் பலஸ்ருதி சொல்லி, “நதே யாந்தி பராபவம்” விஷ்ணு சஹஸ்ரநாமத்தை பாராயணம் பண்ணிண்டு, இருக்கறவா, எந்த ஒரு குறையும், அவமானமோ அவாளுக்கு கிடையாது. அப்படீன்னு, “நதே யாந்தி பராபவம்” அப்படீன்னு முடியறது. இது வரைக்கும், மஹாபாரதத்துல இருக்கற portion. அதற்கப்புறம், நம்ம South India ல, புத்திமான்களா இருக்கறதுனால, மேலும், அங்க அங்க புராணங்கள் ல இருந்து, எடுத்த சில அழகான ஸ்லோகங்களை சேர்த்து, அதெல்லாமும் சொல்லி, “ஸ்ரீ ராம ராமேதி ரமே ராமே மநோரமே | சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வரானனே || அந்த ஒரு பத்து ஸ்லோகங்களையும், சொல்லி “காயேன வாசா மனஸா இந்த்ரியைர்வா” அப்டீன்னு சொல்லி முடிக்கறா.

மஹாபெரியவா “தினமும் சந்த்யாவந்தனம் செய்த பின் விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்ல வேண்டும்” என்று சொல்லி இருக்கா. கேட்பதாலும், எல்லாருக்கும் க்ஷேமம் ஏற்படும் என்று சொல்லி இருக்கா.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

ஸ்ரீராம ஜனனம் ஸ்லோகங்கள்

ஸ்ரீராம நவமியன்று இந்த ஸ்லோகங்களை பாராயணம் செய்வது வழக்கம். நம் மனத்தினுள்ளும் தருமமும் சத்தியமும் வடிவமே ஆன ஸ்ரீ ராமர் பிறந்து, அஹங்காரம், காமம், குரோதம் போன்ற ராவணாதி ராக்ஷசர்களை வதம் செய்து நம் வாழ்வும் ராம மயமாக, இனிமையானதாக ஆக ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண பரத ஷத்ருக்ன ஹனுமத் சமேத ஸ்ரீராமசந்த்ர ஸ்வாமியை வேண்டுவோம்.

ततो यज्ञे समाप्ते तु ऋतूनां षट् समत्ययुः । ततश्च द्वादशे मासे चैत्रे नावमिके तिथौ ॥
नक्षत्रेऽदितिदैवत्ये स्वोच्चसंस्थेषु पञ्चसु । ग्रहेषु कर्कटे लग्ने वाक्पताविन्दुना सह ॥ ९
प्रोद्यमाने जगन्नाथं सर्वलोकनमस्कृतम् । कौसल्याजनयद्रामं सर्वलक्षणसंयुतम् ॥ १०
विष्णोरर्धं महाभागं पुत्रमैक्ष्वाकवर्धनम् । कौसल्या शुशुभे तेन पुत्रेणामिततेजसा ॥ ११
यथा वरेण देवानामदितिर्वज्रपाणिना । भरतो नाम कैकेय्यां जज्ञे सत्यपराक्रमः ॥ १२
साक्षाद्विष्णोश्चतुर्भागः सर्वैः समुदितो गुणैः । अथ लक्ष्मणशत्रुघ्नौ सुमित्राजनयत् सुतौ ॥
सर्वास्त्रकुशलौ वीरौ विष्णोरर्धसमन्वितौ । पुष्ये जातस्तु भरतो मीनलग्ने प्रसन्नधीः ॥ १४
सार्पे जातौ च सौमित्री कुलीरेऽभ्युदिते रवौ । राज्ञः पुत्रा महात्मानश्चत्वारो जज्ञिरे पृथक् ॥
गुणवन्तोऽनुरूपाश्च रुच्या प्रोष्ठपदोपमाः । जगुः कलं च गन्धर्वा ननृतुश्चाप्सरोगणाः ॥ १६
देवदुन्दुभयो नेदुः पुष्पवृष्टिश्च खाच्च्युता । उत्सवश्च महानासीदयोध्यायां जनाकुलः ॥ १७
रथ्याश्च जनसंबाधा नटनर्तकसंकुलाः । गायनैश्च विराविण्यो वादनैश्च तथापरैः ॥ १८
विरेजुर्विपुलास्तत्र सर्वरत्नसमन्विताः । प्रदेयांश्च ददौ राजा सूतमागधवन्दिनाम् ॥ १९
ब्राह्मणेभ्यो ददौ वित्तं गोधनानि सहस्रशः । अतीत्यैकादशाहं तु नामकर्म तथाकरोत् ॥ २०
ज्येष्ठं रामं महात्मानं भरतं कैकयीसुतम् । सौमित्रिं लक्ष्मणमिति शत्रुघ्नमपरं तथा ॥ २१
वसिष्ठः परमप्रीतो नामानि कृतवांस्तदा । ब्राह्मणान् भोजयामास पौरान् जानपदानपि ॥
अददाद्ब्राह्मणानां च रत्नौघममितं बहु । तेषां जन्मक्रियादीनि सर्वकर्माण्यकारयत् ॥ २३

वैदेही सहितं सुरद्रुमतले
हैमे महामंडपे
मध्ये पुष्पकमासने मणिमये
वीरासने संस्थितम् |
अग्रे वाचयति प्रभंजनसुते
तत्वं मुनिभ्य:परं
व्याख्यातं भरतादिभि: परिवृतं
रामं भजे श्यामलम् ||



श्री राम चन्द्राश्रित सदगुरूणां
पादारविन्दं भजतां नराणाम् |
आरोग्यं ऐश्वर्यं अनन्त कीर्ति:
अन्ते च विष्णो: पदमस्ति सत्यम् |